வித்தியா



உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
மட்டக்களப்பு கல்வி வலயம்

வலயக் கல்வி அலுவலகம்
மட்டக்களப்பு

2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியா

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
மட்டக்களப்பு கல்வி வலயம்

வலயக் கல்வி அலுவலகம்
மட்டக்களப்பு

2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகை விபரம்

- சஞ்சிகையின் பெயர்:
  வித்தியா
- Title of the Magazine :
  Viththiya
- சஞ்சிகை ஆசிரியர்:
  த. யுவராஜன், உ.க.ப (தமிழ்)
- Name of the Editor :
  D. Juwarajan, ADE (Tamil)
- வெளியீடு:
  வலயக் கல்வி அலுவலகம்,
  மட்டக்களப்பு.
- Published By :
  Zonal Education Office,
  Batticaloa.
- இதழ்:
  06
- Issue :
  06
- வெளியிடும் காலம்:
  2015 மார்கழி
- Published on :
  December 2015
- பக்கங்கள் :
  X + 90
- Pages :
  X + 90
- பிரதிகள் :
  200
- Copies :
  200
- அச்சுப்பதிப்பு :
  துர்க்கா அச்சகம்,
  கொக்குவில், மட்டக்களப்பு.
  065 2053060
- Printers :
  Thurkka Press, Kokkuvil,
  Batticaloa.
  065 2053060

இச்சஞ்சிகையில் இடம்பெறும் படைப்புக்களுக்கு அவற்றைப் படைத்த அவ்வப்படைப்பாளிகளே பொறுப்பாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின்

மகுட வாசகம்

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

மட்டக்களப்பு கல்வி வலயம்

தூர நோக்கு

சிறந்த அறிவும் திறனும் மனப்பாங்குமுடைய ஆளுமைமிக்க சமூகம்.

Vision

Personable Society with excellent knowledge, skill and attitude

பணிக்கூற்று

சிறந்த விளைதிறனுடனான பயனுள்ள கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கூடாகத் தரமானதும் தகுதியானதுமான ஆளுமைமிக்க சமூகத்தை உருவாக்கல்.

Mission

Creating a quality improved, capable and personable Society by initiating excellent, efficient and effective activities through teaching learning process.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலய கீதம்

இராகம் :–ஹிந்தோளம்
தாளம் :– ஆதி

அமுதத் தமிழும் கலையும் மிளிரும் உதயவாசல் மீதிலே
அழகும் வளமும் சேர ஒளிரும் மட்டு மா நகரிலே
அன்பு நலமும் அறிவும் திறனும் நாற்றிசையும் ஓங்கவே
அரிய சேவை நல்கும் மட்டு கல்வி வலயம் வாழ்கவே

மண்முனைப் பற்றினை மகிழ்வுடனே சேர்த்திடும்
மனமுவந்து ஏறாவூர்ப் பற்றினையும் அணைத்திடும்
மண்முனையின் வடக்கில் மையங்கொண்டு செங்கோலோச்சிடும்
மட்டக்களப்பு கல்வி வலயம் மாண்புடனே வாழ்கவே

கணனியுடன் கைவினையும் கலந்து ஒன்றாய் வளரவே
கலாசாரம் தொழில் நுட்பம் சிறந்து வளம் பெருகவே
மண்ணில் மட்டு மங்கை புகழ் ஞாயிறு என ஒளிரவே
முழுமனதாய் உழைக்கும் எங்கள் கல்வி வலயம் வாழ்கவே

ஆற்றல் மிகு நற்பணியை ஆசிரியர் நாட்டவே
அன்புடனே அதிகாரிகள் நாடி வழிகாட்டவே
ஏற்றமுடன் மாணவர்கள் நாளும் வெற்றி ஈட்டவே
அணைத்து ஆற்றுப்படுத்தும் மட்டு கல்வி வலயம் வாழ்கவே

வாவியுறை மீனினங்கள் மதுர இசை மீட்டிடும்
வங்கக்கடலலைக் கரங்கள் சேர்ந்து தாளம் போட்டிடும்
தேவி கலை மாதின் மேடை மட்டுநகர் மண்ணிலே
சேர்ந்து கலை வளர்க்கும் எங்கள் கல்வி வலயம் வாழ்கவே

இசை அமைத்தவர்:
செல்வி ரஜனி நடராஜா
ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் –
(அழகியற்கல்வி)

இயற்றியவர்:
திரு.எஸ்.அருளானந்தம்
(ஓய்வு பெற்ற அதிபர்)
மட் / மஞ்சந்தொடுவாய் பாரதி வித்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

வித்தியா - 2015

வித்தியா சஞ்சிகையின் பயணம் வெற்றியாக அமைய, பேருவகையோடு மனம் மகிழ்ந்து வாழ்த்துச் செய்தியை வழங்குகின்றேன்

நோக்கம் நிறைந்த பயணம், ஆக்கத்தை தரும். நோக்கம் அற்ற பயணம் ஏக்கத்தையும் தாக்கத்தையும் தரும். ஆதலால் நோக்கம் மிகவும் இன்றியமையாததொன்று என்பதை உள்வாங்கி உணர்தல் அவசியமாகின்றது. ஒருமுகமாய்ச் சிந்தித்தல் இங்கு தேவைப்படுகிறது. அவ்வாறு ஒருமுகமாய்ச் சிந்தித்துச் செயற்படும் கல்வி வலயங்களுள் ஒன்றாக மட்டக்களப்புக் கல்வி வலயம் திகழ்கிறது. இந்த வலயத்தின் வெளியீடாக மலரும் வித்தியா தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என்பது என் அவா. அது தொடர்ந்து வரும் என்பது என் நம்பிக்கை. காரணம் இது கடமையாகச் செய்யப்படுகிறது. கடமைக்குச் செய்யப்படவில்லை என்ற போக்கைக் கொண்டிருக்கின்றமையேயாகும்.

இச்சஞ்சிகையில் ஆசிரியர்கள், அலுவலர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள் எனப் பலரின் ஆக்கங்கள், பொருளடக்கமாயிருப்பதை அறியும் போது சஞ்சிகையின் கனதி பற்றி உணர்கின்றேன். "நமக்குள்ளே" என்றில்லாமல் "நமக்குள்ளும்" "நமக்கப்பாலும்" என்ற விரிசிந்தனையின் ஊடாக வெளிப்படுகின்ற தேடல் கவனத்துக்குரியதாகிறது.

"முறைப்படி திட்டமிட்டால் - அதைச் சரியாய்ச் செயற்படுத்தினால் - அதை உரியவாறு ஆய்வு செய்தால்- குறைகளை நிவிர்த்தி செய்தால் அது முழுமை பெறும் - பெறுமதி உறும்" என்பார்கள். இத்தொடரொழுங்கு யாவர்க்கும் தேவையானது. "வித்தியா" சஞ்சிகை அதை முன்னெடுக்கிறது. மேலும் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சஞ்சிகை ஆசிரியர் உள்ளிட்ட சஞ்சிகைக் குழுவினர்க்கு என் பாராட்டுக்கள்.

எம்.ரி.ஏ.நிசாம்

மாகாணக் கல்விப் பணிப்பாளர்

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்,

திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

நூலொன்று வெளிவரும்போது அது, குறித்த ஒரு துறை சார்ந்ததாக அமைகின்றது. ஆனால் சஞ்சிகை அவ்வாறில்லை; அது பல்துறை சார்ந்ததாக அமைகிறது. எனவே, பல்துறை சார்ந்த ஆக்கங்களைப் பெறவேண்டிய தேவை இருக்கின்றது. ஒரு சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்கள் மனிதரின் "மனோபாவத்தை வானத்தைப் போல் விரிவடையச் செய்ய வேண்டியனவாக இருக்கின்றன; தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்க" வேண்டியனவாக இருக்கின்றன. எனவே, அதற்கேற்ற விதமான ஆக்கங்களைத் தேட வேண்டியிருக்கிறது. அந்த வகையில் பல்வேறு நிலைப்பட்ட ஆக்கங்களைக் கொண்டாதாக வெளிவரும், "வித்தியா" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியாயிருக்கிறது.

பல்வேறு துறை சார்ந்த ஆக்கங்கள் இடம்பெறவேண்டுமென்பதால் அவற்றை உரியவர்களிடமும் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதுபோன்று உரிய காலத்திலும் பெறவேண்டியிருக்கிறது. ஆதலால் சஞ்சிகை ஆசிரியர் பெருஞ் சிரமத்தை எதிர்கொள்ளவேண்டியவராயிருக்கிறார். இது தவிர்க்க முடியாதது; ஆனால் தாங்கிக்கொள்ளக்கூடியது. அவ்வாறு தாங்கிக்கொண்டதால் சஞ்சிகை முழுமை பெற்றிருக்கிறது. துார நின்று பார்த்தால் தடைக்கற்கள் ; கிட்டப் போனால் படிக்கற்கள்.

இச்சஞ்சிகை, தொடங்கிய காலத்திலிருந்து தொடர்ச்சியாக வெளி வரவில்லை என்பது குறைதான். ஆனால் 2013 இலிருந்து 2014, 2015 எனத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் வெளிவருவது நிறைதான். இதற்குச் சஞ்சிகை ஆசிரியரின் அயராத முயற்சியும் காரணமாக அமைகிறது. அது தொடர்ந்து வெளிவரவேண்டும் என்பதும் அக்கறைதான்.

இச்சஞ்சிகையைச் சஞ்சிகையாக வெளிக்கொணரவேண்டும் என்பதில் அக்கறைகாட்டிய சஞ்சிகைக் குழுவிலுள்ளோர்க்குப் பாராட்டையும் அருமையானதொரு வாழ்த்துச் செய்தியை வழங்கிய மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு மனம் நிறைந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

க. பாஸ்கரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகைக் குழுச் செயலாளரின் சிந்தனையிலிருந்து....

எமது கல்வி வலயத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான வித்தியா சஞ்சிகை உங்கள் கரங்களில் மலர்கிறது.

இச் சஞ்சிகை வெளிவருவதற்காக அயராது எங்களை ஊக்குவித்து உந்துதலை வழங்கிய வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.க. பாஸ்கரன் ஐயா அவர்களுக்கும், எதனையும் மாறுபட்ட கோணத்தில் சிந்தித்து எங்கள் இயங்கு நிலையில் புதிய இரத்தத்தைப் பாய்ச்சிவிடும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.பொ.கோவிந்தராஜா ஐயா அவர்களுக்கும் சஞ்சிகைக் குழு சார்பாக நான் நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

அத்துடன் வித்தியா சஞ்சிகையின் ஆசிரியர் திரு.த.யுவராஜன் (உ.க.ப-தமிழ்) அவர்களது எழுத்தாளுமையும் கல்விசார் சிந்தனைகளுடான படைப்பாக்க முறைமையும் இவ்விதழின் உருவத்தை மட்டுமல்ல, உள்ளடக்கத்தையும் மேன்மேலும் உயரச் செய்துள்ளது. இச் சஞ்சிகைக்கான படைப்புக்களை மனமுவந்து ஈந்த அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் சஞ்சிகைக் குழுவின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

சி. ரவீந்திரன்.

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சித்திரம்)

வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சிகை ஆசிரியரின் எண்ண அலைகள்...

வித்தியா - 2015

சஞ்சிகை ஆசிரியராய் இருப்பது, ஒருவகைச் சுகம்; ஆனால் சஞ்சிகையை வெளிக்கொணர்வது என்பது ஒருவகைத் தவம். இந்தத் தவம் சரியாகச் செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே பலன். இங்கு பலன் கிடைத்துள்ளது. அதாவது சஞ்சிகை பிரசவமாகியுள்ளது. பிரசவத்தின் போது தாய் வலியைப் பொறுத்துக்கொள்கின்றாள். அதனால் அவளுக்கு அன்பான குழவி கிடைக்கிறது. சஞ்சிகைப் பிரசவத்தின் போது வலி பொறுத்துக்கொள்ளப்படுகிறது. அதனால் "வித்தியா" சஞ்சிகை உலாவி வருகிறது.

இதில் இடம்பெறும் ஆக்கங்கள் குறிப்பிட்ட படைப்பாளிகளின் ஓலங்கள் அல்ல; அவை அவர்களின் ஆளுமைக் கோலங்கள் ; ஞான சிருஷ்டிப்புக்கள். படித்துப்பாருங்கள் அவற்றின் அருமை விளங்கும்; அவர்தம் புலமை துலங்கும். பொதுவாக, தனிமனித எண்ணாங்கள் தனித்துவமாய் இருப்பதற்குப் பதிலாகத் தனித்துப்போயிருக்கின்றன. இதனால் போட்டியும் பொறாமையும். விளைவு - அழிவு. நாம் வாழும் பூமியில் நமக்கு அக்கறை இல்லை. அணு குண்டு தயாரிப்பு என்றும் ஜதரசன் குண்டு தயாரிப்பு என்றும் அழிவுக்கான பட்டியல் நீள்கிறது. இந்நிலைமை நீடித்தால் பூமி என்னும் கோள் அழியும் நாள் வெகுதொலைவில் இல்லை, ஆகவே மனித மனம் மாறவேண்டும். இதனை விளக்கும் விதத்தில் "மனித இனமும் புவியும்" என்னும் படைப்பு அமைந்திருக்கிறது. இது ஓர் எடுத்துக் காட்டு மட்டுமே. இவ்வாறு ஏனைய படைப்புக்களும் தம் இலக்கை நோக்கிப் பயணம் செய்கின்றன.

இவ்வாறாக அமைந்த "வித்தியா" சஞ்சிகையின் முன்னட்டை திரு.சி.ரவீந்திரன் அவர்களின் கைவண்ணம். அவருக்கேயுரிய பாணியில் அமைந்திருக்கிறது. இவர் இச்சஞ்சிகைக்குழுவின் செயலாளர் ஆவார். பொருளாளர் திரு.கு.கிருஷ்ணமூர்த்தி, அவர்கள் தன் பணியைச் சிறப்பாகச் செய்துள்ளார். வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.க.பாஸ்கரன் அவர்கள் சஞ்சிகைக் குழுவின் தலைவர் ஆவார் விரிந்த எண்ணத்துடன் பரிந்துரைகளைச் செய்து வழிகாட்டியவர்.

இவ்வாறு தலைவர், செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட சஞ்சிகை குழுவினரின் ஒத்துழைப்பைப் பெரிதாய் நினைத்துப் பாராட்டி நிறைவுசெய்கின்றேன்.

த.யுவராஜன்
உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)
வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வித்தியா" சஞ்சிகைக் குழு - 2015

தலைவர் : திரு.க.பாஸ்கரன், வலயக் கல்விப் பணிப்பாளர்

செயலாளர் : திரு.சி.ரவீந்திரன், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சித்திரம்)

பொருளாளர் : திரு.கு.கிருஷ்ணமூர்த்தி, சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (வழிகாட்டலும் ஆலோசனையும்)

உப தலைவர் : திரு. ந.கணேசலிங்கம், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சமூக விஞ்ஞானம்)

சஞ்சிகை ஆசிரியர் : திரு.த.யுவராஜன், உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)

ஏனைய உறுப்பினர்கள்

திரு.வொ.கோவிந்தராஜா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்)

திருமதி G.பார்த்தீபன் , கணக்காளர்

திரு.க.சந்திரகுமாரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்)

திரு.வா.லவக்குமார், உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி)

திருமதி கி.பிரேமகுமார், பதவிநிலை உதவியாளர்

திரு.ப.சர்வேஸ்வரன், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்)

திரு. கு.கந்ததாஸ், முகாமையாளர், கணனி வள நிலையம்

திரு. அ. ஜெயநாதன், தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்.

திரு.T.அருணேந்திரன் தொழினுட்ப உத்தியோகத்தர்

திரு. த.மேகராசா, அபிவிருத்தி உத்தியோகத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) :

திரு.ப.சர்வேஸ்வரன், திரு.பொ. கோவிந்தராஜா, திரு.சி.ரவீந்திரன், திரு.க.பாஸ்கரன், திரு.கு. கிருஷ்ணமூர்த்தி, திரு.த.யுவராஜன், திரு.வா.லவக்குமார், திருமதி கி.பிரேமகுமார்

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) :

திரு.ந.கணேசலிங்கம், திரு.த. மேகராசா, திரு.அ.ஜெயநாதன்

புகைப்படத்தில் இல்லாதவர்கள் :

திருமதி G. பார்த்தீபன், திரு.K.சந்திரகுமாரன், திரு.G. கந்ததாஸ், திரு.T.அருணேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே

♣ சஞ்சிகை விபரம்	ii
♣ மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் மகுட வாசகம்	iii
♣ வலய கீதம்	iv
♣ கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி	v
♣ மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி	vi
♣ சஞ்சிகைக் குழுச் செயலாளரின் சிந்தனையிலிருந்து	vii
♣ சஞ்சிகை ஆசிரியரின் எண்ண அலைகள்	viii
♣ "வித்தியா" சஞ்சிகைக் குழு - 2015	ix
♣ உள்ளே	x
♣ சஞ்சிகைக் குழுப் புகைப்படம்	
♣ கொலஸ்ரோல் பற்றிய ஓர் அறிமுகம்	1
♣ ATRIBUTE	4
♣ தவணைப் பரீட்சைகளுக்கு விடயத்திறன் (பரம்பல்) அட்டவணை தயாரித்தல்	5
♣ Young Child And Language Learning	13
♣ The Introduction of	16
♣ ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு	20
♣ சுக வாழ்வுக்கு ஓர் செய்தி	23
♣ நித்திலமாம் தமிழே	24
♣ ஒரு வடையும் பல நரிகளும்	25
♣ "பசுமைப் புரட்சி" விவசாயத்தில் ஏற்படுத்திய தாக்கம்	26
♣ இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு - மறுசீரமைப்பு	28
♣ பாரதியாரின் சுயசரிதை : சில அவதானங்கள்	30
♣ மனித இனமும் புவியும்	35
♣ மாணவர் தமது வகுப்பறைக் கற்றலில் பின்தங்குவது ஏன்?	42
♣ நான் பேசும் பேச்சு	46
♣ இந்திராணி புஷ்பராஜாவின் குயிற் குஞ்சுகள்	48
♣ தவணைப் பரீட்சைகளில் தவறிய சில உண்மைகள்	54
♣ ரசிப்பதற்கு மட்டுமல்ல; வாழ்விற்கும் இசை வேண்டும் - இசை மருத்துவம்	59
♣ பாரதியார் சுயசரிதையில் உவமைகள் இரண்டு	61
♣ கற்பித்தல் ஒழுக்கம்	66
♣ பாடசாலை நிதி முகாமைத்துவத்தில் ஆவணப்படுத்துதல்	71
♣ பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி	79
♣ மட்டக்களப்புக் கல்வி வலய ஆசிரியர் மத்திய நிலையச் செயற்பாடுகள் - 2015	85
♣ அரச திணைக்கள தாபன வேலை	88

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலஸ்ரோல் பற்றிய ஓர் அறிமுகம்

ப.சர்வேஸ்வரன்
ஆசிரியர் கல்வியில் கலை முதுமாணி
ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்)
வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

தற்போது "கொலஸ்ரோல்" (Cholesterol) எனும் விடயம் எல்லோராலும் பேசப்பட்டுவரும் ஒரு முக்கிய காரணியாக அமைந்துள்ளது. அதிகளவு கொலஸ்ரோலினை எமது உடலானது தொகுத்துக்கொள்கின்றது. எனினும் ஒரு பகுதி கொலஸ்ரோல் நாம் உண்ணும் உணவின் மூலமும் எமது உடலிற்குக் கிடைக்கின்றது. முட்டை, பட்டர், ஈரல், சிலவகைக் கடலுணவுகள், பாலுணவுப் பொருள்கள் போன்றவை மூலமும் எமக்குக் கொலஸ்ரோல் கிடைக்கின்றது.

கொலஸ்ரோல் அதிகரிக்கும் நிலையை ஒரு குருதிநோயாகக் கொள்ளாதபோதிலும் இதன் மூலமாக குருதி தொடர்பான ஏனைய நோய்கள் உருவாகின்றன என்பது கவனத்துக் குரியது. குருதிக் கலனினுள் கொலஸ்ரோல் படிவதனால் பல்வேறு குருதி நோய்கள் தோன்றுகின்றன. இதயத்திற்குக் குருதியை வழங்கும் முடியுரு நாடிகளில் கொலஸ்ரோல் படிவதனால் மாரடைப்பு ஏற்பட்டு மரணம் சம்பவிக்கின்றது. மேலும் கொலஸ்ரோல் நிலைமைகளைக் கண்டறிவதற்குக் குருதியானது (Blood) பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது.

கொலஸ்ரோல் என்பது ஈரலினால் தொகுக்கப்படும் ஓர் இலிப்பிட்டு (Lipid) ஆகும். இது மனிதனின் உடற்றொழிற்பாட்டிற்கு இன்றியமையாததொன்றாகும். அதாவது கலங்களின் கலமென்சவ்வு ஆக்கத்திற்கும் அதன் பராமரிப்பிற்கும் கொலஸ்ரோல் அவசியமாகும். குடல் பகுதிகள், அதிரீனல் சுரப்பி, இனப் பெருக்க அங்கங்கள் போன்ற இடங்களிலும் அதிகளவில் தொகுக்கப் படுகின்றது. கொலஸ்ரோலின் மூலக் கூற்றுச் சூத்திரம் $C_{27}H_{45}OH$ ஆகும்.

எமது உடலில் பதினெட்டு வெவ்வெறு வகையான கொலஸ்ரோல்கள் காணப்படுகின்றன. இவற்றில் பெரும்பான்மையானவை உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியவை. சில நன்மையானவை. கொலஸ்ரோலானது நீரில் கரையாது. எனவே குருதி மூலம் இலிப்போ புரத மூலக்கூறாகவே கடத்தப்பபடும். இவை சிக்கல்களாக (Complex) அல்லது சேர்வைகளாகக் காணப்படும். ஒரு இலிப்போ புரத மூலக்கூறானது இலிப்பிட்டையும் புரதத்தையும் கொண்டிருக்கும்.

3 வகையான இலிப்போ புரதங்கள் காணப்படுகின்றன.

(i) குறைந்த அடர்த்தியுடைய இலிப்போ புரதம் (LDL - Low Density Lipoprotein)

(ii) உயர் அடர்த்தியுடைய இலிப்போ புரதம் (HDL - High Density Lepoprotein)

(iii) ட்றைகிளிசரைட் (Trigly Cerides)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த அடர்த்தியுடைய இலிப்போ புரதம் கெட்ட கொலஸ்ரோல் (Bad Cholesterol) என அடிக்கடி அழைக்கப் படுகின்றது. இது ஈரலிலிருந்து கலங்க ளுக்குக் கொலஸ்ரோலினைக் காவிச் செல்கின்றது. அளவுக்கதிமாகக் காவிச்சென்றால் கலங்களுக்கு அதிகளவில் பாவனைக்கு வழங்கப்படும். பாவிக்கப்பட்டு மேலதிகமாகவுள்ள மீதி LDL நாடிக்குழாய்களின் சுவர்களில் படிவுறும். இதன் சேமிப்பு அதிகரிக்கும் போது உடலிற்குத் தீங்கை ஏற்படுத்தும்.

உயர் அடர்த்தியையுடைய இலிப்போ புரதம் பொதுவாக நல்ல கொலஸ்ரோல் (Good Cholesterol) என அழைக்கப்படுகின்றது. இவை உடலிற்கு நன்மை பயக்கின்றன. குடல் வாய்ச்சுவர், ஈரல் போன்றவற்றினால் உற்பத்தியாக் கப்படுகின்றன. இவை, குருதி நோய்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதாக வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். இதன் செயற்பாடுகள் LDL இன் செயற்பாட்டிற்கு எதிரானது. HDL ஆனது உடற்கலங்களில் இருந்து தீங்கான கொலஸ்ரோலை அகற்றிப் பின்னோக்கி ஈரலிற்குக் கொண்டு செல்கின்றது. இதன் பின்னர் ஈரலானது அவற்றை உடைத்து உடலில் இருந்து கழிவாக வெளி யேற்றுகிறது. ஐந்து வயதில் இருந்தே நாடிகளில் கொலஸ்ரோல் படிய ஆரம்பிப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

LDL ஆனது நாடிகளின் சுவர்களில் ஒட்டிக்கொள்கின்றது. HDL அவ்வாறு ஒட்டுவதில்லை. அதற்குப் பதிலாக நாடிகளின் சுவர்களில் ஒட்டும் LDLஐ அகற்றுகின்றது.

ட்றைகிளிசரைட் பொதுவாக இயற்கையில் காணப்படும் இலிப்பிட்டுக் களாகும். இது கொலஸ்ரோலுடன் இணைந்து திரவவிழைய இலிப்பிட் டுகளை (Blood Fat) உருவாக்குகின்றது. உணவில் உள்ள கொழுப்பில் இருந்தும், காபோவைதரேற்றில் இருந்தும் உருவாகின்றது. நாம் உண்ணும் உணவிலுள்ள காலோரிகள் பாவிக்கப் படாத வேளையில் எமது இழையங்களால் உடனடியாக ட்றைகிளிசரைட்டாக மாற்றப்பட்டுக் கொழுப்பு, கலங்களில்



சேமிக்கப்படுகின்றது. நாம் சக்தியைப் பிறப்பிக்கும் உணவுகளை உட்கொள்ளாத வேளைகளில் எமக்குத் தேவையான சக்தியைப் பெற்றுக்கொள்வதற்காக இவை கலங்களில் இருந்து விடு விக்கப்படும்.

கொலஸ்ரோலானது பின்வரும் தொழில்களை மேற்கொள்கின்றது.

- கலமென்சவ்வின் வெளிப்படையின் கட்டமைப்பு ஆக்கமும் பராமரிப்பும்.
- கலமென்சவ்வின் ஒருபங்கீடு புகவிடும் தன்மையைத் தீர்மானித்தல்.
- இலிங்க ஓமோன்களின் உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ (அந்திரஜன், ஈஸ்ரஜன்)

◆ ஈரலிலிருந்து பித்தம் உற்பத்தியாதல்.

◆ சூரிய ஒளியை விற்றமின் Dஆக மாற்றுதல்.

◆ நரம்பு நார்களின் காவலி

◆ கொழுப்பில் கரையும் விற்றமின்களின் அனுசேபத் தொழிற்பாட்டிற்கு (விற்றமின் A, D, E, K)

கொலஸ்ரோலின் செறிவு அதிகரிப்பதால் உடலில் ஏற்படும் அபாயகரமான விளைவுகள்

◆ நாடிகள் ஒடுக்கமாதல்(Atherosclerosis)

◆ உயர்முடியுரு இதயநோய்

◆ மாரடைப்பு (Heart Attack)

◆ அஞ்சைனா (Angina)

இவற்றைத் தடுக்கும் முறைகளாகப் பின்வரும் செயற்பாடுகளைக் குறிப்பிட முடியும்

◆ வாழ்க்கை முறைகளை மாற்றியமைத்தல்.

◆ நிறை அதிகரிப்பைக் குறைத்தல்.

◆ மன அமைதி.

◆ நிரம்பிய கொழுப்புணவுகளைத் தவிர்த்து நார்ப் பொருள்களடங்கிய தாவர உணவுகளை உண்ணல்.

◆ தினமும் இரவில் 8 மணித்தியாலம் நித்திரை செய்தல்.

◆ அற்கோலைத் தவிர்த்தல், புகைத்தலை நிறுத்துதல்.

◆ யோகாசனப் பயிற்சிகளில் ஈடுபடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A TRIBUTE

On behalf of the teachers of English in the Batticaloa District, I wish to dedicate this poem in honour of late Mr.S.Sarawanabawan(ADE- English) Who rendered a Yeoman service to the Society in Batticalo.

We miss you

Sir We miss the chiming bells at our gates,
And the deeds of Kindness infringed in our hearts
Rejoice our minds your personality,
A Sincere person with versatility,
What not we learn,
All from your barn..
Never you showed any difference,
Abundance in amount in your assistance,
Bow our heads in respect,
A Valiant effort in all aspect.
Wave our hands in salute,
A humble dedication of tribute,
Non dwelled here with such attitude,

By
K.KULENTHIRAN
B.A.in Social Sciences
RESC. Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவணைப் பரீட்சைகளுக்கு
விடயத்திறன் (பரம்பல்) அட்டவணை தயாரித்தல்

நல்லதம்பி கணேசலிங்கம்
B.Com, PGDE
ஆசிரிய ஆலோசகர் (சமூக விஞ்ஞானம்)
வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

அறிமுகம்

தவணை இறுதிப் பரீட்சைகளின் போதும் ஆண்டிறுதிப் பரீட்சைகளின் போதும் பாடசாலை மாணவர்களின் மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்காக வினாப்பத்திரங்களைத் தயாரிக்கும் போதும் விடயத்திறன் (பரம்பல்) அட்டவணை பயன்படுத்தப்படுவது பயனுள்ளதாக அமையும். பாடப்பரப்பு, பாடவேளை, பாடவிடயங்களின் முக்கியத்துவம் என்பவற்றுக்கேற்ப வினாக்களின் எண்ணிக்கை, பரம்பல் என்பவற்றைச் சமப்படுத்த உதவும். விடயத்திறன் அட்டவணை பற்றிப் பேசப்படும் போது இதில் பிரயோகிக்கப்படும் சொற்பதங்களுக்கு அளிக்கப்படும் கருத்துக்களில் தெளிவுபெறுதல் வேண்டும்.

(A) மதிப்பீடு

பாடசாலையில் கற்றல் - கற்பித்தல் - மதிப்பீட்டுச் செயற்பாடுகள் முக்கியமான இடத்தினை வகிக்கின்றன. பாடசாலை உள்ளக மதிப்பீடுகள் மூலம் ஆசிரியர்கள் மாணவர்களை மதிப்பிடுவதுடன் ஆசிரியர்கள் தம்மைப் பற்றியும் மதிப்பிடும் செயற்பாடுகளும் நிறைவேற்றப்படுகின்றன. ஒருவர் தம்பால் ஆற்றப்படுகின்ற பணிகள் எந்தளவிற்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை அறிவதன் மூலம் அம்முயற்சியில் அக்கறையுடனும் முயற்சியுடனும் உற்சாகத்துடனும் செயற்பட வாய்ப்பளிக்கின்றது.

மதிப்பீடு பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்படினும் மதிப்பீட்டுக் கருவியைச் சிறந்த முறையில் ஆக்குதல் அவசியமாகும். ஒரு சிறந்த மதிப்பீட்டுக் கருவியானது இரண்டு இயல்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும். நம்பகம்(உறுதி), தகுதி ஆகியவை அவ்வியல்புகளாகும்.

(B) நம்பகம் அல்லது உறுதி (Reliability)

ஒரு மதிப்பீடு உயர் தகுதியுடையதாக இருக்க அது நம்பகத் தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டும். ஒரு மதிப்பீட்டுக் கருவியானது எதனை அளவிட ஆக்கப்படுகின்றதோ அதனை எந்தளவிற்குத் திருத்தமாக அளவிடுகின்றது என்பது அதன் நம்பகம் அல்லது உறுதி என்னும் பதம் குறிக்கின்றது. ஏதும் ஒரு பண்பை ஓர் அளவீட்டுக் கருவியால் அளவீடு செய்யும் போது எத்தனை முறை அளவிட்டாலும் அப்பண்பில் எவ்வித வேறுபாடும் இல்லாதிருப்பின் நமது அளவீட்டுக் கருவி நம்பத் தகுந்தது எனலாம். ஒரு பரீட்சையின் மூலம் மாணவனைப் பரீட்சித்துப் பெறப்படும் புள்ளிகளே மீண்டும் அதே பரீட்சையில் அல்லது அதற்குச் சமவளவான பரீட்சையை நடாத்தும் போது பெறப்படின் அப்பரீட்சை உருப்படிகள் நம்பகமானவை எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பகத்தைத் துணியப் பல்வேறு முறைகள் உள்ளன. அளவீட்டுக் கருவியில் வினாக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அதன் நம்பகத் தன்மை அதிகரிக்கும். இவ்வாறே பரீட்சையின் கடினத் தன்மையைக் குறிப்பிட்ட வீச்சினுள் அமைத்தல், வினாக்கள் ஒன்றிலொன்று தங்கியிராது அமைத்தல், வினா அமைப்புப் போன்ற காரணிகளால் நம்பகத் தன்மையை அதிகரிக்கலாம்.

"ஒரு மீற்றர் கோலினால் மேசையொன்றின் நீளத்தை எத்தனை பேர் எத்தனை முறை அளந்தாலும் நீளத்தில் எத்தகைய வேறுபாட்டையும் காணமுடியாது. இவ்வாறே ஒரு பண்பை ஓர் அளவீட்டுக் கருவியால் அளவீடு செய்யும் போது எத்தனை முறை அளவிட்டாலும் அப்பணியில் எவ்வித வேறுபாடுகளும் இல்லாதிருப்பின் அவ்வளவீட்டுக் கருவி நம்பகத் தன்மையுடையதாகும்.

(C) தகுதி (Validity)

ஒரு சிறந்த அளவீட்டுக் கருவியின் இயல்புகளுள் மிகப் பிரதானமானது தகுதியாகும். ஒரு பரீட்சை எதனை அளவிடுவதற்கு ஆக்கப்பட்டதோ அதனை எந்தளவிற்கு அளவிடுகின்றது என்பதே அதன் தகுதியாகும். உதாரணமாக, கணித பாடத்தில் மொழித் தேர்ச்சியை அளவிட எத்தனிக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் நம்பகத் தன்மையுடையதாகவும் தகுதி கொண்டதாகவும் வினாத்தாள் ஒன்றைத் தயாரிப்பதற்கு விடயத்திறன் அட்டவணை பெரிதும் உதவுகின்றது. இத்தகைய விடயத்திறன் அட்டவணையை அமைக்கும் முறை மிக முக்கியமானதாகும். இவ்வட்டவணை உரிய முறையில் அமைக்கப்படின் அட்டவணையில் குறிப்பிடப்படும் இலக்குகள் தெளிவானதாகவும் யாவர்க்கும் ஒரே கருத்தைத் தெரிவிப்பதாகவும் அமைதல் வேண்டும்.

இலக்குகள் யாவும் அறிவுசார் ஆட்சி, எழுச்சிசார் ஆட்சி, உள இயக்கம் சார் ஆட்சி ஆகிய மூன்று வகையினுள் உள்ளடக்கப்படுகின்றன. இவற்றுள் அறிவுசார் ஆட்சி ஏனைய யாவற்றிலும் முக்கியமானதாகும். புளூம், கிராத்வெல் என்பவர்கள் அறிவுசார் ஆட்சியில் கல்வியின் இலக்குகளை, அறிவு, கிரகித்தல், பிரயோகம், பகுப்பு, தொகுப்பு, மதிப்பீடு எனவும் மேலும் பல துணைப் பிரிவுகளாகவும் வகுத்துள்ளனர்.

கற்றல் விடயங்களை நினைவிலிருத்தி, ஞாபகம் போன்ற எளிய செயற்பாடுகள் முதல் கிரகித்தல், பகுத்தல், தொகுத்தல், பிரச்சினைகள் தீர்த்தல் போன்ற சிக்கலான உளத்தொழிற்பாடுகள் வரை அறிவுசார் ஆட்சியில் அடங்கும்.

எழுச்சிசார் ஆட்சி என்பது கற்றலின் விளைவாக ஒருவரிடம் ஏற்படும் புதிய மனப்பாங்கு, விருப்பு, வெறுப்பு, விழுமியங்கள், இரசனை, நம்பிக்கைகள், மனவெழுச்சி, சமூகமயப்படுத்தல் என்பன இதனுள் அடங்கும். உளத்துடன் தொடர்புபட்டதாக, உள்ளார்ந்த இயல்புகளாக இவை வளர்ச்சியடைவதால் வெளிவாரியாக இதனை அறிதல் கடினமாகும்.

உள இயக்கம்சார் ஆட்சி என்பது உடலுடன் தொடர்புடையதாகும். தசைநார்கள் இயங்கும் திறன், பொருள்கள், கருவிகளைக் கையாளுதல், நரம்புத் தொகுதிகளின் பொருத்தப்பாட்டுத் தன்மை என்பன இதனுள் அடங்கும்.

அறிவுசார் ஆட்சியில் கல்வியின் இலக்குகளான அறிவு என்பது தகவல்களை மீட்டறியும் திறன் ஆகும். விளக்கம் அல்லது கிரகிப்பு என்பது குறித்தவொரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ளும் திறன். அதாவது மாணவன் கற்ற விடயத்தைத் தனது சொந்த வசனத்தில் எழுதுதல், சுருக்கி எழுதுதல், அதன் பொருளை விளக்குதல் போன்ற நடத்தைகளைக் குறிக்கும்.

பிரயோகம் என்பது மாணவன் கற்றுள்ள விதிகள், முறைகள், கொள்கைகள், பொதுமைக் கருத்துக்கள் என்பவற்றைப் புதியவொரு பிரச்சினையை விடுவிப்பதற்குப் பயன்படுத்துவது எனலாம். இது, மாணவன் கணிதச் சூத்திரத்தை கேட்கும் போது வாய்மொழியாகக் கூறுதல், எழுதிக்காட்டுதல் என்பதோடு அதனை உபயோகித்து விடை தெரியாத ஒரு பிரச்சினைக்கு விடை காண்பதற்கு முடியுமாயிருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முழு அமைப்பைப் பகுதிகளாக்குவது அல்லது பிரித்துத் தனித்தனியாகக் கூறுகளாக்குவது "பகுப்பு" எனலாம். இது ஒரு முழு அமைப்பின் பல்வேறு பகுதிகளை அடையாளம் காணல், அவை ஒவ்வொன்றுக்குமிடையே தொடர்புகளைக் காணல், அவை ஒழுங்கமைக்கப்பட்டுள்ள விதத்தினை விளங்கிக்கொள்ள முயல்தல் என்பனவாகும்.

பல்வேறு பகுதிகளை ஏதோ ஒருவகையான தொடர்புகளைக்கொண்டு முழுமையான ஒன்றைக் கட்டியெழுப்பும் செயன்முறையைக் குறிப்பது "தொகுப்பு" எனலாம். இது பகுத்தலைவிடக் கடினமான ஒரு சிந்தனைத் தொழிற்பாடாகும். ஒரு கட்டுரையை எழுதுதல், கவிதையை இயற்றுதல் என்பன இதனுள் அடங்கும்.

இறுதியான மதிப்பீடு என்பது ஏதோவொன்றின் உண்மை நிலை எவ்வாறுள்ளது என்பதைச் சீர்தூக்கிப் பார்த்தல் எனலாம். ஒன்றின் பெறுமதியை உள்வாரியாக அல்லது வெளிவாரியாக மதிப்பீடுசெய்ய முடியும். கருத்துள்ள ஒரு மனித நடவடிக்கையின் இறுதியில் அதன் வெற்றி எத்தகையது என்பதைத் தீர்மானிக்கின்ற செயன்முறை மதிப்பீடாகும்.

(D) அமைப்பு

தவணை இறுதிப் பரீட்சை, அல்லது ஆண்டிறுதிப் பரீட்சைக்கு விடயத்திறன் அட்டவணை ஒன்றைத் தயாரிப்பது எப்படி என ஆராய்வோம். முதலில் குறித்த காலத்தில் கற்பிக்கப்பட வேண்டிய பாடப் பரப்புக்கள் அட்டவணைப்படுத்தப்பட வேண்டும்.

I.

அலகு	பாடவிடயம்	பாடவேளை
1	வரலாறு பயில்வதற்குரிய மூலாதாரங்கள்	05
2	இலங்கையில் குடியேற்றங்கள் தாபிக்கப்படல்	07
3	இலங்கையில் அதிகார வளர்ச்சி	12
4	இலங்கையின் பண்டைய சமூகம்	12
5	இலங்கையின் புராதன விஞ்ஞானமும் தொழினுட்பமும்	18
6	வரலாற்று அறிவும் அதன் நடைமுறைப் பிரதியீடும்	10
7	உலர் வலய பண்டைய நகரங்களின் வீழ்ச்சி	06
8	கண்டி இராசதானி	08
9	ஐரோப்பிய மறுமலர்ச்சி	06
10	இலங்கையும் மேலைத் தேசத்தவரும்	06
	மொத்தப் பாட வேளை	90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II.வினாக்ககளின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்.

மேற்படி வகுப்புக்களுக்கான வினாத்தாள் 40 பல்தேர்வு வினாக்களையும் 08 கட்டமைப்பு வினாக்களையும் கொண்டதாக அமைக்கப்படல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டதாகக் கொள்வோம். இதனை அடுத்து, பரீட்சை வினாக்கள் பற்றிப் பின்வரும் விடயங்களைத் தீர்மானிக்க வேண்டும்.

அ. பல்தேர்வு வினாக்கள் எப்பாடப்பரப்புக்களில் அமையும்?

ஆ. ஒவ்வொரு வினாவும் எந்தத் திறன் மட்டத்தில் அமைய வேண்டும்? (அறிவு, கிரகித்தல், பிரயோகம், உயர்)

இவ்வாறே கட்டமைப்பு வகையிலான வினாக்களும் எப்பாடப் பரப்புக்களில் அமைய வேண்டும் வினாக்களின் திறன் மட்டம் என்பனவும் தீர்மானிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு பாடப்பரப்பிலும் (தலைப்பிலும்) எத்தனை வினாக்கள் எப்பாடப்பரப்பில் அமைய வேண்டும் என்பதுடன் வினாக்களின் திறன் மட்டம் என்பனவும் கவனத்தில்கொள்ளப்படவேண்டும்.

(அ) ஒவ்வொரு விடயப் பரப்பையும் கற்பிக்க ஒதுக்கப்பட்ட நேரம்.

(ஆ) ஒரு விடயப் பரப்பு அப்பாடத்தின் ஏனைய பாடத் தலைப்புக்களுக்கும் வேறு பாடங்களுக்கும் எந்தளவு பிரயோகிக்கக்கூடும் என்ற அடிப்படையில். (அது பாடப்பரப்பின் முக்கியத்துவம்)

(இ) கடந்தகால வினாப்பத்திரங்களில் உள்ள பாடத்தலைப்பு வினாக்களின் எண்ணிக்கை அடிப்படை.

ஒவ்வொரு விடயப் பரப்பையும் கற்பிக்க ஒதுக்கப்பட்ட நேரத்தின் அடிப்படையில் வினாபத்திரமொன்றை நாம் தயாரிப்பதாக எடுத்துக் கொள்வோம்.

III. இதற்காக நாம் கீழ் கண்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அலகு	பாடவிடயம்	பாட வேளை	நிறை	நூற்று வீதம்
1	வரலாறு பயில்வதற்குரிய மூலாதாரங்கள்	05	5x100/90	5.6
2	இலங்கையில் குடியேற்றங்கள் தாபிக்கப்படல்	07	7x100/90	7.7
3	இலங்கையில் அதிகார வளர்ச்சி	12	12x100/90	13.5
4	இலங்கையின் பண்டைய சமூகம்	12	12x100/90	13.5
5	இலங்கையின் புராதன விஞ்ஞானமும் தொழினுட்பமும்	18	18x100/90	20.0
6	வரலாற்று அறிவும் அதன் நடைமுறைப் பிரதியீடும்	10	10x100/90	11.1
7	உலர் வலய பண்டைய நகரங்களின் வீழ்ச்சி	06	6x100/90	6.6
8	கண்டி இராசதானி	08	08x100/90	8.8
9	ஐரோப்பிய மறுமலர்ச்சி	06	06x100/90	6.6
10	இலங்கையும் மேலைத் தேசத்தவரும்	06	06x100/90	6.6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV. வினாக்களின் எண்ணிக்கையைக் காட்டும் அட்டவணை

அலகு	பாடவிடயம்	பகுதி - 1 வினாக்களின் எண்ணிக்கை	பகுதி - 2 வினாக்களின் எண்ணிக்கை
1	வரலாறு பயில்வதற்குரிய மூலாதாரங்கள்	6x40/100-2	6x8/100-0.48
2	இலங்கையில் குடியேற்றங்கள் தாபிக்கப்படல்	7x40/100 - 3	7x8/100-5.6
3	இலங்கையில் அதிகார வளர்ச்சி	13x40/100=6	13x8/100=1.04
4	இலங்கையின் பண்டைய சமூகம்	13x40/100=6	13x8/100=1.04
5	இலங்கையின் புராதன விஞ்ஞானமும் தொழினுட்பமும்	20x40/100=8	20x8/100=1.6
6	வரலாற்று அறிவும் அதன் நடைமுறைப் பிரதியீடும்	11x40/100=5	11x8/100=0.88
7	உலர் வலய பண்டைய நகரங்களின் வீழ்ச்சி	6x40/100=2	6x8/100=0.48
8	கண்டி இராசதானி	8x40/100=4	8x8/100=0.64
9	ஐரோப்பிய மறுமலர்ச்சி	6x40/100=2	6x8/100=0.48
10	இலங்கையும் மேலைத் தேசத்தவரும்	6x40/100-2	6x8/100-0.48
		40	08

➢ **வசதிக்கேற்ப வினாக்களின் எண்ணிக்கையைச் சிறிதளவு மாற்றிக்கொள்ளலாம்.**

இவ்வாறு வினாக்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டவுடன் இவ்வினாக்கள் எந்தத் திறன் மட்டத்தில் இருக்கவேண்டுமென முடிவு எடுக்கப்படவேண்டும்.

இதற்கு புளூமின் திறன் மட்டங்களை இவ்விடத்திற்கு பொருந்துமாறு சிறு மாற்றங்களைச் செய்ய வேண்டும். வினாத்தாள் 1இல் உள்ள 40 வினாக்களில்

- ★ அறிவு மட்ட வினாக்கள் (40%) = 15,
- ★ கிரகித்தல் மட்ட வினாக்கள் (30%) = 12,
- ★ பிரயோக மட்ட வினாக்கள் (20) = 08,
- ★ உயர் மட்ட வினாக்கள் (10%) = 05 எனத் தீர்மானித்துக்கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(V). வினாத்தாள் Iக்கான விடயத்திறன் அட்டவணை

அலகு	பாடவிடயம்	மொத்தம்	அறிவு	கிரகிப்பு	பிரயோகம்	உயர்
1	வரலாறு பயில்வதற்குரிய மூலாதாரங்கள்	02	01	01	.....	.....
2	இலங்கையில் குடியேற்றங்கள் தாபிக்கப்படல்	03	01	01	01	.....
3	இலங்கையில் அதிகார வளர்ச்சி	06	02	02	01	01
4	இலங்கையின் பண்டைய சமூகம்	06	02	02	01	01
5	இலங்கையின் புராதன விஞ்ஞானமும் தொழினுட்பமும்	08	03	02	02	01
6	வரலாற்று அறிவும் அதன் நடைமுறைப் பிரதியீடும்	05	02	01	01	01
7	உலர் வலய பண்டைய நகரங்களின் வீழ்ச்சி	02	01	01	.....	.....
8	கண்டி இராசதானி	04	01	01	01	01
9	ஐரோப்பிய மறுமலர்ச்சி	02	01	01	.....	.....
10	இலங்கையும் மேலைத் தேசத்தவரும்	02	01	.....	01	.....
	மொத்தம்	40	15	12	08	05

(VI). இதேபோன்று வினாத்தாள் IIற்கு விடயத்திறன் அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும். எத்திறன் மட்டத்தில் வினாக்கள் அமைக்கப்பட வேண்டும் என அட்டவணையில் குறித்துக்காட்டப்படவேண்டும்.

அலகு	பாடவிடயம்	வினாக்கள்	அறிவு	கிரகிப்பு	பிரயோகம்	உயர்
1	வரலாறு பயில்வதற்குரிய மூலாதாரங்கள்	0.48	•	•	.....	.....
2	இலங்கையில் குடியேற்றங்கள் தாபிக்கப்படல்	0.56	•	.....	•	•
3	இலங்கையில் அதிகார வளர்ச்சி	1.04	•	•	•	•
4	இலங்கையின் பண்டைய சமூகம்	1.04	•	•	•	•
5	இலங்கையின் புராதன விஞ்ஞானமும் தொழினுட்பமும்	1.6	•	•	•	•
6	வரலாற்று அறிவும் அதன் நடைமுறைப் பிரதியீடும்	0.88	•	•	•	•
7	உலர் வலய பண்டைய நகரங்களின் வீழ்ச்சி	0.48	•	•	.....	.....
8	கண்டி இராசதானி	0.64	•	•	•	.....
9	ஐரோப்பிய மறுமலர்ச்சி	0.48	•	•	.....	.....
10	இலங்கையும் மேலைத் தேசத்தவரும்	0.48	•	•	.....	.....
		8				

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VII. **பலதேர்வு வினாக்களை எழுதும்போது பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்ளுங்கள்**

1. குறிப்பிட்ட கற்பித்தல் குறிக்கோளை மதிப்பிட, வினா பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

2. வினாவின் தண்டு ஒரு பிரச்சினையைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் குறிப்பிட வேண்டும்.

3. வினா தேவையற்ற தகவல்களையோ தரவுகளையோ கொண்டிருக்கக்கூடாது.

4. வினாவிற்குச் சரியெனத் திட்டமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரேயொரு தெரிவு மாத்திரம் இருக்க வேண்டும்.

5. சரியில்லாத ஏனைய தெரிவுகளும் பொருத்தமானதாக இருக்கவேண்டும்.

6. "இவையனைத்தும்", "இவற்றில் எதுவுமில்லை" , "மேற்கூறிய யாவும்" , "எப்போதும்" போன்ற சொற்கள் விடைத்தேர்வுகளாக இருத்தல் பொருத்த மற்றதாகும்.

7. விடைத் தெரிவுகள் யாவும் இயன்றளவில் சம நீளமுடையதாக இருப்பது விரும்பத்தக்கது.

8. எதிர்மறைச்சொற்கள் (தண்டில் வருபவை) தடித்த எழுத்தில் அல்லது கீழ் கோடிடப்பட்டுக் காட்டப்படவேண்டும்

9. விடைத் தெரிவில் ஒரே சொல் திரும்பத் திரும்பத் வருவது பொருத்தமற்றதாகும்.

10. மொழி நடை, மாணவர் தரத்திற்கு ஏற்றதாக அமைய வேண்டும்.

வினாக்களை வினவும் போது எதிர்பார்க்கும் இலக்குப் பற்றிப் பரீட்சகர் தெளிவு பெற்றிருப்பின் அது, மதிப்பீட்டின் பின்னருள்ள அடுத்த நடவடிக்கைக்கு அனுகூலமாக அமையும்.

பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு வகைகளை நான்காக வகுக்கலாம்.

1. அமைப்பு மதிப்பீடு
2. கூட்டு மதிப்பீடு
3. தகுதிநிலைகாண் மதிப்பீடு
4. ஆய்ந்தறி மதிப்பீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

YOUNG CHILD AND LANGUAGE LEARNING

S.M. RANJIT CHRYSOSTAM,
Resource person,
REGIONAL ENGLISH SUPPORT CENTER,
ZONAL EDUCATION OFFICE,
BATTICALOA

Children's Expectations

Children come to English lessons with expectations about what they are going to do and achive. these expectations are influenced by what the family, friends and society in general expect and what they have heard from other children." Children are creatures of the moment. They work best and most successfully when the objectives are clear, comprehensible and immediate "said one of the language philosophers. Children want to please; They care about what others think about them. They want immediate results. They expect to go home after the first lesson or any lesson they were in able to speak some English, so that they can be praised by their parents and show off to their friends. (When I was at my previous school I did a test on speaking to grade 5 class in addition to the term written exam. I interviewed my students individually and added this marks to the written test. After this i received a marvelous welcome from the parents)

STARTING TO LEARN ANOTHER LANGUAGE

The debate as to how young children learn a new language continues and is likely to continue as the number of young children learning English increases and more research becomes available .

The acquisition / learning distinction is a new one, Some experts say that "A good language learner is an acquirer; he May or not be a conscious learner." Young children are acquirers not learners. As parents, we must know that acquisition takes place subconsciously at home in situations where speakers communicate naturally. In these situations, speakers are more concerned with the use of language to convey meaning than with correct usage. Teaching the rules of usage is not necessary acquires. Thus for the maximum language acquisition in the classroom.
Young children need to be exposed to a programme rich in meaningful, real-life activities in which communicate takes place naturally,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Child/ Adult Language Learning differences

It is thought that an important relationship may exist between physical maturation and language acquisition in the early years. Teachers and parents remark how quickly young children acquire another language and how error free their speech and in particular their pronunciation is, in spite of being given little or no formal grammar instruction. they marvel at young Children's ability to imitate, often so well that they are indistinguishable from native spearks.

However, linguistic considerations alone are not sufficient in considering how young children learn another language.Young children are still learning concepts and developing skills which affect their ability to acquire language. For this reason, language 2 cannot be taught as an isolated subject: it has to be thought of in terms of the whole child and his individual educational needs and interests.

The development of child's language ability

Activities which impose by the second language teacher may beyond the child's level of development, are difficult and even in some cases impossible for the child to understand or to follow on. They often result in a restless classroom, or discipline problems in large classes which our second language teachers always grumble with. Without a knowledge of a child's various stages of cognitive, emotional, physical, social and language developement, and an ability to recognize these change. It is difficult for a teacher to plan an effective programme.

Experienced teachers of young beginners/learners are conscious of these different stages and know how to recognize develpmental changes as they take place. Changes can take place within a week or even within a lesson, which means the teachers need to be flexible, adjusting lesson plans where necessary to cope with new developments, engaging more interesting useful activities.

The rate of development may not necessarily indicate a young child's ability. An intelligent child may be a slow developer or even a late developer. Childern who make little progress may some physical difficulty which may not have recognized. Since the individual difference and especially cognitive differences between young children of same age are so great to teach a class as one unit does not give a child the individual attention he/she needs. Where classes are very large, teacher can divide the children into small groups and within each.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Some Teachers / parents worry that they may be making young children work too hard. It is impossible for children to learn remedial work should consist of going over previous work (remedial work) to help children to consolidate the language and the concepts they have been exposed to. Failure to consolidate any one stage of learning affects the next stage of learning. If new activities/language are presented before sufficient consolidation of previous activities has taken place, a gradual accumulation of thing not properly understood begin to grow. this often leads to a feeling of not being good at English. Therefore, if children can go from one successful activity/lesson to another, motivation takes place naturally.

Cultural influence on language development

Although young children pass through the same stages of development, It is important to realize the influence that a child's society and culture can have on his developement. Without adequate Knowledge of the child's background, it is diffcult to understand fully his behavior in the classroom or to plan the right type of activities from which he can benefit.

Therefore in conclusion the teacher of second language should take these ideas into consideration, and make their efforts a successful one since they are important in the education of the children of a modern world.



- ☆ Eat to live and not live to eat
- ☆ Art is long and life is Short

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Introduction of "Content and Language Integrated Learning" (CLIL) in Bilingual Education.

Mrs. V. Makeshwaran
MA in Linguistics, English sp. Trained
Master Trainer(English),
Resource Person (BE)
Zonal Education office, Batticaloa.

"CLIL" is a new methodology introduced in the Bilingual Education stream to promote the performance level of the Bilingual students in their public examination. Bilingual Education (BE) is a popular educational strategy practiced in the world on the basis of linking languages in the instructional programme. Accroding to the need of each country to achieve their national goal, various models of Be are being used. "BE refers to an educational programme in which both a native language (L 1) and a second language (L2) are taught as subject matter and used as medium of instructions for academic subject /s."

In the history of Sri Lankan educational system there were English medium classes before 1957. During British colonial rule (1796 - 1948) there were some schools called, "Superior Schools" where we found English medium education. Later most of these schools were taken by the government and the subjects were taught in mother tongue. Again at present in the Sri Lankan context, in 2001 AMITY school project was started. At the beginning, these classes were called as AMITY classes which were formed to develop racial and cultural harmony. Then in 2002 this was introduced from grade 6 up to grade 11 recommending to learn a few subjects in L_2 and the rest in L_1, All Sinhala, Tamil and Muslim students learned science and Technology, Mathematics, Social studies and Physical Education in English medium in the same classroom.

It was separated as English medium classroom. Anyway both practices targeted on promoting English as a link language for instrumental purposes within the Sri Lankan multicultural society in relation to the total personality development of bilingual learners. But later according to ED/1/3/1/BE/07 Circular, the ministry of Education decided to have Bilingual classrooms not a separated classrooms but as a mixed up classroom where Sinhala Tamil and Muslims students were put together.

What is Bilingual Education?

The morpheme Bilingual Education refers to Bi/Lingual/Education - Education in two languages. According to Jim Cummins, bilingual education can be defined as follows. "As one where two languages used as a media of instruction to teach subject matter content rather than the language itself" (Cummins - 2003)

The need of each country decides the shape, model and the policies of bilingual education programme of that particular country. Now in Sri Lanka, the bilingual teachers are supposed to use CLIL methodology where they should concentrate on

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

integration of both subject and content in addition to the cognitive development of language. the learning situations of bilingual educations and monolingual education differ from each other.

What is content and language Integrated Learning. (CLIL)

CLIL is the common umberlla term accepted to categorize Pedagogical aspects under bilingual education. The term CLIL was coined by David, Marsh University of Jyvaskyla, Finland and Anne Maljers (1994) CLIL refers to situations where subjects or parts of subjects are taught through a foreign language with dual-focused aims, namely the learning of **content** and the simultaneous learning of a foreign **language.** However, CLIL teaching has been practiced for many years from the Babylonian era to the early sixties when bilingual education was introduced in many schools around the world.

Languages are required most successfully when they learned for communicative purpose in meaningful and significant social situations. This approach links language or languages comprehensively with subject input and cognitive development. CLIL methodology is similar to but distinct from language immersion and content - based instruction. It is an approach for learning content through an additional language (Foreign and second) , thus teaching both the subject and the language. The idea of its proponents was to create an "umberlla term" which encompasses different forms of using language as the medium of instruction. Combination of language and subjects are limitless under CLIL depending on the models of bilingual and multilingual educations models practiced in deferent parts of the world.

CLIL is fundamentally based on methodological principles established by research on language immersion. This kind of approach has been identified as very important by the Eropean commission because "It can provide effective opportunities for pupils to use their new language skills now, rather than learn them now to use later ." CLIL opens doors in languages for a broder range of learners, developing self - confidence in young learners and those who have not responded well to formal language instruction in general education. It provides exposure to the language without requiring extra time in the curriculum, which can be of particular interest in vocational settings.

Some Definitions on CLIL

1.Integrating languagewith non-language content, a dual-focused learning environment (Marsh David, 2002)

2. CLIL is an educational approach in which non-language subjects are taught through a foreign, second, other additional language (David Marsh,2001)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. CLIL refers to situations where subjects or parts of subjects taught through a foreign language with a dual- focused aim, namely learning of content and simultaneous learning of a foreign language. (Marsh David 1994)

4. The use of languages learnt in the learning of other subjects (Lang, Jack 2002)

5. CLIL is a generic term refers to any educational situation in which an additional language and, therefore not the most widely used language of the environment, is used for the teaching and learning of subjects other than the language itself." (Marsh David & Lange, Gisela 2000)

Billingual Education - before CLIL





Billingual Education

For every form CLIL, it is very important that the integration of subject and language together. Here the aim of CLIL is to promote knoweldge of subject and knowledge of a foreign language at the same time. So everyone who is engaged in this methodology wants to think the ways how the learning processes in school can be appro priately promoted methodologically. Earlier in the last decade learning processes in foreign language teaching were influenced by the teacher to a limited extent, They concerned more on subject content. Later, after CLIL the learning environment for foreign language teaching was entirely diferent where the teacher has to focus on both content and language simultaneously.

In CLIL lessons terminological aspects should not be the focus but what is much more important in language work is to develop a repertoire of speech acts that play a central role in subject lessons the pupil has to be equipped linguistically for these speech acts in order to be able to act independently. According to Cummins, Cognitive Academic Language Proficiency Skills (CALPS) promote the academic interaction skills. In the first year of bilingual education the learner's Basic Interpersonal Communication Skills (BICS) is being promoted.

In the early of bilingual education there was a methodological demand that the bilingual teachers did not use mother tongue in the classroom. It was limited to monolingual. Only the second language or foreign language should be used for bilingual learning. But now views have been changed the importance of mother tongue in integrated foreign language and subject learning processes is no longer called into

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

question particularly since it has been recognized that the **code switching** processes often to be observed in the bilingual classroom are very important in language- learning and language awareness-raising processes.

In the introduction of CLIL into the bilingual education curriculum, it may be helpful to consider the advantages to teachers and students in relation to four specific dimensions. These four dimensions (4c_s) from a conceptional framework (Coyle 2005, revised Coyle Holmes King 2008) which connects content, cognition, communication and culture. Culture and intercultural understanding make the core of the conceptual framework, offering the key to deeper learning and promoting social cohesion among the society. The acronym CLIL is used as a generic term to describe all types of provision in which a second language is to teach certain subjects in the curriculum. In the Sri Lankan context English is considered as the second language, therefore the introduction of CLIL in the bilingual education in Sri Lankan school has to fulfill the need of the community and the language policy of the country.

Reference

Books

1. Andrew Radford, Martin Atkinson, David Britain, Harald Clahsen, Andrew Spencer, (1999) Linguistics An Introduction, Cambridge University Press.

2. Charles. C Fries (1945), Teaching in learning English as a foreign Language University of Michigan press, Ann Arbor

3. Douglas Brown H.B Principlas of language learning and Teaching

4. George Yule, (2009) The study of Language, Cambridge University Press

5. Penny Ur, (1991) A course in Language Teaching, Cambridge University Press.

Articles

Priyatha Nanayakara (Director of education - bilingual education), Way Forward of Bilingual Education Programme in Sri Lanka, Bilingual Education, branch Ministry of Education

Dilini Algama, Bilingual Education Develops Hiccups, Bilingual Education Programme in Srilanka, Bilingual Education branch, Ministry of Education

NINE SENTIMENTS

1. Love
2. Pathos
3. Laughter
4. Anger
5. Heroism
6. Fear
7. Disgust
8. Surprise
9. Patience

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு

ந. பார்த்தீபன் M.A, PGDE
விரிவுரையாளர்
வவுனியா கல்வியியல் கல்லூரி.

சுற்றத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப அறிவு, ஆற்றல், இதய உணர்வு என்பனவற்றை உறுதுணையாகக் கொண்டு மக்கள் சமுதாயம் வளர்ந்த வாற்றை உள்ளவாறு எடுத்துக் கூறி விளக்குவதே வரலாறு. சமுதாய மாற்றங் களுக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் ஏற்ப வரலாறு என்னும் கலையும் வளர்ந்து வருகின்றது. வரலாற்றை அறிந்து கொள்வதற்கும் கையாளப்படும் விதங்களும் அவற்றை விளக்கும் முறைகளும் மாற்றம் அடைந்து வருகின்றன. இனி, இலக்கிய வரலாற்றை எடுத்து நோக்கின் உரைநடையிலோ செய்யுள் நடையிலோ எழுதப்படும் நூல்கள் எல்லாம் இலக்கியங்கள் எனப்படினும் வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களை அழகுறப் புனைந்து கூறும் நூல்களே சிறப்பாக இலக்கிய மெனக் கருதப்படுகின்றன.

இத்தகைய இலக்கியங்களைக் கால வரன் முறையை ஒட்டி ஆராயும் நூல்களே இலக்கிய வரலாற்று நூல்கள் எனப்படுகின்றன. இந்நிலையில் நாம் பொதுவாக இலக்கியங்களின் அடிப்படை யில்தான் இலக்கிய வரலாற்றைப் பார்க்க முடியும். இவ்வாறே நோக்குமிடத்து ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு............?

தமிழ் இலக்கிய வரலாற்றினைத் தமிழ் நாட்டின் அரசியல் நிகழ்சிகளின் பின்புலத்தில் சங்க காலம், சங்க மருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம், இருபதாம் நூற்றாண்டு எனப் பேராசிரியர் வி.செல்வநாயகம் எழுதியுள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றினைப் பல தமிழ் அறிஞர்கள் எழுதிய போதும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு பற்றி எழுதுபவர்கள் கிறிஸ்துவுக்குப் பின் பதி னான்காம் நூற்றாண்டிலிருந்து எழுதுவதைத்தான் பார்க்கிறோம். கிறிஸ்துவுக்குப் பின் 1310ஆம் ஆண்டில் சரசோதி மாலை என்னும் சோதிட நூல் தான் ஈழத்தில் எழுந்த முதல் தமிழ் நூல் எனக் கூறப்படுகின்றது. தம்பதேனியாவில் ஆட்சிபுரிந்த நான்காம் பராக்கிரம பாகுவின் காலத்தில், அவனது அவைக் களப் புலவராக விளங்கிய தேனுவரைப் பெருமாள் என்ற இயற்பெயர் கொண்ட போசராச பண்டிதரால், தனது தந்தையின் பெயராகிய சரசோதி என்ற பெயரின் அடிப்படையிலேயே ஒரு சோதிட நூலாக இந்நூல் எழுதப் பட்டுள்ளது. இது சோதிட நூல் எனினும் ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்ற வகையில் இது போற்றப்படுகிறது.

இந்நிலையில் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு கி.பி.14ஆம் நூற்றாண்டிலிருந்துதான் தோன்று கின்றதா? என்ற கேள்வி பல கேள்விகளை உருவாக்கின்றது. தமிழ் நாட்டின் தமிழிலக்கிய வரலாறானது கி.பி. 1ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கும் போது ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு கி.பி 14 ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கு வதால் கி.பி 14ஆம் நூற்றாண்டிலிருந்து தான் ஈழத்தில் தமிழர்கள் வாழ்ந்தார்களா? அதற்கு முன் வாழ்ந்திருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் இலக்கிய முயற்சிகள் தோன்ற வில்லையா? தோன்றியிருப்பினும் போற்றப்படவில்லையா? அழிந்து போயிருக்குமா? திட்டமிட்டு அழிக்கப்பட்டிருக்குமா? இவ்வாறான கேள்விகளால் நாம் விளங்கிக்கொள்ள வேண்டியது என்ன?

ஈழத்து இலக்கிய வரலாற்றை எழுதுபவர்கள் ஈழத்துப் பூதந்தேவனார் என்பவரை ஈழத்தவர் எனக் காட்ட முயல்கின்றனர். இவர் சங்க காலத்து இலக்கியவாதிகளுள் ஒருவராக, பூதந்தேவனார், மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் எனப் பல பெயர்களாலும் குறிப்பிடப்படுகின்றார். சங்ககாலத்துப் புலவர்களுள் ஒருவரான இவர் ஈழத்தைச் சேர்ந்தவர் எனக்கொள்வதில் தவறில்லை எனக் குறிப்பிடுபவர்கள், அக நானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றில் இவர் எழுதிய ஏழு பாடல்களில் ஈழத்தைப் பற்றிய குறிப்புகள் எவையும் இடம்பெற்றிருக்கவில்லை என்றும் குறிப்பிடுகின்றனர். இவரது இலக்கியப் பணி தமிழ்நாட்டிலே இடம் பெற்றமையால், ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றின் தொடர்நிலை பாதிக்கப் பட்டுள்ளது என்றும் ஈழத்திலிருந்த இத்தகைய புலவர்கள் ஆரியச்சக்கர வர்த்திகள் காலம் வரைக்கும் தம்மை வரவேற்கும், ஆதரிக்கும் அரசு போன்ற நிறுவன ரீதியான புலவர்கள் ஈழத்தில் இல்லாதிருந்தமையால், இயல்பாகவே தமிழ் நாட்டின்பால் கவர்ச்சி கொண்டிருந்திருப்பர் எனக் கூறுவோரும் உளர். எவ்வாறாயினும் சங்க காலத்துக்குப் பின்னரான, அதாவது கி.பி 3ஆம் நூற்றாண்டிலிருந்து ஆரியச்சக்கரவர்த்திகள் காலமான கி.பி 14ஆம் நூற்றாண்டுவரை ஈழத்து இலக்கிய முயற்சிகள்........?

"ஈழத்தில் தமிழர்கள் வாழ்ந்திருந்த பகுதிகளிலேயே பெரும்பாலான தமிழ்ச் சாசனங்கள் கண்டெடுக்கப்பட்டன. எனவே அவற்றின் மூலம் ஓரளவிற்கு ஈழத் தமிழக வரலாற்றைப் "பிற மூலங்களின் துணையுடன் ஆராய்ந்து அறியலாம்" எனக் குறிப்பிடும் பேராசிரியர் சி.பத்மநாதன், கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே தென்னகத்திலிருந்து தமிழர் ஈழத்திற்கு வந்திருந்தனர். ஆயினும் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை ஈழத்திலிருந்த தமிழ்க் குடிகளின் வரலாற்றைப் பற்றி எந்தவிதமான ஆதார பூர்வமான குறிப்புக்களும் ஈழத் தமிழ் வரலாற்று நூல்களில் இடம்பெறவில்லை என்று The Kingdom Jaffna என்ற நூலில் குறிப்பிடப் பட்டுள்ளதாயும் பேராசிரியர் சி.பத்மநாதன் குறிப்பிடுகின்றார்.

கி.பி ஒன்பதாம் நூற்றாண்டளவில் ஈழத்தின் வடபிராந்தியத்தில் பல தமிழர்கள் இருந்தனர் என்பதற்கு மகாவம்சம் சான்றளிக்கின்றது. சூளவம்சம், அண்மைக் காலத்தில் வரலாறு பற்றிய ஆராய்ச்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினாலும் பல வகையான தொல்பொருட் சின்னங்களின் கண்டுபிடிப்புக்களினாலும் இலங்கையில் புராதன காலம் முதலாகத் தமிழர் குடிகளாய் விளங்கியமை பற்றிய சிந்தனைகள் புதிய பரிணாமத்தைப் பெற்றுள்ளன. கிறிஸ்து சகாப்தத்துக்கு முற்பட்ட சில நூற்றாண்டுகளில் ஈழத்தின் பல பகுதிகளில் பெருங்கற் பண்பாட்டின் அம்சங்கள் பரவியிருந்தன. புராதன பிராமிக் சாசனங்களிலே தமிழும் பேச்சு வழக்கு மொழியாக விளங்கியமைக்கான தெளிவான சான்றுகள் உள்ளன. புராதனமான நாணயங்களிலே தமிழரின் பெயர்கள் காணப்படுகின்றன. அத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமிக் சாசனங்களிலும் கலவோடுகளிலும் தமிழ்பிராமி எழுத்துக்கள் மிகுந்தும் காணப்படுகின்றன. இவற்றால் இலங்கையின் பூர்வகுடிகளைப் பற்றிய மரபு வழியான பாடநூற் கருத்துக்களை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பொலநறுவைக் காலத்தில் ஈழத்திலிருந்த தமிழ்க் குடிகளைப் பற்றி அறிந்துகொள்ள ஈழத்துத் தமிழ்ச் சான்றுகளே பெரிதும் பயன்படுகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்தாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினோராம் நூற்றாண்டிலும் ஈழத்தினைச் சோழர் ஆண்ட காலத்தில் நிருவாக அதிகாரிகள், போர் வீரர்கள், வணிகர் போன்ற பல தரப்புகளைச் சேர்ந்த தமிழர் தமிழகத்தில் இருந்து ஈழத்திற்கு வந்தார்கள். பொலநறுவைக் காலத்தில் குறிப்பிடத்தக்க அளவிலே தமிழ்க் குடிகள் இருந்தன. அக்காலத்தில் சிங்கள மன்னரின் ஆட்சியில் தமிழிலும் ஆட்சியாளர்களால் எழுதப்பட்டன. நிருவாகத்திலும் இராணுவத்திலும் சில பிரதானமான பதவிகளையும் தமிழர் பெற்றிருந்தனர். ஈழத்தில் சோழர் ஆட்சியின்போது தமிழ் வளச்சியுற்றிருக்கலாமென்பதை ஆங்காங்கே கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் இடம்பெற்ற தமிழ்ச் செய்யுள்கள் உணர்த்துகின்றன என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அனுராதபுரம், கோட்டகம, பதவியா, பண்டுவஸ்நுவர முதலிய இடங்களிற் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் இவ்வாறு தமிழ்ச் செய்யுள்கள் காணப்படுகின்றன. இவை கி.பி 9 முதல் 13ஆம் நூற்றாண்டு வரையில் எழுந்தவையேயாகும் எனக் குறிப்பிடும் ஆய்வாளர்கள் சிலவற்றை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் அக்காலகட்டத்தில் ஆங்காங்கு உதிரியாகச் சில இலக்கிய முயற்சிகள் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகின்றது. ஆயினும் அவை பற்றி அறிவதற்குப் போதிய சான்றுகள் கிடைத்தில எனக் குறிப்பிடுவது தொடர்பாக இன்றுள்ள இலக்கிய முயற்சியாளர்கள் சிந்திக்க வேண்டும்.

இலக்கியம், காலத்தின் கண்ணாடி என்று சொல்லிக்கொண்டு அந்தக் காலத்தை, களத்தைப் பதிவு செய்யாமல் விடுவதன் தவறை உணர்ந்துகொள்ள வேண்டும். ஈழத்துப் பூதந்தேவனாரின் பின்னரான இடைவெளி தமிழ்நாட்டின் இலக்கியங்களை முற்றுமுழுதாக நம்பி நின்ற ஈழத்தவரின் கவனயீனம் என்பதை உணர்தல் அவசியம். இன்றும்கூட சினிமா, தொலைக்காட்சி நாடகம், திரைப்படங்கள் போன்ற பல்வேறு விடயங்களில் தமிழ் நாட்டுப் பங்களிப்பும் இல்லையென்றால் ஈழத்தில் எதுவித பங்களிப்பு இல்லையென்ற மனோநிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். அரசியலிலும் சரி, கலை - இலக்கிய முயற்சிகளிலும் சரி தமிழ்நாட்டின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. ஈழத்து இலக்கிய முயற்சிகள் முறையாகப் பேணப்பட ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள் கரிசனை கொள்ள வேண்டும். ஆக்க இலக்கியங்களான கவிதை, சிறுகதை, குறுநாவல், நாவல் போன்றவற்றில் காலம், களம் போன்றன பதியப்பட வேண்டும்

உசாவியவை

- ஈழத்து இலக்கியமும் வரலாறும், பேராசிரியர்.சி. பத்மநாதன்
- தமிழ் இலக்கிய வரலாறு, பேராசிரியர் வி. செல்வநாயகம்
- இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி.

கலாநிதி துரை மனோகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக வாழ்வுக்கு ஓர் செய்தி

குப்பை பொறுக்கி - நாம்
கூட்டிச் சுத்தம் செய்வோம்
கழிவை அகற்றும் வேலை
கடமை என்றே உணர்வோம்

கூடி வாழும் இடத்தைக்
கூட்டிச் சுத்தம் செய்வோம்
கூடை நிறையக் குப்பை
கூட்டி அள்ளிக் கொட்டுவோம்

உடலைச் சுத்தம் செய்து
உடையைச் சுத்தம் செய்து
உடுப்போம் நன்று என்று
பாட்டி சொன்னார் அன்று

சத்து உணவு உண்டு
கொதித்துக் குளிர்ந்த நீரைக்
குடித்து நாளும் - நாமும்
குனிந்து வேலை செய்து
கோடி காலம் வாழ்வோம்

திருமதி இந்துமதி அருளம்பலம்
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
(ஆரம்பக் கல்வி)
வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திலமாம் தமிழே

நெஞ்சத்தையே நெகிழ வைத்தாய் - நினைவு
மஞ்சத்திலே என் மனத்தைத் தொட்டாய்
கொஞ்சு மொழி வடிவில் வந்தாய்.
சுவைக் கொத்தாம் எழில் முத்தே
மனம் பித்தாய் உனைத் தொட்டேன்.

கள்ளதின் மயக்கம் கண்மயக்கே - உனை
அள்ளிட வருமே மெய்ம்மயக்கம்
எழில்மொழி நீயும் எதிரில் நின்றாய்.
கனவில் வந்தாய் நினைவில் நின்றாய்
உணர்வில் ஒன்றாய் உருவங் கொண்டாய்

அணிகலன் பலவும் நீ பூண்டாய் - எம்
அகந் தன்னில் வாழும் சுடரமுதே
அன்னைத் தமிழெனும் அருங்கனியே
உனைச் சுவைக்க மனம் திகைக்க
தித்திக்கும் தெள்ளமுதே செந்தமிழே

வெள்ளிடை மலையாம் உன்புகழ் தன்னை
சொல்லிட இயலுமோ சுவையமுதே
கன்னி மொழி உருவில் நின்றாய்.
கவிகொஞ்சு மதுமலரே
மனம் மகிழ உன் துணை நாடினேன்

முத்தான முச்சங்கம் நீ கொண்டாய்
முத்தமிழ் எனும் மூத்தவளே
கவிபுகழ் மணக்கும் இன்தமிழே
சங்கம் மூன்றில் பொங்கு தமிழே
என்றும் வாழும் எந்தன் மொழியே.

புவியினில் நீயே இன்பம் என்று
செவியினில் இன்ப ராக மிட்டாய்
சிந்தை கவர்ந்த இன்பத் தமிழே
சொத்துச் சொத்தாய் பத்துப் பதினாயிரமாம்
புத்தம் புது நூல்கள் ஈன்ற தமிழே

முத்தமிட்ட அன்னை தொட்டுரைத்த தமிழே
சத்தமிட்ட என்னைக் கட்டியணைத்த தமிழே
சுத்தத் தங்கமென ஒளிரும் எந்தமிழே
நித்தம் நித்தம் மாறும் உலகில்
நித்திலமாய் நிலைக்கும் பூந்தமிழே

திருமதி ராணி மாணிக்கம்
மட்/தன்னாமுனை புனித வளனார்
வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வடையும் பல நரிகளும்

கா..... கா....கா..... கா......
1987 இல் காகம் கரைந்தது.
உரிமைப்பசி

இந்தியப் பாட்டி
அப்போது சுட்டவடை
இன்னும் பழுதாகவில்லை.

ஆனாலும் அதன் அருமையை
காகங்களும் அறியவில்லை.

மேரா-

படையை நிறுத்தி
வடையைச் சுட்டுக்கொடுத்த
பாட்டிக்கு முன்புபோல்
காகங்கள் பற்றி அதிகம் கவனம் இல்லை.

ஆண்டுகள் ஓடினும் வடையைத் திருடும்
நரியின் திட்டம் ஓயவில்லை.
ஊழையிடத் தொடங்கின அவை.
'காகங்களுக்கு வடையெதற்கு
காகங்களுக்கு உரிமை வடையெதற்கு'

'எல்லோரும் நரிகளாவோம்
வடைகளைப் பறிப்போம் வாருங்கள்'
பெரும்பான்மை தேடி பயணமாகின அவை
தாடி வளர்த்த குழப்ப நரியின் தலைமையின் பின்னால்

இனவாதத்தீயை மூட்டியது
பேரணியின் ஆரவாரம்

காற்றுத்தந்தி கொண்டு வந்த
ஒலியை வாங்கிய வெண்புறாவொன்று
1956 ஐ நினைத்துப்பார்த்து
உடலைச்சிலிர்த்துக்கொண்டது.
1983 இலும் பின்னரும் நடந்த
உயிர்க்கொலையின் வலியதன்
கண்ணால் ஒழுகியது.

குறிப்பு:

இக்கவிதை 2015 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட படைப்பாக்கப் போட்டியில் கவிதைத்துறையில் முதலாமிடம் பெற்றுக் கொண்டது.

இவர் மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தில் கடமை புரிகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பசுமைப் புரட்சி" விவசாயத்தில் ஏற்படுத்திய தாக்கம்

பொ.செல்வநாயகம்
ஆசிரிய ஆலோசகர் (விவசாயம்)
வலயக் கல்வி அலுவலகம்
மட்டக்களப்பு

உச்சளவான உள்ளீடுகளைப் பயன்படுத்தி அலகு நிலப்பரப்பில் இருந்து அதிக விளைச்சலைப் பெறுதல் பசுமைப் புரட்சியாகும். உலகில் **1960** களின் இறுதிக் காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

பயன்படுத்திய உள்ளீடுகள்

(i) புதிய பயிர்ப் பேதங்கள்
(ii) இரசாயன உரங்கள்
(iii) பீடை, களை, நோய் நாசினிகள்
(iv) நவீன இரசாயன இயந்திரங்கள்
(v) நவீன நீர்ப்பாசன முறைகள்

பசுமைப் புரட்சி காரணமாக விவசாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

(i) குறுகிய காலத்தில் அதிக விளைச்சலைத் தரக்கூடிய பயிர்ப் பேதங்கள் அறிமுகம் செய்யப்படல்.
(ii) விவசாயப் பொறிப் பயன்பாடு அதிகரித்தல்.
(iii) இரண்டு போகங்களிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளல்.
(iv) உலக தானிய உற்பத்தி, ஏறத்தாழ இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டமை.
(v) மேலதிக உணவுகளைச் சந்தைப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்குதல்.

பசுமைப் புரட்சியால் ஏற்பட்ட நன்மைகள்

(i) அலகு நிலப்பரப்பில் இருந்து அதிக விளைச்சல் கிடைத்தமை.
(ii) தொடர்ச்சியாகப் பயிர் செய்ய முடிந்தமை.
(iii) பொறிப்பாவனை மூலம் விவசாய வேலைகளின் வினைத்திறனை அதிகரித்தமை.
(iv) அதிகரித்த சனத்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்திகளைத் துரிதமாக அதிகரிக்க முடிந்தமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுமைப் புரட்சியால் ஏற்பட்ட தீமைகள்

(i) புதிய பயிர்ப் பேதங்கள் இனவிருத்தி மூலம் உருவாக்கப்படுவதால் பாரம்பரிய மரபணு வளம் குறைவடைதலும் இயற்கை எதிர்ப்புத் தன்மை குறைவடைதலும்.

(ii) அதிக நோய், பீடை, களைநாசினிகளால் சூழல் மாசடைதலும் உயிர்ப் பல்வகைமை இல்லாது ஒழிதலும்.

(iii) நிலத்தின் தரம் குறைவடைதலும் மக்களின் நிலைபேறான தன்மை இல்லாது போதலும்.

(iv) அதிகரித்த நோய், பீடை, களை நாசினிப் பாவனையால் மக்களுக்குச் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படல்.

(v) நிலத்தடி நீர் உவராதல், சூழல் மாசடைதல், சிறுநீரக நோய்கள், புற்று நோய்கள் போன்ற நிலைமைகள் தோற்றுவிக்கப்படல்.

(vi) தனிப்பயிர்ச் செய்கையின் மூலம் உயிர்ப் பல்வகைமை குறைவடைவதால் சில களைகள், சில பீடைகள் பல்கிப் பெருக வாய்ப்பு ஏற்படல்.

(vii) கூடுதலான இரசாயனங்களைப் பயன்படுத்தி, பயிர்ச் செய்கையை மேற்கொள்வதனால் அவை இல்லாமல் உணவு உற்பத்தியை மேற்கொள்ள முடியாது போதல்.

(viii) இன விருத்தி மூலம் உருவாக்கப்பட்ட விதைகளுக்குத் தொடர்ந்தும் அதன் உற்பத்தியாளரை, தங்கியிருக்க வேண்டி இருப்பதால் அதற்கு அதிக விலை கொடுக்கவேண்டிய நிலை.

(ix) தொடர்ச்சியாக விவசாயச் செய்கையை மேற்கொள்ள முடியாது போதல்.

(x) தொடர்ச்சியான நீர்ப்பாசனம் காரணமாக நிலத்தடி நீர் குறைவடைவதால் நீர்ப்பற்றாக்குறை ஏற்படல்.

(xi) உள்ளீடுகளை வழங்கும் வளர்ச்சியடைந்த நாடுகளில் தொடர்ந்தும் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு – மறுசீரமைப்பு

வேலுப்பிள்ளை புவனேந்திரராசா
நிருவாக உத்தியோகத்தர்
வலயக் கல்வி அலுவலகம்
மட்டக்களப்பு.

1885ஆம் இலக்கம் கொண்ட 23.10.2014ஆம் திகதி அரச விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு 01.07.2008ஆம் திகதி தொடக்கம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 01.07.2008இல் சேவையிலுள்ள அனைத்து ஆசிரியர்களும் அந்தந்த வகுப்பு/தரங்களில் மறுசீரமைக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின்கீழ் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு உள்ளீர்ப்புக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 01.07.2008ஆம் திகதிக்குப் பின்னர் முன்னைய ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின்கீழ் நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு மறுசீரமைக்கப்பட்ட பிரமாணக் குறிப்பின்கீழ் அந்தந்த வகுப்பு / தரத்தில் புதிய நியமனக் கடிதம் மாற்றியமைத்து வழங்கப்பட்டுள்ளது.

இல	முன்னைய வகுப்பு / தரங்கள்	இல	புதிய வகுப்பு / தரங்கள்	சம்பளத் தொகுப்பு இலக்கம்
1	3-11	1	3-11	G E - 1 - 2006 Step - 1
2	3-1	2	3-1(இ)	G E - 1 - 2006 Step - 7
		3	3-1(ஆ)	G E - 1 - 2006 Step - 9
		4	3-1(அ)	G E - 1 - 2006 Step - 14
3	2-11	5	2-11	G E - 2 - 2006 Step - 3
4	2-1	6	2-1	G E - 2 - 2006 Step - 5
5	1	7	1	G E - 2 - 2006 Step - 11

G E - 1 - 2006 13410 - 6 x 145 - 7 x 180 - 2 x 215 - 15970

G E - 2 - 2006 16100 - 5 x 240 - 5 x 330 - 7 x 400 - 20 x 645 - 34650

புதிதாக ஆசிரியர் சேவைக்கு நியமனம் செய்யப்படுபவர்கள் வகுப்பு 3-11 இலேயே ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். எனினும் பட்டதாரி ஆசிரியர்கள், கல்வியியல் கல்லூரி ஆசிரியர்கள், டிப்ளோமா ஆசிரியர்கள் முறையே வகுப்பு 3-1(அ), 3-1(ஆ), 3-1(இ) வகுப்பு / தரத்தில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர். அத்துடன் கல்விமாணிப் பட்டம், பட்டப்பின் படிப்பு முடித்த பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய பயிற்சியை முடித்த பட்டதாரி ஆசிரியர்கள், கல்வியியல் கல்லூரி ஆசிரியர்கள் வகுப்பு 2-11ற்கு தொழில்சார் தகைமை அடிப்படையில் நியமனம் செய்யப்படுவர்.

மேலும், இப்புதிய பிரமாணக் குறிப்பின் பிரகாரம் புதிய பதவி உயர்வுத் திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப்பதவி உயர்வுத் திட்டத்தின் சுருக்கம் (Summary) மறுபக்கம் தரப்பட்டுள்ளது. பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடுகள் பிரகாரம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட 23.10.2014 திகதியிலிருந்து 3 வருட காலத்தில் தொழில்சார் மீளாய்வு மற்றும் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெறுதலைக் கருத்திற் கொள்ளாது ஏனைய தகைமைகளைப் பூர்த்திசெய்த ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளமைக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு

பதவி உயர்வுத் திட்டம்

இல	உள்ளீர்ப் பூர்ச் செய்யப்பட்ட தரமும் / சம்பளமும்	பதவி உயர்விற்கான தரமும் / சம்பளமும்	பூர்த்திச்செய்ய வேண்டிய தகைமைகள்					Section of the Service Minute
			confirmation	perid of service	E.B.Exam	Higher performance	Last Earned Increments	
1	3-1 (b) Trained teacher National Diploma in Teaching	2-11	yes	5	1	5	5	10:1
2	3-1(a) Graduate Teacher	2-11	yes	3	1	3	3	10:2
3	2-11 With Service	2-1	yes	9	2	9	5	10:3:1
4	2-11 Graduate With Teacher Trained	2-1	yes	7	2	7	5	10:3:2
5	2-11 Graduate + Post Graduate B E d	2-1	yes	7	2	7	5	10:3:3
6	2-11 Graduate + Post Graduate + M E d.	2-1	yes	5	2	5	5	10:3:4
7	2-1	1	yes	6	3	5	5	10:4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியாரின் சுயசரிதை ; சில அவதானங்கள்

கலாநிதி செ. யோகராசா

புனைகதை சாரா இலக்கிய வகைகளுள் 'சுயசரிதை'யுமொன்றாகும். தமிழில் இத்தகைய 'சுயசரிதை' என்ற புதிய வகையினை முதன் முதல் அறிமுகப்படுத்தியவர் பாரதியாரே. தனது இம்முயற்சி பற்றிப் பாரதியார் பின்வருமாறு குறிப்பிடுகின்றமை கவனத்திற்குரியது.

" இச்சிறிய செய்யுள் நூல் விநோதார்த்தமாக
எழுதப்பட்டது .... இதன் இயல்பு தன் கூற்
றெனப்படும். அதாவது கதாநாயகன் தன் சரிதை
யைத் தான் நேராகவே சொல்லும் நடை: இக்
காவிய முறை நவீனமானது" (கீழ்க்கோடு இக்கட்டுரையாளரால் இடப்பட்டது.)

1910 நவம்பரில் புதுச்சேரியில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

பாரதியார் தனது சுயசரிதைக்கு இட்டிருந்த பெயர் **'கனவு'** என்பதாகும். "அன்றைய பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக அதிருப்தியைத் தூண்டிவிடக்கூடிய (ராஜத் துவேஷத்தை மூட்டும் தன்மை கொண்ட) நூல் என்ற காரணத்தால் கனவு நூல் தடை செய்யப்படுகிறது". இதே கனவு நூல் ஸ்வசரிதை என்ற தலைப்புடன் 'பாரதி நூல்கள் - காவியங்கள்' என்ற தொகுதியில் 1937ஆம் வருட பதிப்பில் இடம்பெற்றுள்ளது. பின்னாளில் 'கனவு' என்னும் தலைப்பு 'ஸ்வசரிதை' யாக மாற்றப்பட்டுவிட்டது. தற்காலப் பதிப்புக்களில் இது 'சுயசரிதை' எனவும் காணப்படுகிறது. தலைப்பு மாற்றப்பட்டதற்குக் காரணம் திரும்பவும் பிரிட்டிஷ் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று பதிப்பாளர்கள் கருதியமையேயாகும்.

நவீன தமிழிலக்கியத்தின் புதிய வரவாக வெளியிடப்பட்ட "சுயசரிதை", சுயசரிதை எப்படி அமைய வேண்டுமென்பதற்கான முன்மாதிரியாகவுள்ளது. அதாவது பாரதியார் தனது வாழ்க்கையில் நடைபெற்ற முக்கியமான சம்பவங்கள் சிலவற்றை மட்டும் எடுத்துக்கூறுவதாக அமையினும் பாரதியார் காலத்து, இந்திய தமிழக அரசியல், சமூக நிலைபற்றி அறிவதற்கான முக்கியமானதொரு படைப்பாகவும் அது பரிணமித்துள்ளது. அவ்விதங்களில் பாரதியாரைப் புரிந்து கொள்வதற்கு மட்டுமன்றி பாரதியார் காலத்து இந்தியாவினதும் தமிழகத்தினதும் அரசியல், சமூக நிலைமைகளைப் புரிந்து கொள்வதற்கும் சுயசரிதை பேருதவி புரிகின்றது என்பதில் தவறில்லை.

பாரதியார் நவீன தமிழ்க் கவிதைப் பொருள் மரபிலே ஏற்படுத்திய முற்றிலும் புதிய மாற்றம் அரசியற் சார்பான கவிதைகளை முதன்முதல் எழுதியமையாகும். (சமூகச் சார்பான கவிதைகள் ஒரு சில ஏற்கனவே வள்ளலாராலும் கோபாலகிருஷ்ண பாரதியாராலும் எழுதப்பட்டிருந்தன.) ஆழ்ந்து நோக்கும் போது இந்திய விடுதலை இயக்கமே பாரதியார் என்றொரு நவீன கவிஞனை உருவாக்கியது; இனங்காட்டியது என்று கூற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய பின்னணியில் நோக்கும் போது ஆங்கில ஆட்சிக்கெதிரான - குறிப்பாக அவர்கள் அறிமுகப்படுத்திய நவீன கல்வி முறைக்கெதிரான - பலத்த கண்டனக் குரல் 'சுயசரிதை'யில் ஆக்ரோஷமான முறையில் வெளிப்படுவதை அறிய முடிகின்றது. அது பற்றிப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார் பாரதியார்:

"புல்லை யுண்கென வாளரிச் சேயினைப்
போக்கல் போலவும் ஊன்விலை வாணிகம்
நல்ல தென்றொரு பார்ப்பனப் பிள்ளையை
நாடு விப்பது போலவும், எந்தைதான்
அல்லல் மிக்கதோர் மண்படு கல்வியை
ஆரியர்க்கிங் கருவருப் பாவதை

நரியு யிர்ச்சிறு சேவகர், தாதர்கள்
நாயெ னத்திரி ஒற்றர், உணவினைப்
பெயரி தெனக்கொடு தம்முயிர் விற்றிடும்
பேடியர் பிறர்க்கிச்சகம் பேசுவோர்
கருது மிவ்வகை மாக்கள் பயின்றிடுங்
கலைப யில்கென என்னை விடுத்தனன்"

தொடர்ந்து நவீன கல்வி, செயற்பாட்டு ரீதியில் நாட்டிற்குப் பயன்தராமை பற்றியும் பண்டைய இந்திய, தமிழ் இலக்கியச் சிறப்புக்களை அறிவதற்கு அது தடையாயிருப்பது பற்றியும் விவரித்துவிட்டு இறுதியாகப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் பாரதியார்:

"செலவு தந்தைக் கோராயிரஞ் சென்றது
தீதெ னக்குப்பல் லாயிரஞ் சேர்ந்தன
நலமொ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்"

(சுயசரிதையில் இடம்பெற்றுள்ள 21 - 29 வரையான மேற்கூறிய பாடல் பகுதிகள் பிரிட்டிஷ் அரசால் தடை செய்யப்பட்டவற்றுள் முக்கியமானவையாகும்.)

அரசியல் சார்பான விடயங்களிலேயே கவனஞ்செலுத்திய பாரதியார் வாய்ப்புக் கிடைக்கும் போது மட்டுமே சமூகப் பிரச்சினைகள் பலவற்றைத் தொட்டுக் காட்டுவது வழக்கம். தனது இளமைத் திருமணம் பற்றிப் பேச முற்பட்ட வேளையிலே பால்ய விவாகத்தைப் பலமாகக் கண்டனஞ் செய்கின்றார் பாரதியார்.

"பால ருந்து மதலையர் தம்மையே
பாத கக்கொடும் பாதகப் பாதகர்
மூலத் தோடு குலங் கெடல் நாடிய
மூட மூடநிர் மூடப் புலையர் தாம்
கோல மாக மனத்திடைக் கூட்டுமிக்
கொலையெ னுஞ்செயலொன்றினை யுள்ளவும்
சால வின்னு மோராயிரம் ஆண்டிவர்
தாத ராகி அழிகெனத் தோன்றுமே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணச் சடங்கு முறைகளும் பாரதியாரால் கண்டிக்கப்படுகின்றன.

"சாத்தி ரங்கள் கிரியைகள் பூசைகள்
சகுன மந்திரத் தாலி மணியெலாம்
யாத்தெ னைக்கொலை செய்தன ரல்லது
யாது தர்ம முறையெனல் காட்டிலர்
தீத்திறன் கொள்அறிவற்ற பொய்ச்செயல்
செய்து மற்றவை ஞான நெறியென்பர்
மூத்தவர்வெறும் வேடத்தில் நிற்குங்கால்
மூடப் பிள்ளை அறமெவண் ஓர்வதே?"

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியப் பொருளாதார அமைப்பினையே தலைகீழாக மாற்றியிருந்தது. நவீன தொழிற்சாலைகள் பலவற்றை நிறுவி, இந்திய வளங்களைச் சுரண்டியது, சுதேசிகளின் தொழில் முயற்சிகளுக்குத் தடைகள் விதித்தது; பாரதியாரின் தந்தை நடத்திய பஞ்சாலை பிரிட்டிஷ் அரசின் சுரண்டலால் பாதிக்கப்பட்டது. இது பற்றிப் பின்வருமாறு விவரிப்பார் பாரதியார்:

"பார்ப்ப னக்குலம் கெட்டழி வெய்திய
பாழ டைந்த கலியுக மாதலால்
வேர்ப்ப வேர்ப்பப் பொருள்செய்வ தொன்றையே
மேன்மை கொண்ட தொழிலெனக் கொண்டனன்
ஆர்ப்பு மிஞ்சப் பலபல வாணிகம்
ஆற்றி மிக்க பொருள்செய்து வாழ்ந்தனன்"

"ஓங்கி நின்ற பெருஞ்செல்வம் யாவையும்
ஊர் செய்த சதியில் இழந்தனன்"

ஆலை நட்டத்தில் இயங்க தந்தையார் வறுமை எய்துகின்றார்; விரைவில் காலமாகின்றார். தனக்கேற்பட்ட பேரிடி பற்றிப் பாரதியார் பின்வருமாறு புலம்புகின்றார்:

"தந்தை போயினன் பாழ்மிடி சூழ்ந்தது
தரணி மீதினில் அஞ்சலென் பாரிலர்
சிந்தை யில்தெளி வில்லை உடலினில்
திறனு மில்லை உரனுளத் தில்லையால்
மந்தர் பாற்பொருள் போக்கிப் பயின்றதாம்
மடமைக் கல்வியால் மண்ணும் பயனிலை
எந்த மார்க்கமும் தோற்றில தென்செய்கேன்
ஏன்பிறந்தனன் இத்துயர் நாட்டிலே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய இந்திய, தமிழ் இலக்கியங்களின் பெருமை பற்றி வேறு இடங்களிலும் குறிப்பிட்ட பாரதியார் அத்துறை சார்ந்த முக்கியமான ஆளுமைகள் சிலர் பற்றிக் கூறும் வாய்ப்பினை 'சுயசரிதை' யில் பெற்றுக்கொள்கின்றார். ஆங்கிலக் கல்வி முன்னர் நாடு திகழ்ந்த பெருமையை மறைத்தமை பற்றிக் கூறும் போது கம்பன், காளிதாசன், பாஸ்கரன், பாணினி, சங்கரர், இளங்கோ, வள்ளுவன், அசோகன், சிவாஜி முதலானோரின் மேன்மையினை மிகச்சிறப்பான முறையில் எடுத்துரைக்கின்றார்.

தனிமனித நடத்தைகள் பற்றி ஆழமாக விமர்சிப்பதும் பாரதியாரின் ஈடுபாடுகளிலொன்று, "தேடிச் சோறு நிதந்தின்று" என்ற பாரதியாரின் கவிதை இவ்விதத்தில் பிரசித்தமானது. சுயசரிதையிலும் பல இடங்களில் இக்குரல் வெளிப்படுகின்றது. அவ்வாறே மனித மேம்பாட்டிற்கான வழிகள் பற்றியும் பாரதியார் அடிக்கடி சிந்திப்பார். "பன்றியைப் போலிங்கு மண்ணிடைச் சேற்றில் படுத்துப் புரளாதே வென்றியை நாடியிவ் வானத்தில் ஓட விரும்பி விரைந்திடுமே." என்றெல்லாம் ஏசுவார்.

இவ்விதங்களில் சுயசரிதையில் வருகின்ற பின்வரும் பகுதி கவனத்திற்குரியது.

"ஆழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்
அதனு டைப்பொருள் நாளை விளைந்திடும்
தாழு முள்ளத்தர் சோர்வினர் ஆடுபோல
தாவித் தாவிப் பலபொருள் நாடுவோர்
வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்
விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே

விதியை நோவர் தம்நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்
சதிகள் செய்வர் பொய்ச்சாத்திரம் பேசுவர்
சாத கங்கள் புரட்டுவர் பொய்மைசேர்
மதியினிற்புலை நாத்திகங் கூறுவர்
மாய்ந்தி டாத நிறைந்த விருப்பமே
கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்
கண்ணி லாதவர் போலத் திகைப்பர்காண்"

பாரதியாரின் வாழ்க்கை பற்றி ஆய்வு செய்தோர் சிலர் பாரதியாருக்கு இளம் வயதிலேற்பட்ட காதல் பற்றியும் அக்காதலின் தோல்வி பற்றியும் சுருக்கமாகக் கூறிச் செல்வது வழக்கம். அவ்விதத்தில் அது தொடர்பாகவும் பாரதியாரின் சுயசரிதை போதிய விளக்கம் தருவது குறிப்பிடத்தக்கது. (பாடல் 20: 35 - 36) காதல் வயப்பட்ட தன்நிலை பற்றி "யாத்த தேர் உருளைப்படு மேழைதான், யாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர் செலும் ஆங்கிழுப்புற்றென" என்றும் "பொன்னை என்னுயிர் தன்னை" என்றும் "பூத்த ஜோதி வதனம் திரும்பு மேல் புலனழிந்தொரு புத்துயிர் எய்துவேன்" என்றும் "ஓங்கு காதல் தழல் எவ்வளவு என்றன் உளமெரித்துளது என்பதும் கண்டிலேன்" என்றும் பலபடக் கூறுவார்.

அதே வேளையில் காதல் பற்றிய பண்டைய இந்திய, தமிழ்ச் சமூகத்தினரின் பார்வை எத்தகையது என்பது பற்றியும் பாரதியார் தனது காதல் அனுபவப் பகிர்வுகளூடே விமர்சிக்கத் தவறவில்லை. (பாடல் 7, 15, 16, 17)

பாரதியாரின் தனிப்பட்ட காதலுக்கு நிகரானது தாய்நாட்டு மீதான பாரதியாரின் காதல் என்று கூறுவதற்கும் வாய்ப்பிருக்கின்றது. பின்வரும் பாடல் சிறந்த அதற்குச் சான்றாகின்றது.

"நீரெ டுத்து வருதற் கவள்மணி
நித்திலப் புன்னகைச் சுடர் வீசிடப்
போரெடுத்து வருமதன் முன்செலப்
போகும் வேளை அதற்குத் தினந்தொறும்
வேரெ டுத்துச் சுதந்திர நற்பயிர்
வீழ்ந்திடச் செய்தல் வேண்டிய மன்னர்தம்
சீரெடுத்த புலையுயிர்ச் சாரர்கள்
தேச பக்தர் வரவினைக் காத்தல்போல்"

மானிட வாழ்க்கை பற்றிய பாரதியாரின் தனிப்பட்ட கண்ணோட்டம் எத்தகையது என்றறிவதற்கும் 'சுயசரிதை' வழிகாட்டுகின்றது. 'சுயசரிதை'க்கு பாரதியார் வைத்த பெயர் 'கனவு' என்பது மட்டுமன்றி சுயசரிதை பின்வருமாறு ஆரம்பிப்பதும் கவனத்திற்குரியது:

"பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய்
மெல்லப் போனதுவே"

-பட்டினத்துப்பிள்ளை

முடிவுரைப்பகுதியிலும் (பா.47) அதுபற்றிப் பேசப்படுகிறது. "வாழ்க்கை என்பது ஒரு கனவு" என்று கருதிநின்ற பாரதியார் சில இடங்களில் அதை மறந்து விடுகின்றார் என்பதும் நினைவு கூரத்தக்கது.

ஆக, பாரதியாரின் அகத்தையும் புறத்தையும் புரிந்துகொள்ள, 'சுயசரிதைப் பகுதி பேருதவி புரிகின்றது என்பதையுணர்ந்து "ஆழ்ந்திருக்கும் கவியுளம்" காண்பது தான் எமக்கு வேண்டியது. பாரதியியல் ஆய்வாளர் சிலர் "பாரதி அறுபத்தாறு" என்ற பகுதியையும் சுயசரிதையின் தொடர்ச்சியாகக் கருதுவர். வேறு சிலர் பாரதியார் எழுதிய 'சின்னச் சங்கரன் கதை'யையும் அவ்வாறு கருதுவதுண்டு. அவை பற்றிய தேடலும் அவசியமானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித இனமும் புவியும்

தர்மலிங்கம் மகாதேவா
ஆசிரியர்
மட்/மகாஜன கல்லூரி.

மனித இனம் புவியின்கண் வாழ்ந்து வரும் ஏறத்தாழ மூன்று பில்லியன் உயிரினங்களில் ஒன்றாகும். எமது வாழிடமான புவி, சூரியத் தொகுதியை ஆக்கும் கிரகங்களில் ஒன்றாகும். இது ஏறத்தாழ 5 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் உருவாகியது என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். புவி ஏறத்தாழ $4\frac{1}{2}$ மில்லியன் வருடங்களுக்கு முன்னர் தோன்றியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. புவியின் ஆரம்பத்தில் முதலில் தோன்றிய உயிரினமான பக்கிரீரியா 3.8 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் தோன்றின. மிகப் பழைமையான காலங்களில் புவியைச் சூழ்ந்து ஒரு வளிமண்டலமும் இருந்தது. அப்போது கடல்களோ சமுத்திரங்களோ இருக்கவில்லை. அப்போதைய ஆரம்ப வளிமண்டலம் இப்போது எம்மைச் சூழவுள்ள வளிமண்டலமாக இருக்கவில்லை. இப்போது இருக்கும் வளிமண்டலம் ஒட்சிசன் ஏற்றும் வளிமண்டலம் என வர்ணிக்கப்படுகின்றது. இதில் நைதரசன் 78%, ஒட்சிசன் ஏறத்தாழ 20%, காபனீரொட்சைட் 0.03% மற்றும் ஈலியம், ஆகன் போன்ற சடத்துவ வாயுக்கள் மிகச்சிறிய அளவில் காணப்படுகின்றன. ஆனால் அக்காலத்து வளிமண்டலம் ஒடுக்கும் வளிமண்டலம் என வர்ணிக்கப்படுகின்றது. அதில் காபனீரொட்சைட், அமோனியா, மெதேன் ஆகிய வாயுக்கள் பிரதானமாகக் காணப்படுகின்றன. ஒட்சிசன் தனியாகக் காணப்பட்டது. காலப்போக்கில் உயிரினங்கள் கூர்ப்படைந்து பன்மடங்காக விரிவடைந்து, உயிரினப் பன்மையைத் தோற்றுவித்தன. இக்கூர்ப்பு முறையில் ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்று, சில பக்ரீரியாக்கள் சூரிய ஒளியின் சக்தியைப் பிரயோகம்செய்து நீரைப் பிரித்து H_2O காபனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையான சேதன உறுப்புக்களை உருவாக்கி ஒட்சிசன் வாயுவை வளிமண்டலத்துள் விடுவித்தமை ஆகும். ஆகவே படிப்படியாக வளிமண்டலத்தின் ஆக்க அமைவு மாற்றமடைந்து ஒட்சிசன் வாயுவின் விகிதங்களை அதிகரிக்க காபனீரொட்சைட், அமோனியா, மெதேன் போன்ற வாயுக்களின் விளைவு குறையலாயிற்று. இவ்வாறு காலக் கிரமத்தில் நாம் இப்போது காணும் ஆக்கமைவு உருவாகியது.

உயிரினங்களில் பல்வகைமைத் தன்மை விரிவடைந்து வளிமண்டலம் மேற்கூறியவாறு மாறிக்கொண்டுவரும் அதே காலக் கிரமத்தில் புவியிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. படிப்படியாகக் கண்டங்கள் தோன்றின - சமுத்திரம் உருவாகியது. நாம் இப்போது காணும் சூழலும் நீண்ட காலங்களுக்கூடாக உருவாகி தற்போதைய நிலைமையை அடைந்துள்ளது. இன்றைய தற்போதைய நிலையும் நிரந்தரம் எனக் கூற முடியாது. இந்நிலையிலும் தற்போது மாற்றங்கள் - மாறுதல்கள் நடைபெற்றுக்கொண்டே போகின்றன. கண்டங்கள் நகர புதிதாகக் கடல்கள் உருவாகின்றன. மறுபுறம் கடல்கள் மறைந்துகொண்டு போகின்றன. உயிரினங்களின் கூர்ப்பு, தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றது. மனித இனமாகிய "Homosupiens" ஏறத்தாழ *500, 000* வருடங்களுக்கு முன்னர் தோன்றியிருக்கலாம் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். நாம் இப்போது காண்பிக்கும் இயல்புகளைக் கொண்ட சனத்தொகை புவியில் பல்வேறு பிரதேசங்களில் *100,000* வருடங்களுக்கு முன்பதாக வந்தது. நாற்பதாயிரம் வருடங்களுக்கு முன்னர் cromagnon மனிதன் *9*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பிரிவு ஐரோப்பியக் கண்டத்தில் வாழ்ந்து வந்ததை விஞ்ஞானிகள் உறுதி செய்கின்றனர். பல்வேறு இடங்களில் குகைச் சுவர்களில் மனித உருவங்களும் பல்வேறு விலங்கின் உருவங்களும் சித்திரங்களாக வரையப்பட்டிருப்பதை இன்றும் காண முடியும். பெரும்பாலும் காடுகளின் ஓரங்களில் இருக்கும் புல்வெளியில் மனிதர்கள் வாழ்ந்து வந்தனர். மனித சரிதையில் மிகப்பெரும் பகுதியில் வேடுவராகவும் சுற்றாடலில் இருந்து உணவுப் பொருள்களைச் சேகரிப்பவராகவும் நாம் வாழ்ந்தோம். அக்காலத்தில் சிறுசிறு கூட்டங்களாக மனிதன் அலைந்து திரிந்தது வழக்கமாக இருந்தது. நிலையான ஒரு இடத்திலும் இருந்ததில்லை.

அன்றைய காலத்தில் மனிதனின் சராசரி வாழ்நாள் குறுகியதாக இருந்தது. நோய்கள், பெரிய விலங்குகளால் தாக்கப்படல், மனித கூட்டங்களிடையே அடிக்கடி ஏற்பட்ட சண்டைகள் இவை யாவும் சேர்ந்து மனித வாழ்நாள் நீடிப்பதைக் குறைக்கும் காரணிகளாக இருந்தன. எங்களுக்கு நெருங்கிய பாரம்பரியத் தொடர்புடைய மனிதக் குரங்குகளின் சராசரி வாழ்நாளை ஒத்தது போல் மனிதனின் வாழ்நாள் ஏறத்தாழ 25 - 30 வருடங்கள் மட்டுமே இருந்தது. எனவே, மனிதனின் மொத்தச் சனத்தொகை பல இலட்சம் ஆண்டுகளாக அதிகரிக்கப்படவில்லை. முதன்முதலாக மனிதன் இயற்கையோடு இசைந்த வாழ்க்கை முறையை விட்டு விலகியது ஏறத்தாழ 8,000 முதல் 10, 000 வருடங்களுக்கு முன்னதாகும். அக்காலத்தில் ஒரு மாபெரும் மாற்றம் ஏற்பட்டது. வேடுவனாக வாழ்ந்தவன் விவசாயியாக மாறினான்.

விவசாயம் செய்வதற்கு சுற்றாடலை மாற்றியமைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. புல் வெளிகளையும் காட்டுப் பிரதேசங்களையும் தீக்கிரையாக்கினர். இவ்வாறு வெறுமையாக்கப்பட்ட இடங்களில் பயிர்ச் செய்கை நடந்தது. பயிர்களைப் பாதுகாப்பதற்காக அலைந்து திரியும் வாழ்க்கை முறையைக் கைவிட்டு நிலையான சிறுசிறு கிராமங்களை அமைத்து அங்கே புதுமுறையான வாழ்க்கை முறையை ஆரம்பித்தான். இவ்வாறு சுற்றாடலில் மனிதனால் ஏற்படும் தாக்கங்கள் அதிகரித்தன. சனத்தொகை சிறிது உயர்ந்தது. அழுக்குப் பொருள்கள் பரவலாக சூழலை அடைந்து சிலசில இடங்களில் குவிய ஆரம்பித்தது. இவ்வாறு பழைய முறைகளை மனிதன் கைவிடும் வழக்கம் படிப்படியாக அதிகரித்துக்கொண்டு போனது. இவ்வாறு நடத்தை முறை மாறியதன் காரணமாக அலைந்து திரிந்து வேடுவராக வாழ்ந்து வந்த 5 இலட்சம் வருடங்களில் மனிதனின் சனத்தொகை அதிகம் வளரவில்லை. கி.மு. 8000 வருடமளவில் சனத்தொகை புவி முழுவதும் 8 மில்லியன் ஆக மட்டும் இருந்தது. கி.பி.1ஆம் நூற்றாண்டில் சனத்தொகை அதிகரித்தது. 300 மில்லியனாக இருந்திருக்கலாம் எனக் கணிக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து நடத்தை முறைகளிலும் வாழ்க்கை முறைகளிலும் காலத்துக்குக் காலம் மாபெரும் புரட்சிகள் ஏற்பட்டுள்ளன. இவற்றுள் 18ஆம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சி, 20ஆம் நூற்றாண்டில் தொழில் புரட்சி என்பன குறிப்பிடத்தக்கவை. இப்படியான நடத்தை முறை புரட்சிகளின் விளைவாக கடந்த 500 ஆண்டுகளில் ஒருபோதும் காணப்படாத வகையில் சனத்தொகை அதிகரிப்பு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில்தான் விஞ்ஞானிகள்கூட மனிதனுக்கும் சுற்றாடலுக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு என்பதனைப் படிப்படியாக உணரத் தொடங்கினர். 20ஆம் நூற்றாண்டின் போது சகல விஞ்ஞானத் துறைகளிலும் துரிதமான முன்னேற்றமும் விருத்தியும் ஏற்பட்டது போலவே சூழலிலும் முன்னேற்றங்கள் உண்டாகின. மனிதனின் கைத்தொழில், தொழில்நுட்பம், பொருளாதார வளர்ச்சி, விவசாயம், வாழ்க்கை முறைகள், நடத்தைகள் இவையாவும் ஒன்று சேர்ந்து சூழலைப் பெரிதும்தாக்கி தீங்கு விளைவிக்கக்கூடிய திசைகளில் பெரும் மாற்றத்தை உண்டுபண்ணுகின்றன என்பதனை விஞ்ஞானிகளோடு சாதாரண மக்களும் உணரத் தொடங்கிவிட்டனர். மேற்கத்தய நாடுகளில் இதைப் பற்றிய விளக்கங்கள் அரசாங்கங்களிடமும் பொது மக்கள் மத்தியிலும் படிப்படியாக வளரத் தொடங்கின. தற்போது சுற்றாடலில் சில பயங்கரமான மாற்றங்கள் ஏற்படுவதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்த வகையில் உலகளாவிய ரீதியில் தாக்கம் ஏற்படும் செயற்பாடுகளாகப் பின்வருவனவற்றை நோக்கலாம்.

1. புவியின் வெப்பநிலை அதிகரிப்பு.

2. ஓசோன் படை குறைதல்.

3. காடுகள் - விசேடமாக அயன மண்டலக் காடுகள் அழிக்கப்படல்.

புவியின் வெப்பநிலை அதிகரிப்பினை நோக்கும் போது முதலில் பச்சை வீட்டு விளைவு அதாவது இயற்கையில் நடைபெறும் காபன் வட்டத்தைப் பற்றியும் மனித செயற்பாடுகளால் அவ்வட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் விளக்குதல் அவசியம். கைத்தொழில் புரட்சியைத் தொடர்ந்து வளியிலுள்ள CO_2 வாயுவின் அளவு படிப்படியாக அதிகரித்துள்ளது. இதன் தற்போதைய அளவு ஏறத்தாழ 395 P.P.M ஐ அடைந்துள்ளது. வாகன வாயு, கைத்தொழில் பக்க விளைவு, காடுகள் அழிக்கப்படல், தீயிடல், மனித நாகரிகச் செயற்பாடு இவை யாவும் வளியில் CO_2 இன் அளவைக் கூட்டுகின்றன. இவ்வாறு CO_2 இன் அளவு கூடுவதால் புவியின் வெப்பநிலை அதிகரிக்கிறது. சூரியனின் வெப்பமும் ஒளியும் புவியை வந்தடைகிறது. ஒளியின் ஒரு பகுதி தாவரங்களால் ஒளித்தொகுப்பு முறையில் காபோதரைற்று (மாப்பொருள்) ஆகப் பிடிக்கப்படுகிறது. மற்றொரு பகுதி வெப்பக் கதிர் வீச்சுக்களாக மீண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்டவெளியில் தெறிக்கப்படுகிறது. வளியில் CO_2 இன் அளவு அதிகரிக்கும் போது அண்டவெளிக்குத் தெறிக்கப்பட வேண்டிய வெப்பம் வளியினால் மீண்டும் புவியை நோக்கித் திருப்பப்படும். எனவே, புவியின் சராசரி வெப்பநிலை அதிகரிக்கும்.

இவ்வாறு புவியின் வெப்பநிலை அதிகரிப்பால் ஏற்படும் மாற்றங்களை ஆராயும் போது நீர் போன்ற திரவங்கள் வெப்பமேற்றப்படும் பொழுது அவற்றின் கனவளவு அதிகரிக்கும். உலகத்தின் கடல்கள் யாவும் கனவளவில் அதிகரிப்பதால் கரையோரங்களில் நீர் மட்டம் உயர்வது நிச்சயம். கடல் மட்டத்திலும் பார்க்க 3 தொடக்கம் 4 அடி உயரத்திற்குச் செல்வதான கரையோரங்கள் படிப்படியாகக் கடல் நீரினால் மூடப்பட்டு அத்தேசமே புவியிலிருந்து மறைந்துவிடும். அங்கு வாழும் மக்கள் உயிரினம் வேறு இடத்திற்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும். வருங்காலத்தில் கரையோரப் பரப்புக்கள் குறையும். நீர் மட்டம் குறைவது மடடுமன்றி வெப்பநிலை உயர்வினால் ஏற்படும் விளைவுகள் வேறு பலவும் உண்டு. காலநிலையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு மழைக் காலங்களில் பெய்யும் மழையின் அளவும் அதிகரிக்கும்.

வறண்ட பிரதேசங்களில் வறட்சி நிலை கூடும். வறட்சி, வெள்ளம், சூறாவளி போன்ற இயற்கை அழிவுக்கு ஏதுவானவை மிகவும் சாதாரணமாக நிகழும். வெப்பநிலை மேலும் அதிகரித்தால் ஆட்டிக், அந்தாட்டிக் பகுதிகளில் உள்ள உறைந்த பனிப்பாறைகள் உருகத் தொடங்கிவிடும். அப்படி ஏற்படுமாயின் கடல் நீரினால் மனிதனின் அழிவுக்கு முற்றுப்புள்ளி இடப்படும் என்றுதான் கூற வேண்டும். மேற்கூறிய பயங்கரமான மாற்றங்கள் ஏற்படுவதைத் தடுக்க மனிதனால் முடியுமா என்பது புரியாத விடயமாகும். எந்த நடைமுறைகளைக் கையாண்டு இதனை தடுக்க முடியுமா என்றால் அதாவது மனித வர்க்கம் அழியாமல் பாதுகாத்துக் கொள்வதற்கு எமது வாழ்க்கை முறைகளில் நடத்தை முறைகளில் பாரிய மாற்றங்கள் எற்படுத்த வேண்டும். எந்தச் செயற்பாட்டு முறைகளிலும் வளியில் சேரும் CO_2 இன் அளவு அதிகரிக்கப்படுகிறது. அச்செயற்பாட்டு முறையை மாற்ற வேண்டும், நிறுத்த வேண்டும். நடத்தைகளை மாற்றிக்கொள்ளச் சாத்தியமில்லை என்பதே ஐயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து ஓசோன் படை குன்றிப்போதல். புவியைச் சுற்றிள்ள பிரதான வாயுக்களான நைதரசன், ஒட்சிசன், காபனீரொட்சைட் என்பன ஆகும். புவியின் தரையின் மேல் 10 மைல் முதல் 30 மைல் வரை வளியில் ஓசோன் படை உள்ளது. இப்படை புவியினால் எங்கும் சூழவுள்ளது. சூரியனில் இருந்து புவியை வந்தடையும் UV கதிர்கள் ஓசோன் படையினால் வளியை ஊடுருவுவது தடுக்கப்படுகிறது. புவியில் உயிரினங்கள் உருவாகிய ஆதிகாலங்களில் UV கதிர்கள் அதற்கு ஏதுவான முறைகளில் உதவின என்பது உண்மையே. ஆனால் தற்காலங்களில் வாழ்ந்து வரும் உயிரினங்களுக்கு UV கதிர்கள் புற்றுநோய் போன்ற பெரும் தீங்கினை விளைவிக்கும் என்பது திண்ணம். அதாவது உறைபனி காலத்தில் வருடா வருடம் ஓசோன் படையில் பெரிய தொரு துவாரம் தோன்றுகின்றது என்பதும் ஒவ்வொரு வருடமும் அது தோன்றுவது மட்டுமல்ல படிப்படியாக ஓசோன் குன்றுவதனால் துவாரத்தின் அளவு அதிகரிக்கின்றது என்பதும் உண்மை. அதாவது Choro Floro Carbons (C.F.C) எனும் இரசாயனப் பொருள்களே ஓசோன் படையைத் தாக்கி ஒட்சிசனாக மாற்றிவிடுவதனாலேயே ஓசோன் படை குன்றுகிறது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். ஆரம்பத்தில் அண்டாட்டிக்காவில் காணப்பட்ட ஓசோன் படைத் துவாரம் தற்போது ஐரோப்பாக் கண்டங்களைச் சேர்ந்த வளிமண்டலப் பகுதியிலும் காணப்படுகின்றது. தற்போது வெப்பநிலை மாற்றம் போன்றவற்றைவிட தற்போது UV கதிர்களின் செறிவும் நாளாந்தம் குறிப்பிடப்படும் அச்சுறுத்தல்களில் ஒன்றாகிறது.

அடுத்து, உலக சுற்றாடலுக்குப் பாரிய தீங்கு விளைவிக்கக்கூடிய மனித தாக்கம் ஒன்று, விருத்தியின் பெயரில் காடுகள் அழிக்கப்படுவதேயாகும். காடுகள் அழிக்கப்படுவதில் ஏற்படும் விரும்பத்தகாத தாக்கங்கள் ஏராளம். ஆனால் உலகம் எங்கும் இலங்கை உட்பட காடுகள் அதி விரைவாக மறைகின்றன. எமது நாட்டிலும் அண்மைக் காலங்களில் 50%ற்கு மேலான நிலப்பரப்பில் வளமிக்க காடுகள் இருந்ததை நாம் அறிவோம். தற்போது எஞ்சியிருக்கும் காடுகளில் மொத்தப் பரப்பளவு ஏறத்தாழ 20% ஆகும். காடுகள் யாவற்றிலும் அயன மண்டலக் காடுகளே முக்கியமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் அக்காடுகளிலே உயிரினப் பன்மையின் உச்சத் தோற்றம் தென்படுகின்றமையால் இவ்வயன மண்டலக் காட்டுத் தொடர் தற்போது வாழ்ந்து வரும் மனித சமுதாயத்துக்கும் எதிர் நோக்கும் யுகங்களிலும் தோன்ற இருக்கும் சமுதாயத்திற்கும் உரியது மட்டுமல்ல சூழலைப் பாதுகாக்க இயங்கும் இன்றியமையாததொரு தொகுதி ஆகவும் விளங்குகிறமையேயாகும்.

தற்போது வாழ்ந்து வரும் ஒவ்வொரு அங்கியினமும் தமது உடலில் அடங்கி இருக்கும் பாரம்பரியப் பொருள், அது தோன்றிய நாள் முதல் இன்று வரை தடைப்படாத ஒரு தொடரில் பல மில்லியன் வருடங்களாக எமக்கு நன்கு சேர்ந்துள்ள ஒரு பாரம்பரியப் பொருள் ஆகும். மனிதனின் உடலில் கூட 3.5 மில்லியன் வருடங்களாக தொடர்ந்து வரும் பாரம்பரியப் பொருள் அடங்கியுள்ளது. மனித இனம் புவியை விட்டு மறைந்தால் இவ்வாறு நீண்ட காலமாக உருவாகி கூர்ப்பின் படியாக மாற்றமடைந்து வந்த பாரிய பொருள் D.N.A முற்றிலும் அழிந்துவிடும் மனிதன் தனியே ஒரு இனம். ஆனால் அமேசன் மழைக்காடுகளிலும் காண முடியாத ஆயிரக்கணக்கான தாவர விலங்கு வகை இனங்கள் தற்போது உண்டு. காடுகள் அழிந்தால் மனிதனாலேயோ இயற்கை அன்னையாலேயோ இனி ஒரு காலமும் முன் வாழ்ந்து வந்த இனம் அவற்றில் அடங்கி இருந்த இதிகாசப் பாரம்பரியப் பொருளினையோ மீண்டும் உருவாக்க முடியாது.

மரங்களை எரித்து அழிக்கும் போது பெருமளவில் காபனீரொட்சைட் வளிமண்டலத்துள் விடுவிக்கப்படுகின்றது. எனவே, அதிகமாக இருக்கும் காபனீரொட்சைட்டின் அளவு **உலக சூழல் வெப்பமேற்றப்படல்** எனும் பிரச்சினையை அதிகரிக்கச் செய்கின்றது. தாவரங்கள் காபனீரொட்சைட்டினை உறிஞ்சி எடுத்து ஒளித்தொகுப்பினால் அதனை நிலைப்படுத்தி சேதனவுறுப்புப் பொருள்களை உருவாக்கிப் பெருமளவில் காபனீரொட்சைட் வளியிலிருந்து உறிஞ்சி எடுக்க உதவுகின்றன. மாபெரும் நிலப்பரப்புக்களை மூடி இருக்கும் அமேசன் மழைக் காடுகளை அழித்தால் அதுவும் வளியில் இருக்கும் காபனீரொட்சைட்டின் அளவை அதிகரிப்பதற்கு ஏதுவாகும். காடுகளிலிருந்து நீராவி உருவாகி வளியை அடைந்து வளியில் அடங்கியுள்ள நீராவிச் செறிவை அதிகரிக்கச் செய்கின்றது. வெப்பநிலையை மாற்றுகின்றது. காடுகள் அழிக்கப்படும் நிலையில் வளியின் முக்கிய சில காரணிகள் மாற்றமடைய வளியின் இயல்புகளும் மாறி உலக கால நிலையை நிர்ணயிக்கும் வளியின் ஓட்டங்கள் பெருமளவு மாற்றமடையலாம். எனவே, அமேசன் மழைக்காடுகள் தீக்கிரையாக்கப்படல் பிரேசில் நாட்டை மட்டுமல்ல முழு உலக சூழலையும் தாக்கக் கூடிய பெரும் மாற்றமொன்றாகக் காலப்போக்கில் தோன்றலாம்.

அறிந்தோ அறியாமலோ மனித இனம் உலக சுற்றாடலை முற்றிலும் மாற்றிவிட்டது என்பதையும் மனிதன் வாழக்கூடிய சூழல்கள் அழிந்து போக ஏதுவான காரணிகள் பற்றியும் அறிந்தோம். புவியில் வாழும் பல இனங்களில் மனிதன் தனியே ஒரு இனம் ஆகும். மூளையின் விருத்தியின் பெயரால் மனிதன் புவியின் வளங்களை நியாயமான முறையில் உபயோகித்து மற்றும் உயிரினங்களுடன் இயைபான நிலையில் வாழ்ந்தால் பல யுகங்கள் வாழ முடியும். ஆனால் மனித சமுதாயத்தின் தற்போதைய மனப்பான்மையும் நடத்தை முறைகளும் தொடர்ந்து நிலைக்காமல் வாழ்வதிலேயே அக்கறைகொள்கின்றன. இந்த நிலைமைகள் தொடர்ந்தால் அழிவு நிச்சயம். ஆதலால் இந்நிலைமைகள் மாற்றப்படவேண்டும். இவ்வாறு மாறினால் மட்டுமே மனித இனம் அழியாது நீண்ட காலம் தொடர்ந்து நிலைத்திருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் தமது வகுப்பறைக் கற்றலில் பின்தங்குவது ஏன்?

ஜே.சகாயநாதன்
ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் (வர்த்தகம்)
வலயக் கல்வி அலுவலகம்
மட்டக்களப்பு

"இந்தப் பிள்ளைகளுக்கு எப்படித்தான் புத்தி சொன்னாலும் கொஞ்சம்கூட திருந்துதுகள் இல்லை"

"நான் ஒரு ரீச்சர் என்று இதுகள் மதிக்குதுகள் இல்லை, வீட்டுப் பழக்கவழக்கங்கள் சரியில்லை"

இவ்வாறான புலம்பல்களும் கருத்துக்களும் இன்றும் நமது செவிகளில் வீழ்வது சாதாரண நிகழ் வுகளாகிவிட்டன. சில தசாப்தங்களுக்கு முன்பும் இவ்வாறான முணுமுணுப்புக்கள் கேட்டனவாயினும் அவை ஒப்பீட்டளவில் மிகக்குறைந்தளவில் காணப்பட்டன.

"உங்களது கல்விப்பணிச் செயற் பாடுகளின் ஊடாக நீங்கள் பெற்ற அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்" என்று கேட்டுக் கொண்ட எனது நண்பரின் வேண்டுகோளுக்காகச் சில விடயங்களைச் சுருக்கமாக இங்கே குறிப்பிடலாம் என நினைக்கின்றேன்.

கால ஓட்டத்துடன் இணைந்து உலகிலுள்ள அனைத்திலும் வளர்ச்சியும் தேய்வும் இயற்கையாகவே நிகழ்கின்றன. வயதின் உயர்வுடன் மாணவர்களிலும் தொடர்ச்சியாகப் பல்வேறு வகையான விருத்திகளும் மாற்றங்களும் ஏற்படு கின்றன. பிறக்கும் குழந்தை தனது சூழல், பரம்பரைப் பண்புகள், போசனை போன்றவற்றுக்கு ஏற்ப உடல், உள, சமூகம் சார்ந்த விருத்திகளுக்கு உள்ளாகின்றது. இவற்றின் கூட்டு விளைவாக அறிவாற்றல், திறனாற்றல், மனவெழுச்சி போன்றன ஏற்படுகின்றன. இவை மாணவரில் ஒத்த, வேறுபட்ட முரணான நடத்தைகளை ஏற்படுத் துகின்றன. பொதுவாக இவ்வியல்பு தனியாள் வேறுபாடு என அழைக்கப் படுகின்றது.

ஒரு பாடசாலை தனது சூழற் சமூகத்திலுள்ள குடும்பப் பிள்ளைகளை உள்வாங்கி மீண்டும் அவர்களை இளைஞர்களாக அதே சமூகத்திலேயே வெளிவிடுகின்றது. பிள்ளைகள் உட்புகும் பொழுது இருந்த சமூகமானது, பிள்ளைகள் இளைஞர்களாக வெளிவரும் பொழுது பல்வேறு காரணிகளின் தாக்கங்களுக்கு உள்ளாகி மிக வேகமாக தொழினுட்ப ரீதியான மாற்றங்களுக்கு ஊடாக நிகழ்வனவாகக் காணப் படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமடைந்ததாகக் காணப்படுகின்றது. ஏறக்குறைய 10 வருட பாடசாலைக் காலங்களில் சமூக மாற்றங்கள் பல ஏற்பட்டுவிடுகின்றன. இம்மாற்றங்கள் பெரும்பாலும் அரசியல், பொருளாதார, தொழினுட்ப, தகவல் தொடர்பாடல் மாணவர்கள் தமது கட்டிளமைப் பருவத்தினை அடையும் பொழுது தமது விருப்பு, வெறுப்பு, இயலுமை, இயலாமை, தமது சூழல் முதலியவற்றின் அடிப்படையில் வெளிச் சமூகத் தேவைகளையும் அதாவது வேலை வாய்ப்பு, தொழிற்றிறன், தகைமைகள், தேவைகள் போன்றவற்றையும் பாடசாலைக் கலைத்திட்டத்தினூடாக இடம்பெறும் கற்பித்தல் நடவடிக்கைகளையும் ஆசிரியரின் கற்பித்தல் திறன்களையும் வழிகாட்டல்களையும் ஒப்பிடத் தலைப்படுகின்றனர். இவ்வேளையில் பாடசாலைக் கல்வியின் முடிவில் தாம் அடையப் போகும் தேர்ச்சிகள் பொருத்தமற்றவை அல்லது பெருமளவில் தமக்குப் பயன்படப் போவதில்லை என உணரும் போது அதிருப்தியடைகின்றனர். இதன் விளைவாக வகுப்பறையில் ஆசிரியரிடமும் பாடசாலை அலுவலர்களிடமும் எதிர்நடத்தைப் போக்குகளை வெளிக்காட்டுகின்றனர். அதாவது கீழ்ப்படியாமை, எதிர்ப்பான மனவெழுச்சி, ஏற்றுக்கொள்ளாமை, மனமுறிவு போன்றனவற்றை வெளிப்படுத்துகின்றனர். மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு முதலியவற்றை உச்சப்படுத்தும் ஆசிரியர்களின் ஆற்றல்கள், வழிப்படுத்தல்கள், செயற்பாடுகள், தற்கால மற்றும் எதிர்காலக் கல்விப் பயன்பாடுகள், வேலைத்திறனுக்கான தேவைகள் முதலியவற்றைத் தெளிவுபடுத்துவதன் மூலம் கல்வியில் பற்றினையும் ஆசிரியரில் மதிப்பையும் அதிகரிக்கச் செய்தல் அவசியமாகும்.

கற்பித்தல் என்பது பிரதானமாக இருப்பினும் கற்றலுக்குத் தயார்படுத்தல் என்பது பொதுவிலமைதல் இன்றைய தேவையாகும். ஏனெனில் பல்வேறுபட்ட நல்லாரோக்கியமற்ற சமூகத்தில் இருந்து வந்து பாடசாலையில் ஒன்றுசேரும் மாணவர்கள் பல்வேறு எதிர்பார்ப்புகள், நடத்தைக் கோலங்கள், சுய ஆற்றல்களைக் கொண்டவர்களாகக் காணப்படுவார்கள். ஆசிரியர் அவர்களைப் பொதுமைப்படுத்தி கற்றலுக்குத் தயார் செய்து கற்றலில் சுயவிருப்பினை ஏற்படுத்தக்கூடியதான கற்பித்தல் நுட்பங்களைக் கையாளல் வேண்டும். இதற்காகப் பாடசாலையில் உள்ள திறமையான ஆலோசனை வழிகாட்டல் வளவாளர்களின் ஊடாக இனங்காணப்பட்ட பிரச்சினைக்குரிய மாணவர்களை ஆற்றுப்படுத்தல் செய்வது மாணவரை நல்வழிப்படுத்த இலகுவாக அமைகின்றது.

வகுப்பறையில் மாணவன் ஒருவனின் அல்லது மாணவி ஒருத்தியின் நடத்தைக் கோலங்களைத் தீர்மானிக்கும் காரணிகளாகப் பின்வருவனவற்றையும் கருத முடியும். இனம், சமயம், சாதி, மொழி, சமூக மதிப்பு, சமூக அமைப்பு, தமது எதிர்பார்ப்புக்கள் பெற்றோர்களின் பிள்ளைகள் சார்பான எதிர்பார்ப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியன. எனவே, வேகமாக வளர்ந்தும் மாறியும் வரும் தொழில் உலகிற்குப் பொருத்தமாக மாற்றங்களைப் புதுப்பித்துக் கொண்டு தொழில் வழிகாட்டல்களை வழங்குவதும் கலைத்திட்டத்தில் துரித மாற்றங்களை ஏற்படுத்தி மாணவர்களைத் தயார்ப் படுத்துவதன் மூலம் அவர்களைப் பற்றுடனும் பணிவுடனும் கற்கத் தூண்டுவது சாத்தியமானதாக அமையும்.

தற்காலத்திற்குப் பொருத்தமான வகையில் தம்மை இற்றைப்படுத்திக் கொள்ளத் தவறிய வளர்ந்தவர்கள் புதிய தொழினுட்ப சாதனங்களைக் கையாளவும் தம்மையும் தமது சூழலையும் முகாமைத்துவம் செய்ய முடியாமலும் சிரமப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வகையில் தற்போதுள்ள சிரேஷ்ட ஆசிரியர்கள் பலர் தமது சூழலில் தமது காலத்தில் தாம் கற்றுக் கொண்ட அணுகுமுறைகள், வழிகாட்டல்கள், கற்பித்தல் முறைகளை இக்கால மாணவர்கள் மீது பிரயோகிக்கும் பொழுது இக்கால மாணவர்களால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறான நிலைமைகள் மாணவர்களை அக்குறித்த ஆசிரியர்களிடமிருந்து புறந்தள்ளுகின்றன. இதை உணராது மாணவர் மீது திணிப்புக்களை நிர்ப்பந்திக்கும் அத்தகைய ஆசிரியர்கள் மாணவர்களின் ஏளனத்திற்கு உள்ளாகும் சூழ்நிலைகள் உருவாகின்றன. எனவே இவற்றையும் ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தற்கால புதிய தொடர்பாடல் ஊடகங்கள் வாயிலாக நடைமுறை உலகின் நிகழ்வுகளை மாணவர்கள் மிக விரைவாக விளங்கிக் கொள்வதோடு அவற்றுக்கு ஏற்ப நடக்கவும் தலைப் படுகின்றனர். உதாரணமாக, தொலைக் காட்சிகளில் காண்பிக்கப்படும் சில வகையான காட்சிகளும் முரண்பாடான நடத்தைகளை உருவாக்கம் செய்கின்றன. கற்றலின் அவசியத்தைக் குறைக்கும் காட்சிகள், ஆசிரியரின் கௌரவத்தைக் குறைக்கும் - கிண்டல் செய்யும் காட்சிகள், ஆசிரியர்கள் செயற்படும் பிழையான செயற்பாடுகளை விமர்சிக்கும் காட்சிகள், பாடசாலைச் சீருடையணிந்த மாணவர்கள் ஒழுங்கீனமாக நடப்பதைச் சித்திரிக்கும் காட்சிகள், பாடசாலை மாணவர்களின் காதல் விவகாரங்களை நியாயிக்கும் காட்சிகள் போன்றனவற்றை இங்கு கோடிட்டுக் காட்ட முடியும். இத்தகைய காட்சிகள் பற்றிய கருத்துப் பரிமாற்றங்களை நிகழ்த்துவதன் மூலம் மாணவர் நடத்தைகளில் நேரான சீராக்கத்தை ஏற்படுத்தலாம்.

சில சமயங்களில் மாணவர் சிலர் கற்றலில் இருந்து விலகியிருக்கும் நிலைமைகள் காணப்படுகின்றன. இவ் வேளைகளில் ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாடுகளில் அதிக கவனம் வெலுத்தாது இருக்கின்றனர். இத்தகைய சந்தர்ப்பங்களில் பிள்ளையின் பின்னணி பற்றி முதலில் ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். மாணவர்களின் கீழ் நிலைத் தேவைகள் திருப்தி செய்யப் படாத பொழுது அவர்கள் மனக்கசப்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக்கஷ்டம், மனமுறிவு, ஊக்கமின்மை, கவனக்குறைவு போன்ற தன்மைகளைக் கொண்டிருக்கலாம். இவ்வாறான பிரச்சினைகளில் அவதிப்படும் பிள்ளைகளின் தேவைகளைக் கவனத்தில் கொள்ளாது கற்றலில் கவனம் செலுத்துமாறு வற்புறுத்தப்படும் பொழுது ஆசிரியரை விட்டு மாணவர் உள ரீதியாகவும் விலகிச் செல்லும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கின்றன.

மாணவர்கள் தமது திறன்களை வெளிக்காட்ட இயலுமாக உள்ள போது நேர் மீள வலியுறுத்தல் பெற்று மேன்மையடைகின்றனர். சுயகணிப்பு, சுயகௌரவம், சாதகமான சூழ்நிலை முதலியன, மேலும் கற்கும் ஆற்றலையும் ஆர்வத்தையும் தூண்டுகின்றன. இத்தகைய வாய்ப்புக்களை வழங்கும் ஆசிரியர்களை மிகவும் நேசிக்க மாணவர்கள் தவறுவதில்லை. உமக்கு திறமைகள் இயல்பாகவே உள்ளன. நீர் கெட்டித்தனம் உள்ளவர். நீர் தனித்தன்மை வாய்ந்தவர் என்றவாறு உற்சாகமூட்டுதல் மூலம் மாணவர்களை முற்றுமுழுதாக கற்றலில் சுய விருப்புடன் ஈடுபடச் செய்தல் முடியும். மாணவர் ஒவ்வொருவரும் தம்மைப் பற்றி எப்பொழுதும் உயர்வான அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கச் செய்தல் வேண்டும். சுய கணிப்பானது பிரதானமாக ஒருவர் தன்னை முக்கியமானவர் எனக் கருதும் போதும் தனது திறமைகளில் தான் நம்பிக்கையுறும் போதும் தனது சூழலைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் தன்னிடமுள்ளது எனத் திடமாக நம்பிக்கையுறும் போதும் ஆளுமை மிக்கவனாக உணர்ந்து கொள்வதுடன் சாதனையும் புரிகின்றார்.

ஆசிரியர் ஒருவரின் கற்பிக்கும் ஆற்றல், பாட நிபுணத்துவம், குரல் வளம், பேச்சாற்றல், விளைதிறனுடைய நடவடிக்கைகள் என்பன மாணவரிடம் மதிப்பையும் கீழ்ப்படிவையும் பெற்றுத் தருவதுடன் அவரது பாடத்தைக் கற்கும் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. அதே வேளை இவற்றில் நிறைவற்ற ஆசிரியர் மீது மாணவர் கொள்ளும் நன்மதிப்பு வீழ்ச்சியடைவதுடன் வகுப்பறையில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான வாய்ப்புக்களையும் குறைவடையச் செய்கின்றது.

நன்கு திட்டமிடப்பட்ட செயற் பாடுகளினூடாகக் கற்பித்தல் அதிக வெற்றியைப் பெற்றுத் தருகின்றது. மாணவர்களின் மனப்போக்கு, அறிவு மட்டம், திறன், கிரகித்தல் பாங்கு, நினைவாற்றல், மீளெடுத்தல், எழுத்துருவாக்கம், காலம், பொருளாதார மட்டம் என பல்வேறு பின்னணிகளை கருத்தில் கொண்டு கற்பித்தற் செயற்பாடுகள் திட்டமிடப்படல் வேண்டும். ஆசிரியர் தனது தொழில் வாண்மைத் தேர்ச்சியின் நிமித்தம் தமது உள்ளத்தில் மாத்திரம் திட்டத்தைக் கற்பனையில் கொள்ளாது அதனை எழுத்துருவில் ஆவணமாக்கும் பொழுது அதன் விளைதிறன் உயர்வாகக் காணப்படும் என்பதையும் பாடசாலை முகாமைக்கு ஒத்துழைப்பாகவும் ஏனைய துறைசார் ஆசிரியருக்கு உதவுவதாகவும் அமைகின்றது என்பதையும் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

எனவே, ஆசிரியரின் கற்பித்தல் வெற்றியானது அவரது செயற் பாட்டிலேயே தங்கியுள்ளது என்பதை கவனத்தில்கொள்ளுதல் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கு. சிவராஜா
வளவாளர்
(பாடசாலை விளையாட்டு விருத்தி)
வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

நான் பேசும் பேச்சு

ஒருவரின் வாழ்க்கையின் சிறப்புத் தன்மையில், அவரது பேச்சுத் திறன்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இங்கு பேசுநரையும் கேட்குநரையும் இணைக்கும் சங்கிலித் தொடராகப் பேச்சு விளங்குகின்றது. இச்சங்கிலியின் ஆயுளானது, கேட்குநரது மனஎழுச்சியைத் தன்பால் ஈர்த்தற் திறனைச் சார்ந்துள்ளது. பேச்சின் சிறப்பு அதிகரிக்கும் பொழுது, அவர் கூறுபவை இலகுவாக கேட்குநரால் விளங்கப்படுகின்றது. அவரது ஆவல் தூண்டப்படுகின்றது. குரலில் இனிய தன்மையைப் பேணுதலானது சிறந்த பேச்சின் இலட்சணமாக விளங்குகின்றது. ஒரு ஆசிரியரின் பேச்சு அவருடைய கற்பித்தலை வெற்றிகரமாக அமைப்பதில் மிக முக்கியமான பங்கினை வகிக்கின்றது. மாணவர்முன் பேசுவதன் மூலமாக அவர்களின் கவனத்தை ஈர்த்தல், வகுப்பறை முகாமைத்துவத்தில் பிரதான பாகத்தை வகிக்கின்றது. பேச்சின் ஊடாக மாணவர் சிந்தனையைத் தூண்டுவது என்பது, அவரது சுயகற்றற் செயற்பாடுகளை மேம்படச் செய்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, ஆசிரியர்கள் தாம் கூறும் விடயங்களில் அதிக விடய ஞானத்தைக் கொண்டிருத்தல் அவர்களுக்கு நன்மை பயக்கும் விடயமாக அமைகின்றது. இதன் பொருட்டு பேசுநர் தனது அறிவினையயும் குறித்த விடயத்தைக் கையாளும் திறனையும் தன்னுள் அதிகரித்துக் கொள்ளல் அவசியமான தாகின்றது.

குரலின் தொனியை அதிகரிப்பதுவும் குறைப்பதுவும் இடையிடையே சரியான இடைவெளிகளில் நிறுத்திக் கூறுவதுமாகிய செய்கைகள், சொல்ல முயலும் கருத்தில் அதிக தெளிவை ஏற்படுத்துகின்றது. அடுத்ததாக சொற்களை அழுத்தி உச்சரித்து வலியுறுத்துவதாலும் நிறுத்தக்குறிக்கு ஏற்ப நிறுத்திக் கூறுவதாலும் முன் கூறியவற்றில் கருத்து மாற்றங்களை உண்டாக்கவும் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான இடங்களில் மீளக்கூறலின் மூலமாகச் சொல்ல விரும்பும் கருத்தை ஆழமாக உணர்த்தக்கூடியதாகவும் உள்ளது. அத்தகைய கருத்தை வெளிப்படுத்தும் சொல்லினை அல்லது சொற்களை அல்லது வாக்கியத்தினை முறையாகப் பயன்படுத்துதல் வேண்டும். மீளக் கூறலானது சில சந்தர்ப்பங்களில் கேட்குநரை விசனத்தில் கொண்டு செல்லவும் ஏதுவாக அமைந்து விடுகின்றது. எனவே, மீளக்கூறலை முறையாகப் பயன்படுத்தலில் தேர்ச் சியினை அடைதல் வேண்டும். ஒரே விடயத்தைப் பல்வேறு இடங்களில் திரும்பத் திரும்பக் கூறுதலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு வாக்கியத்தை ஒருவர் கூறும் பொழுது அதன் பாவம், கூறும் விடயம் வெளிப்படுத்தும் அர்த்தமானது - வெறுப் புடனா அன்றி விருப்புடனா அன்றி அன்புடனா அன்றி கருணையுடனா அன்றி கட்டளையுடனா அன்றி கீழ்ப்படிவுடனா என்பது உச்சரிப்பு முறைகளினாலும் அவரது உடல் மொழி அசைவுகளின் மூலமாகவும் வேறுபடுத்தக் கூடியதாகக் காணப்படுகின்றது. உச்சரிப்பின் பொருத்தப்பாடானது பேச்சு மொழித் திறனில் தெளிவை ஏற்படுத்துகின்றது. அதே போன்று கூறும் வாக்கியத்தின் முதனிலை, இடைநிலை, இறுதி நிலைக் கூறுகளை முறையாகத் தொடர்புபடுத்திக் கூறும்பொழுது கருத்தில் தெளிவு பிறக் கின்றது. மாணவர் மத்தியில் பேசுதல், கட்டளையிடுதல், வினவுதல், பாடங்களை அறிமுகம் செய்தல், அவற்றை விளக்குதல் போன்ற, பேச்சுடன் சம்பந்தப்பட்ட சகல செயற்பாடுகளிலும் மாணவருக்கு முன்மாதிரியாக ஆசிரியர் விளங்க வேண்டும். இதன் பொருட்டு உடல்மொழிப் பயன்பாட்டை விருத்தி செய்துகொள்ளுதலுடன் அதனைப் பொருத்தமான இடத்தில் முறையாகப் பயன்படுத்துதலும் வேண்டும். மொழி அசைவுகளையும் உடல் மொழி நடிப்பினையும் வேறுபடுத்துவதன் ஊடாக வெவ்வேறு அர்த்தங்களைப் பிறப்பிக்கக் கூடியவாறு ஒரே கூற்றை மாற்றுதல் முடியும்.

எடுத்துக்கொண்ட கருத்தினை விபரிக்கும் வகையிலும் அதனைச் சார்ந்த வகையிலும் அதனை மேலும் வலுப்படுத்தும் வகையிலும் அதனை ஆர்வத்துடன் கேட்குநர் செவிமடுக்கும் வகையிலும் கையாளல் போன்ற நுட்பங்களை முறையாகப் பயன்படுத்தப் பழக்கப்படுத்திக் கொள்ளல் வேண்டும். சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத் தமாகப் பேசுவதனால் முரண் பாடுகள் தவிர்க்கப்படுகின்ற அதே வேளை, பேசுநரும் கேட்குநரும் தம்மைப் புரிந்து கொள்வதற்கு அதிக சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கின்றது. அத்துடன் பொருத்தமாகப் பேசும் வல்லமையையும் பேச்சு வாண்மை யையும் விருத்தி செய்கின்றது.

வாழ்க்கையில் வெற்றிபெற பேச்சுத்திறன் மிகவும் உறுதுணையாக இருக்கின்றது.

வாசிக்க எழுதத் தெரிந்த குடித் தொகையினரின் வீதம்
1948இல் 57.6இலிருந்து 1994இல் 90.1 ஆக உயர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திராணி புஷ்பராஜாவின் குயிற் குஞ்சுகள் சிறுகதைத் தொகுப்பு – ஒரு நோக்கு

த.மேகராசா
அபிவிருத்தி உத்தியோகத்தர்
வலயக் கல்வி அலுவலகம்
மட்டக்களப்பு

மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்தவர் திருமதி இந்திராணி புஷ்பராஜா. இவர் ஒரு ஓய்வு பெற்ற அதிபர், விஞ்ஞானப் பாட ஆசிரியையாகவும் நீண்டகாலம் பணியாற்றியவர், ஒரு சமூக சேவையாளர். நீண்டகாலமாகக் கவிதை, சிறுகதை ஆகிய துறைகளில் தன்னை நிலைநிறுத்தி வருகின்றவர். இவரது சிறுகதைகள் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் "குயிற்குஞ்சுகள்" என்னும் தொகுப்பாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

இத்தொகுப்பில் பத்துச் சிறுகதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஊனமாகும் உறவுகள், ஒரு தாளம் தப்பாகிறது, குயிற்குஞ்சுகள், இளமை எனும் புயற்காற்று, பக்கத்து வீட்டுப் பாலு மாமா, ஒரு தாயின் கனவுகள் கலைகின்றன, நியாயப்படுத்த முடியாத நியாயங்கள், பூக்களைப் பொசுக்காதீர்கள், போலிப் பூக்கள், கருகும் மொட்டுக்கள் என்ற தலைப்புக்களின்கீழ் அவை அமைந்துள்ளமையைக் காணமுடியும்.

இச்சிறுகதைகளில் ஒன்பது, இரண்டு பிரதான கருப்பொருள்களைக் கொண்டுள்ளன. சிறுவர்களுக்கு ஏனையவர்கள் உண்டுபண்ணுகின்ற துன்புறுத்தல்கள் ஒன்று, சிறுவர்களே அவர்களின் வாழ்வைக் கேள்விக் குறியாக்குவது மற்றொன்று. இவ்விரு கருப்பொருள்களினூடாகவும் பொதுவாக, சிறுவர்களின் மனநிலை, அவர்கள் எடுக்கும் முடிவுகளால் அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் ஏற்படும் பாதிப்புக்கள், சிறுவர்கள் தொடர்பில் பெற்றார் மற்றும் அயலவர்களின் நாகரிகமற்ற செயல்கள், சிறுவர்கள்மேல் கட்டவிழ்க்கப்படும் பாலியல் வன்புணர்வு உள்ளிட்ட துஷ்பிரயோகங்கள் முதலானவையே மேற்கிளம்புகின்றன.

நூலாசிரியர் நீண்ட கால ஆசிரிய – அதிபர் சேவையில் பாடசாலையில் கற்பித்தல் - நிர்வாகம் உள்ளிட்ட பணிகளுக்குச் சமாந்தரமாகச் சிறுவர்கள் பற்றிய அறிதலையும் - அவர்களது உளங்களைப் - பிரச்சினைகளை அறிந்து அவற்றுக்கு வழிகாட்டுவதிலும் தனது கவனத்தை ஈர்த்துள்ளார் என்பதை இந்நூல் உணர்த்துவதை யாவரும் காணமுடியும். பாரதி, பாரதிதாசன் ஆகியோரைத் தொடர்ந்து தமிழ்க் கவிதை மரபில் வருகின்ற ஒருவராகக் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை காணப்படுகின்ற போதிலும் பாரதியிடமோ பாரதிதாசனிடமோ காணப்படுகின்ற கோபம், விறுவிறுப்பு கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையிடம் காணப்படாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறாக அன்பு, இரக்கம், பொறுமை, நிதானம் முதலான பண்புகள் காணப்படுவதற்கு அவர் பெண்கள் கலாசாலையில் நீண்டகாலம் கற்பித்தமையே காரணம் என்று கூறப்படுவது போல இந்திராணி புஷ்பராஜாவும் பாடசாலையில் பணிபுரியும் காலத்தில் பாடசாலைக்குள்ளும் பாடசாலைக்கு வெளியேயும் சிறுவர்கள் பற்றியே கவனம் செலுத்தியமையினால் சிறுவர்களின் பிரச்சினைகளை, அவர்களின் விருப்பங்களை எழுதுபொருளாக்கினார் என்று கூற இடமுண்டு. சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் ஒரு தொகுப்பாகவும் இச்சிறுகதைத் தொகுப்பினை அடையாளப்படுத்தமுடியும்.

தாத்தா அவரது மகனின் மகளை பாலியல் ரீதியில் அணுகுவது, பின்னர் அவர் அச்சிறுமியை (பேத்தியை) குடிபோதையில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்துவதுமான கதையாக "ஊனமாகும் உறவுகள்" சிறுகதை அமைந்துள்ளது. "பாடசாலைக்கு அனுப்ப அவளை குளிப்பாட்டும் போது கேட்டேன். 'ஏன் நர்மி அவ்வளவுக்கு அழுகை' 'எனக்கு தாத்தா கட்டிப்பிடிச்சுக் கொஞ்சிறது பிடிக்கல்ல' 'நீ பயப்படுவாய் எண்டு தானே கட்டிப்பிடிக்கிறார்...' நான் சமாதானப்படுத்துகிறேன்.... 'அவரோட மீச முகமெல்லாம் குத்துது.. அவரோட பல்லு என் தோள்ள இடிச்சிருக்கு... இந்தா..' அவள் காட்டிய இடத்தில் தோள்பட்டையில் பல்லின் மெல்லிய கீறல்" இத்தகைய சம்பவங்கள் இன்று நடப்பதற்கான காரணங்கள் பற்றியும் ஆசிரியர் கூற முற்பட்டுள்ளார்.

"நாங்கள் குழந்தைகளாக இருந்த காலத்தில் நம்மிடையே இருந்த உறவுகள் எத்தகைய உன்னதமானவை. மாமி, மாமா, தாத்தா, பாட்டி, அண்ணா, தம்பி என குடும்ப விருட்சத்தின் ஒவ்வொரு கிளையும் மிகவும் ஆரோக்கியமானதாக இருந்தது. மூத்தவர்கள் தம் வாரிசுகளை கண்ணை இமை காத்தது போல் காத்தார்கள். மானிட நேயம் மண்ணில் தவழ்ந்த காலம் அது. ஆனால் உலகமயமான இந்தக் கணிணி யுகத்தில் உறவுகள் அனைத்துமே உணர்வுகளால் உள்ளத்தால் ஊனமாகிப் போய்விட்டன. ஊனமான உறவுகளில் மானிட நேயம் மலருமா? நான் அழுதுகொண்டே என் பிள்ளைக்கு பால் கரைக்கிறேன்."

"ஒரு தாளம் தப்பாகிறது" சிறுகதை சில ஆண்களின் கேவலத்தை அப்பட்டமாக வெளிச்சத்துக்குக் கொண்டு வருகின்றது. பதினைந்து வயதுடைய மது என்ற சிறுமி வினோ என்ற இளைஞனைக் காதலித்து ஓடிப்போவதும் பின்னர் அவனது கேவலமான ஒவ்வொரு செயற்பாட்டினையும் கண்டு வேதனைப்படுவதும், தன்னைப் பிற ஆண்களுக்கு 'என் மனைவி எப்பிடி அழகா இருக்கிறாளா?' என்று காட்சிப்படுத்தியதோடு மட்டும் நிற்காது தன் மகளையே கெட்ட நடத்தையுடைய ஒருவனுக்கு அவனிடம் பணம் வாங்கிவிட்டு கலியாணம் கட்டிக் கொடுக்க முற்படுவதும் அதற்கு மகள் மறுத்தபோது அவனே தன் மகளை முதலில் அனுபவிக்கவேண்டுமென்று முற்பட்டு தகப்பனும் மகளும் தில்லுமுல்லுப்படுவதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு அவனது மனைவி மதுவே அவனது தலையில் அடித்துவிட்டு, பின் சிறைவாசம் அனுபவிப்பதுமான கதையோட்டத்தினை எடுத்துக் கூறுவதாயுள்ளது.

"அப்பா .... என்ன விடுங்க... நீங்க கொஞ்சநாளா என்னோட சேட்ட விடுறீங்கெண்டு அம்மாட்டச் சொல்லல்ல... அம்மா உங்கள இன்னும் நல்லவன் எண்டு நினைக்கிறா..'

அழுதுகொண்டே என் மகள் கையை விடுவிக்கப் போராடிக்கொண்டிருந்தாள் 'அம்மா எண்டா எனக்குப் பயமா... என்னோட ஓடி வந்தவள்தானே அவள்... இஞ்சபார் நீ யோசப்பத்தான் கட்டோணும். நானும் உன்ன முடிச்சித்தாரனெண்டு அஞ்சும் பத்துமா அம்பதாயிரத்துக்கு மேல கடன்பட்டுட்டன்..' வினோ அவளது தலைமயிரை இறுகப் பற்றிப் பிடித்துக்கொண்டு கன்னத்தை இறுக்கினான்.'அதுக்கு நீயேன்... என்ற சட்டை எல்லாம் கிழிக்கிறாய்... விடு' அநோமி இப்படி இருக்கிறதால தானே உனக்கும் உன்ர அம்மாவுக்கும் திமிர் வருகுது.... நீ ஆர் என்ர மகள்... நான் போட்ட விதையில இருந்து முளைச்ச மரம்... அந்தப் பிரயோசனத்த மத்தவன் அனுபவிக்க முதல் நான் அனுபவிச்சா ஆரு கேக்கிற... பிறகு உன்ர அம்மா எங்க மாப்பிள தேடுவாள்... எவன் கட்டுவான் உன்ன... எண்டு பாக்கிறன். அவனுடைய கொக்கரிப்பும் மகளின் வீறிட்ட அலறலும் என்னை உணர்ச்சிகளின் உச்சத்திற்குக் கொண்டு சென்றது. பெற்ற தந்தையே மகளைச் சேதப்படுத்த நினைக்கும் செயற்பாட்டை தாய்மனம் ஏற்றுக்கொள்ளுமா? எத்தனை போதை நிலை என்றாலும் சொந்த இரத்தத்தையே களங்கப்படுத்த நினைப்பவன் மனிதனா? நான் என்னை மறந்தேன். வாசலில் சாத்தியிருந்த உலக்கையை தூக்கி ஓங்கி அடித்தேன்... வினோ இரத்த வெள்ளத்தில் வீழ்ந்த பின்தான் நான் சுய நினைவை அடந்தேன்"

பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தையை பாட்டி பொறுப்பெடுப்பதும் அச்சிறுமியைப் பாடசாலையில் இணைப்பதுமான கதையினை 'குயிற்குஞ்சுகள்' சிறுகதை எடுத்துக் கூறுகின்றது. பெற்றோரின் சொல்லைக் கேட்காது முன்பின் அறியாத ஒருவனுடன் ஓடிப்போகிறாள் சங்கீதா. சங்கீதா ஓடிப்போனமையை அறிந்து அவளது தந்தை தற்கொலை செய்து கொள்கிறார். ஓடிப்போன சங்கீதா நான்கு வருடங்களின் பின் மூன்று வயதுக் குழந்தையுடன் வந்து"உங்கள விட்டா நாங்க எங்க போறது அம்மா... நீங்க அடிச்சாலும் உதைச்சாலும் நானும் என்ர பிள்ளையும் இங்கதான் இருக்கவேணும்... அந்த மனிசன் எங்கள விட்டுட்டு வேறொருத்தியோட கொழும்புக்கு ஓடிற்று அம்மா..."என்று கூறுகிறாள். அப்படி மீண்டும் தாயோடு இணைந்த அவள், கொம்பியூட்டர் சென்ரருக்கு வேலைக்குச் சென்றபோது அவளோடு வேலை செய்த ரவியை விரும்பி, குழந்தையை கைவிட்டுச் செல்கிறாள். சமூகத்தில் நடக்கின்ற – குழந்தைகளின் உடல், உள நலத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்ற பிரச்சினையினை அலங்காரங்கள் இன்றி மிகச் சிறப்பாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இளமை எனும் புயற்காற்று" சிறுகதை மது என்னும் சிறுமிக்கும் திலீப் கண்ணா என்பவனுக்கும் ஏற்படும் காதலினையும் திலீப் கண்ணாவின் அழைப்பின்படி கடற்கரைக்குச் சென்ற மது அங்கு அவன் தகாத முறையில் தன்னுடன் நடக்க முற்பட்டமையால் அவனது செயலைக் கண்டித்து தப்பி ஓடி வருவதை எடுத்துக் கூறுகின்றது. இக்கதையைப் பின்வருமாறு முடிக்கின்றார் கதையாசிரியர்.

"என்னடி பெரிய கதை, வசனம் பேசுறாய்... காதலெண்டால் எல்லாம்தான் தெரிஞ்சுதானே இவ்வளவு தூரம் வந்தனி" இரு கைகளாலும் என்னை இறுகப் பற்றிப் பிடிக்கிறான். அவனது கைகளின் அசைவிற்கு என் உடைகள் கிழிந்துவிடும் போல் இருக்கிறது... கைகள் தப்பான இடங்களை நோக்கி நகர்வதை நான் உணர்கிறேன். என்னுள் கோபம், பயம், ஏமாற்றம் அனைத்தும் ஒருங்கே மேலெழுகின்றன. நான் என் பலம் கொண்ட மட்டும் அவனை உதைத்துத் தள்ளுகிறேன். நான் ஓடத் தொடங்குகிறேன். தொலைவில் புள்ளியாய் தெரியும் மனிதர்களை நோக்கித் தலைதெறிக்க ஓடுகிறேன். என் ஓட்ட வேகத்தை செருப்புகள் குறைக்கின்றன. அவற்றைக் கழற்றிவிட்டு ஓடுகிறேன். திரும்பிப் பார்க்கும் ஒரு சந்தர்ப்பத்தில் அவன் ஓட முடியாமல் தள்ளாடுவது தெரிகிறது.... கானலைக் காதல் என்று எண்ணிக் காமத்திற்கு இரையாகாமல் என்னைத் தற்காத்துக் கொள்ள ஓடிக் கொண்டிருக்கிறேன். இளமை எனும் பூங்காற்று என் வாழ்வில் புயற்காற்றாக மாறி என்னை விழுங்கவரும் இக்கணத்தில் என் கால்கள் ஓடிக்கொண்டே இருக்கின்றன."

தான் வளர்த்த குழந்தை ஒன்றையே பாலியல் ரீதியாக நோக்கியும் தவறாக நடந்துகொள்ளவும் முயன்ற பக்கத்து வீட்டுப் பாலு மாமாவின் கதையினை எடுத்துச் சொல்வதாக இத்தொகுப்பிலுள்ள "பக்கத்து வீட்டுப் பாலு மாமா" சிறுகதை அமைந்துள்ளது.

"மஞ்சு சின்ன வயதில இருந்து உன்னைப் பார்த்துக் கொண்டு வாறன். வளர வளர ஒரு தேவதை போல வாறாயடி மஞ்சுக்குட்டி... நீண்ட கண்களும் செப்பு வாயும்... இந்த வழுவழுப்பான கன்னங்களும் என்ர மஞ்சுக் குட்டிக்கே சொந்தம் என்று நினைக்கிற போது எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?" மாமா என்னை அணைத்து, கன்னத்தோடு கன்னம் வைத்து உரசுகிறார். அனலாகக் கொதிக்கும் அவரது மூச்சுக் காற்று என்னுள் அச்சத்தை விதைத்தது.
"மாமா யாரும் பார்த்தால் என்ன நினைப்பாங்க மாமா..." நான் பிடியில் இருந்து விடுவித்துக் கொள்ளத் திமிறுகிறேன்.

மஞ்சு... யார் என்ன நினைக்கிறது. மஞ்சு... நீ நான் தூக்கி வளர்த்த பிள்ளை... மஞ்சுக்குட்டி... என்ர செல்லக்குட்டி என்றபடி என்னை இன்னும் இறுக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைப்பதையும் கைகள் உடலில் அலைவதையும் பொறுக்க முடியாத நிலையில் என் பலம் கொண்ட மட்டும் அவரைத் தள்ளி விட்டேன். காலடி பட அவர் விழுந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெளியே ஓடி வந்தேன்.

"ஒரு தாயின் கனவுகள் கலைகின்றன" சிறுகதை மகனைப் படிப்பிக்கக் கனவு காணும் தாயொருத்தியையும் தீய செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்தி தாயின் கனவைக் கலைத்துவிட்டு நிற்கின்ற மகனையும் பற்றி எடுத்துக்கூறுகின்றது. இத்தொகுப்பிலுள்ள "நியாயப்படுத்த முடியாத நியாயங்கள்" சிறுகதை தன் குடும்பத்தையே காக்க சிறுவயதில் வேலை புரியும் சிறுவனைப் பற்றியதாக அமைந்துள்ளது.

தந்தையொருவரின் பொறுப்பற்ற செயலையும் ஈவிரக்கமற்று தன்பிள்ளைகளையே தண்டிக்கும் கொடுந்தன்மையினையும் தாயொருத்தி எதுவும் செய்யமுடியாத நிலையில் பிள்ளைகளை நன்னிலைப்படுத்துவதற்காக சிறுவர் நலன்பேணும் இல்லமொன்றை நாடுவதையும் "பூக்களைப் பொசுக்காதீர்கள்" கதை விளம்புகின்றது. பொருத்தமற்ற வீட்டுச் சூழலினால் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்த 'அரவிந்' என்ற சிறுவனை பாடசாலை ஆசிரியை இனங்கண்டு, நல்வழிப்படுத்துவதை 'கருகும் மொட்டுக்கள்' சிறுகதை எடுத்துக் கூறுகின்றது. ஆசிரியர்கள் பாடத்தைப் படிப்பிப்பதில் மட்டும் கவனம் செலுத்தாது பிள்ளைகளின் மனநிலையை அறிந்து கற்பிக்க வேண்டுமென்பதை இக்கதையினூடாக ஆசிரியர் எடுத்துக்கூறுகின்றார்.

இத்தொகுப்பிலுள்ள பத்துச் சிறுகதைகளில் ஒன்பது சிறுகதைகள் சிறுவர்களை மையப்படுத்தியே அமைந்துள்ளன. அக்கதைக்கருவிலிருந்து மாறுபட்டு "போலிப் பூக்கள்" என்ற சிறுகதை முதியோர் இல்லமொன்றிலுள்ள பரமலிங்கம் என்ற பரமு சேரைப் பற்றியும் போலிப் பூக்களாக இரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுத்து அவர்களது ஆதரவும் அரவணைப்பும் இல்லாமல் அவர் வேதனையோடு வாழ்ந்து எண்பதாவது பிறந்த நாளன்று உயிரை விட்ட சோகத்தினையும் எடுத்துக் கூறுகின்றது. இவரது சிறுகதைகளில் சமூக வழிப்படுத்தல் கருத்துக்கள் விரவிக் காணப்படுகின்றன. சமூகத்தின் சீர்கேடுகளை உரத்துச் சொல்லுகின்றனவாக அவை உள்ளன. இவ்வாறு சமூகச் சீர்கேடுகளைச் சொல்லி, சீர்த்திருத்தத்தை ஆசிரியர் மேற்கொள்ள முனைகையில் பிரசாரத்தன்மை(போதனையும் வழிப்படுத்தலும்) மேலோங்குகின்றது. இத்தன்மை இவரது படைப்பாக்க வெளிப்பாட்டில் காணப்படும் ஒரு பலவீனம் என்றுகூடச் சொல்லலாம். எடுத்துக்காட்டாக மகளுக்குத் தாய் கூறும் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

"அநோமி... அம்மா அப்பா எண்ட காவல உடைச்சிக்கொண்டு ஊர், பேர் தெரியாதவன நம்பி அவன் பின்னால என்னப்போல இண்டைக்கும் ஓடுற ஒவ்வொருவரும் யோசிக்க வேணும் மா... அந்த வயசில வாழ்க்கை பற்றி எதுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாம நாங்க எடுக்கிற பிழையான முடிவுகள் எவ்வளவு கொடுமை... அநோமி..."

இவரது சிறுகதைகளில் அவர் கதையை நகர்த்திச் செல்லும் பொருட்டு கையாளுகின்ற வர்ணணைகள் கலாபூர்வமாக அமைந்துள்ளமை ஒரு சிறப்பம்சம் என்று கூறலாம். பின்வரும் பகுதி எடுத்துக்காட்டாகத் தரப்படுகின்றது.

"அந்தக் கிராமத்திற்கு அழகே பச்சைக்கம்பளம் விரித்தாற் போன்ற வயல் நிலம்தான். அதாலை தூரத்தில் தெரியும் உயர்ந்த குன்றுகள். குன்றுகளைத் தழுவிச் செல்லும் வெண்முகிற் கூட்டம், வயல்வெளியை ஊடறுத்துச் செல்லும் தார்வீதி. அழகான அந்தக் கிராமத்தில் கந்தசாமி என்று பெயர்சொல்லிக் கேட்டாலே ஊரார் விரல் நீளும் திசையில் சிறிதாய் பார்க்க மிக அழகானதாய் அமைந்த கல்வீடு தென்படும். வீட்டைச் சுற்றி வரிசையாய் நிற்கும் தென்னை மரங்கள்... வீட்டு முற்றத்தில் பூக்களை அள்ளிச் சொரிந்து அழகாக விளங்கிய நித்திய கல்யாணிச் செடிகள். அதுதான் கந்தசாமி சுந்தரலட்சுமி தம்பதிகளின் வசந்த மாளிகை.."

பாத்திரங்களைப் பற்றிய வர்ணணைகளும் வாசிப்போர் மனதில் அப்பாத்திரங்களை நிலை நிறுத்துமாற்றலுடையனவாக உள்ளன. "ஒரு தாளம் தப்பாகிறது" சிறுகதையில் தாய் மகளைப் பற்றிக் குறிப்பிடும் பின்வரும் பகுதி எடுத்துக்காட்டத் தக்கதாகும்.

"என் மகள் அழகே உருவானவள்... பார்த்தவர்களைச் சுண்டி இழுக்கும் அபூர்வ அழகு.. காதளவோடிய கண்கள்... அதில் ஓடியசையும் கருவிழிகள். எடுப்பான நாசி. சிவந்த உதடுகளினிடையே இடைக்கிடை பளிச்சிடும் முத்துப்பல்வரிசை. மஞ்சள் கலந்த வெண்ணிற சருமம்."

இன்று சிறுகதை எழுதுகின்றவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. அதிலும் இன்று சமூகத்தில் மேலோங்கிக் காணப்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோகம் - சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள், முதியோர் கைவிடப்படுதல் பற்றி எழுதப்படுவது குறைவாகவே உள்ளது. இத்தகைய சூழலில் இந்திராணி புஷ்பராஜா அவர்கள் குயிற்குஞ்சுகள் சிறுகதைத் தொகுப்பினூடாகச் சொல்லுகின்ற விடயங்கள் மிகமிக அவசியமானவையாகும். இவரது சிறுகதைகள் பற்றி மலர்ச்செல்வன் குறிப்பிடும் பின்வரும் கருத்து மிகவும் பொருத்தமாகவே உள்ளது."புனைவின் பொது வெளியில் பெண்கதை மொழிதல், மரபுகள் மீறப்படுதலில் தொடங்கி பெண்ணியக் கருத்தாக்கங்களை மீட்டுருவாக்கம் செய்துவரும் எழுத்துக்களை நாம் தொடர்ந்து கண்டு வரும் சூழலில் பெண் புனைகதையாளர்களது எண்ணிக்கை சொற்பத்திலும் சொற்பமாக இருந்துவருகிறது. இந்நிலையில் திருமதி இந்திராணி புஷ்பராஜாவின் முதல் தொகுப்பு இதுவாகும். அவர் தன் வாழ்பனுபவத்தின் ஊடாக சமூகப் பிறழ்வுகளை, அசிங்கத்தை, வேதனையை, துன்பத்தை தன் எழுத்துப் பாணியின் மூலம் நமக்கு நெருக்கமான மனிதர்களை நம் கண் முன் நிறுத்தியிருக்கிறார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவணைப் பரீட்சைப் பேறுகளில் தவறிய சில உண்மைகள்

சண்.இலங்கேஸ்வரன்
ஆசிரிய ஆலோசகர் (த.தொ.தொ)
வலயக் கல்வி அலுவலகம்.
மட்டக்களப்பு.

"இவள் முதலாம் ஆளாக வந்திட்டாள், கெட்டிக்காரி" என்று சில பெற்றோரும், "இதுகளுக்கு என்ன குறை வெச்சேன்", "ஒண்டுக்கும் இயலாத கழுதைகள்", "எப்பவும் கடைசியிலேயேதான்" எனப் பல பெற்றோரும் அங்கலாய்ப்பதும் பிள்ளையைக் கடிந்து கொள்வதும் தண்டிப்பதும் ஒவ்வொரு தவணைப் பரீட்சையின் முடிவிலும் வீடுகளில் கேட்கும் குரலொலிகள் ஆயின.

இந்த நாலு, அஞ்சுதான் அக்கறையாய் படிக்குதுகள், மற்றதுகளுக்கு எப்பிடிப் படிப்பிச்சாலும் வேலயில்ல", "ரியூசனுக்கும் போகாதுகள்", "பள்ளிவிட்டா வீட்டிலயும், ரோட்டிலையும்தான்.", "இந்த சூழலும், சமூகமும் இப்படித்தான், பாடசாலைக்கு தொடர்ந்து வராதுகள்." "வராததுகளுக்கு, அப்பாவை அல்லாட்டி அம்மாவைக் கூட்டிவா என்று அனுப்பினா, இன்னும் இரண்டு மூண்டு கிழமைக்கு வராம இருந்துபோட்டு பிறகு வருங்கள்." என்றவாறு ஆசிரியர்களும் பாடசாலையின் கற்பித்தல் சமூகமும் ஒருமித்து மாணவர்மீதும் அவர்தம் பெற்றோர்மீதும் சுற்றயல்மீதும் பழியிட்டு, தமது தவறுதல்களையும் தவறுகளையும் ஓரங்கட்டுவதன் மூலம், தமது வகைகூறல் பொறுப்பிலிருந்து விலக்குப் பெற விரைவாக விழைகின்றனர் என்றால் அது பொருந்தாமல் போகாது.

தவணைப் பரீட்சையில் ஒரு மாணவர் பெற்ற பெறுபேறானது அவரது கற்றலுக்கேயுரிய பெறுபேறாக மட்டுமே எனக் கொள்ளப்படுகின்றது. ஆனால், இப்பெறுபேறு மாணவருக்கு மட்டுமே உரித்தான பெறுபேறு அல்ல. அப்படியெனில் இப்பெறுபேற்றுக்கு வேறு யார் யார் பொறுப்புக்குரியவர்கள்? உண்மையில் இவை நமக்கு விளக்கும் மேலதிக விடயங்கள் என்ன?, இதிலிருந்து நாம் பெற்றுக்கொள்ள வேண்டியவைகள் யாவை?, பாரிய எதிர்காலத் தோல்விகளிலிருந்து நாமும், மாணவரும் விலக்குப் பெறச் செய்ய வேண்டிய முன்னேற்பாடுகள் எவை?, பின்னூட்டல்கள் எவை? போன்றனவற்றை ஆசிரியர் சார்பாக, அதிபர் சார்பாக, தாய், தந்தை, மாணவரின் நலன் விரும்பிகள் சார்பாக, சிறிது உற்று நோக்கிச் சிந்திக்க வேண்டும். இவ்வகையில் இங்கு ஆசிரியரின் வகிபாகத்தைச் சற்று நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவணைப் பரீட்சைகளில் ஒரு மாணவனின் அறிவுசார் அடைவுகள், பரீட்சை முறைகளாலும், திறன்சார் அடைவுகள் கணிப்பீட்டு மதிப்பீட்டு முறைகளினாலும் அளவிடப்படுகின்றன. அவனது குறைவான பெறுபேறானது, பெரும்பாலும் அவனது அடைவாகவே கருதப்படுகின்றது. இதனடிப்படையிலேயே அவன் எதிரூட்டம் பெறச் செய்யப்படுகின்றான்.

ஆயினும், அது பிரதானமாக, **அப்பாடத்தினைக் கற்பித்த ஆசிரியரது கற்பித்தல் ஆற்றுகையின் அளவீடும் அவரது குறைபாடும் ஆகும்**. இத்தகைய நோக்கலின் தேவை தற்போது நன்கு உணரப்பட்டுள்ளது.

குறித்த ஒரு பாடத்தில் மாணவர் ஒருவர் பெற்ற புள்ளியாயினும், குறித்த அப்பாடத்தில் அவரது வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களும் பெற்ற புள்ளிகளின் சராசரியாயினும், **அது அப்பாடத்தைக் கற்பித்த ஆசிரியரது கற்பித்தல் ஆற்றுகைத் திறன் மதிப்பீடும்** ஆகும். இந்த உண்மையை ஆசிரியர் முதலில் ஒப்புக் கொள்ளல் வேண்டும். இதேவேளை அம்மாணவர், குறித்த அதே பாடத்தை மேலதிக, பிரத்தியேக, தனித்துவ வகுப்புக்களாக, வேறு ஆசிரியர்களிடத்தில் கற்காத பொழுது பெற்ற பெறுபேறுகளே இவ்வாசிரியரது கற்பித்தலில் விளைந்த உண்மையான பெறுபேறு ஆகும். வேறு ஆசிரியரிடத்தில் கற்ற மாணவர் பெற்ற உயர் புள்ளியை தனது கற்பித்தலின் விளைவு என உரிமை கொண்டாடுவது வெட்கக்கேடான விடயமாகும். அதேவேளை, தனது இயலாமையை மூடி மறைக்கும் செயலுமாகும் என்பதனையும் ஆசிரியர் ஏற்றுக்கொள்வதோடு, இத்தகைய செயல்களால் தனது ஆசிரிய வாண்மைத்துவம் பாரிய அளவில் வீழ்ச்சியடைகின்றது என்பதனையும் இத்தகைய மனப்பான்மையானது, தன்னிடம் மட்டுமே கற்கும் மாணவரது அடைவுகளை மேன்மேலும் பின்தள்ளிவிடுகின்றது, பின்தள்ளிவிடும் என்பதனையும் நன்கு நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

தவணைப் பரீட்சைகளில், தன்னிடம் மட்டுமே கற்ற தமது மாணவர் தனது பாடத்தில் பெற்ற புள்ளிகளைப் பதிந்து, பல்வேறு பரிமாணங்களூடாக அவற்றைப் புள்ளிப்பகுப்பாய்வுக்கு உட்படுத்தி விளைவுகளின் அடிப்படையில் தனது பலம், பலவீனம், போன்றவற்றைச் சுயமதிப்பீடாக முதலில் கண்டறிந்து, சுயமுனைப்புடன் தமது எதிர்காலச் செயற்பாடுகளைத் தன் சார்பாகவும், ஒவ்வொரு மாணவர் சார்பாகவும் நன்கு திட்டமிட்டு, பின்னூட்டல்களை வரிசைப்படுத்தி ஒழுங்கமைத்து,தேவைக்கேற்பத் தயாரிக்கப்பட்ட வழிகாட்டற் கையேடுகள், வேலைத்தாள்கள், பயிற்சிப் பக்கங்கள் போன்றனவற்றை, தேவைக்குரியோரில், பயனுறுதியுள்ள வகையில் உபயோகிப்பதன் மூலமாகவும், பரிகாரக் கற்பித்தல், மேலதிக வகுப்பு போன்றனவற்றினைத் திட்டமிட்டு நடத்தியும், மாணவரை சுயமுனைப்புடன் மீளக்கற்றலில் பங்கேற்று, முன்னெடுக்கச் செய்வதன் மூலமாகவேனும், அத்துடன், கூட்டுறவு கற்றல் ஆற்றுகைகள், பங்கேற்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடுகளாகவும் வேறு பல முன்னேற்றகரமான வகையிலும் மாணவரின் கற்றல் உயர் அடைவை உறுதிப்படுத்தி அதன் விளைவுகளை அடுத்த தவணைப் பரீட்சைப் பெறுபேறு வாயிலாகப் பகுத்து, தம் செயற்பாட்டின் வெளிவருகை, வெளியீடு போன்றவற்றை, நிச்சயிக்கப்பட்ட எதிர்பார்த்த உயர்மட்டத்தினை நோக்கி நகர்த்த வேண்டும்.

தவணைப் பரீட்சை ஒன்றில், பத்து மாணவர்கள், ஐந்து பாடங்களில் பெற்ற பெறுபேற்று விபரங்களைக் (மாதிரி) கீழ்வரும் அட்டவணை புலப்படுத்துகின்றது. அவற்றைச் சிறிது ஒப்பீடு செய்வோம்.

ஒவ்வொரு மாணவரும் பெற்ற புள்ளிகளின் சராசரிகள் ஒரு நிரலிலும், ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற புள்ளிகளின் சராசரிகள் ஒரு நிரையிலும் காட்டப்பட்டுள்ளன. குறித்த பாட ஆசிரியரிடம் மட்டுமல்லாது **வேறு ஆசிரியர்களிடமும் கற்ற மாணவர்கள் பெற்ற புள்ளிகள் தடித்த எண்களால் காட்டப்பட்டுள்ளது.** அதேவேளை, குறித்த ஆசிரியரிடம் மாத்திரம் கற்ற மாணவர்கள் பாட ரீதியாகப் பெற்ற புள்ளிகளின் சராசரி இறுதி நிரையிலும் (Row) காட்டப்பட்டுள்ளது.

மாணவர் பெயர்	கணிதம்	தமிழ்	ஆங்கிலம்	விஞ்ஞானம்	விவசாயம்	மாணவர் பெற்ற புள்ளிச் சராசரி	மாணவரின் வகுப்பு நிலை
தேனு	54	86	**70**	69	80	71.80	2
ஏஞ்சல்	**70**	**78**	**60**	**75**	**85**	73.62	1
தமிழ்	32	90	28	35	74	51.83	10
சிந்து	**75**	**88**	**60**	**68**	**68**	71.85	3
பராஸ்	34	92	44	75	77	64.44	7
ஹோசி	**50**	90	**67**	58	68	66.67	6
ரகு	**88**	**70**	34	66	78	67.45	5
கவி	**89**	**86**	15	**78**	82	70.35	4
பைறூஸ்	42	**80**	28	56	75	56.28	9
ஸ்ரெல்	**85**	**80**	30	62	64	64.21	8
பாட ரீதியான சராசரி	62	84	44	64	75		
குறித்த பாட ஆசிரியரிடம் மட்டும் கற்ற மாணவர் பெற்ற புள்ளிகளின் சராசரி	40	86	30	49	74		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகளை நோக்கும் பொழுது, மேலதிக ஆசிரியர்களிடம் கற்ற மாணவரே உயர் புள்ளிகளைப் பெற்றுள்ளதை அவதானிக்கமுடிகின்றது எனக் காணும் பொழுது, குறித்த ஆசிரியரிடம் பாடசாலையில் மட்டுமே கற்கும் மாணவர்கள் குறைந்த அளவான புள்ளிகளைப் பெற்றுள்ளதையும், அவர்கள் பெற்ற புள்ளிகளின் சராசரி 40 ஆகவும் காணப்படுகின்றது. அதேவேளை, 2 மாணவர்கள் 35 இலும் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர். இவரிடம் மட்டுமே கற்ற மாணவர் பெற்ற உயர் புள்ளி 54 ஆகும். இதேவேளை, இம்மாணவர்கள் மொழியறிவு குறைந்தவர்கள் எனக் கருத முடியாதவகையில் தமிழில் உயர் புள்ளிகளைப் பெற்றுள்ளதையும் கருத்தில்கொள்ளல் வேண்டும்.

இவற்றிலிருந்து நாம் இப்பாட ஆசிரியரைப் பற்றிக் கருதத்தக்க விடயங்கள் சிலவற்றை முன்வைப்போம். இவர் கற்பித்தல், சுயகற்றல் வாண்மை குறைவானவர், மாணவருக்குப் பொருத்தமான வகையிலான கற்பித்தல் நுட்பங்களைப் பொருத்தமாகப் பயன்படுத்தலில் இடர்ப்பாடுள்ளவர், பொருத்தமான கற்பித்தற் சாதனங்களை முறையாக, பொருத்தமான வேளைகளில் உபயோகிக்கத் தவறியவர், அனைத்து மாணவர் நலன்களிலும் அக்கறை குறைவானவர், வகுப்பறைக் கட்டுப்பாட்டைப் பேணலில் ஆளுமைத் திறனில் குறைபாடுள்ளவர், மாணவர் சுயவரலாறு, பெறுபேற்று வரலாற்றுப் பதிவுகள், அவற்றிலிருந்து பெற்ற தகவல்களைப் பகுத்தறிந்து மாணவரை அடையாளம் காணவும், மாணவர் தனித்துவங்களையும் தனது சிந்தையில் நிறைவாகக் கொள்ளாதவர், சரியான திட்டமிடல்களை மேற்கொண்டு வழிப்படுத்தத் தவறியவர் போன்ற பல குற்றச்சாட்டுக் காரணங்களைத் கூட்டாகவோ தனித்தோ ஏற்றுக்கொள்ள வேண்டியவராகின்றார். இங்கு கெட்டித்தனமற்ற மாணவர்கள் என்று யாரையும் அடையாளப்படுத்தலைப் புறந்தள்ளி, எப்படிப்பட்ட நடத்தை, உள்வாங்கு திறனுடைய மாணவராயினும் அவரது கற்றல் அடைவை மேலோங்கச் செய்வது, ஒரு சிறந்த ஆசிரியர் பணியாகும் எனக் கொள்ளல் அவசியமாகின்றது.

இவ்வகையிலேயே ஆங்கிலப் பாடப் பெறுபேறுகள் மேலும் இழிவான நிலையில் காணப்படுவதையும், அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவரிடம் மட்டும் கற்ற மாணவர் பெற்ற உயர்புள்ளி 44. மாணவரில் 5 பேர் 35 இலும் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவரது கற்பித்தல் ஆற்றலின் பெறுபேறு 30 எனக் கருதினும் தவறில்லை.

கற்பித்தலில் பயன்படுத்தக்கூடிய பல்வேறு நவீன சாதனங்களைக் கொண்டுள்ள தற்காலத்திலும் இத்தகைய பெறுபேறுகளை எவ்வாறு ஏற்றுக்கொள்ள இயலும்? மாணவர்கள் குறித்த இப்பரீட்சைக்குத் தோற்ற முன்பே இத்தகைய பெறுபேறுகளே ஏற்படும் என்பது தெரியாதா? அன்றி தெரிந்து(ம்) இருந்தும் முன்செயலாற்றுகைகள் பூச்சியமா? காரணம் எவ்வகைப்பட்டது? ஆங்கில ஆசிரியர் வகைகூறலுக்கு விதிவிலக்கானவரா? மாணவர் வரவு குறைவானது, முன்னறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவானவர்கள், போன்றவாறான காரணப்பதில்கள் பொருத்தமானவையாக அமையுமா? பொருத்தமற்ற கலைத்திட்டம், கற்பிக்க ஒதுக்கப்பட்ட பாடவேளைகள் போதுமானதாக இல்லை, பாடசாலை உயர்மட்டம் ஒத்துழைப்பை நல்கவில்லை, என்பது போன்ற காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கனவா?

இவ்வகையில் ஏனைய பாடங்களின் பெறுபேறுகளைப் பகுத்தறியும் பொழுது, விவசாய பாடத்தின் பெறுபேறுகள் ஓரளவு திருப்தியை ஏற்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாசிரியரிடம் மாத்திரமே கற்ற மாணவர்கள், கருதத்தக்க வகையில் உயர்புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவர் பிள்ளைநேயம் மிக்க சிறந்த ஆசிரியராகக் கொள்ளப்படலாம். அதேவேளை இப்பாடப்பரப்பானது செய்முறைத்திறனும் அறிவும் சார்ந்த தொழினுட்பப் பாடம் என்பதையும், எதிர்கால வாழ்க்கைக்கான, வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கத்தக்க ஒரு பாடம் என்பதனையும் இங்கு கருத்தில்கொள்ள வேண்டும்.

மேலதிக வகுப்புக்காக, வேறு நபர்களிடம் செல்லுங்கள் என பாட ஆசிரியர் ஒருவர், தனது மாணவர்களையோ அல்லது அவரது பெற்றோரையோ வற்புறுத்துதல் சரியானதா? அதேவேளை தனது மாணவரை தன்னிடமே வேறு இடங்களுக்கு வருமாறு வற்புறுத்தி, பணம் வசூலிப்பது நியாயமாகுமா? ஆசிரியர் பணி அறப்பணி! என்பர். அதனை அறவீட்டுப் பணியாகக் கொள்ளலாகுமா?

இப்பெறுபேற்று அட்டவணைப் புள்ளிகளை அகவயமாகவும் புறவயச் சிந்தனைகளோடும் ஆராய்ந்தறிதலையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஒரு ஆசிரியர், தனது மாணவர் பற்றிக் கொண்டுள்ள சமூகச் சூழலுக்கு இசைந்து தனது கற்பித்தல் நடிபங்கை அரங்கேற்றுவதும், ஆற்றுவதும் அநேக வேளைகளில், வகுப்பறைக்கு ஒத்துப்போகாமலிருப்பதற்குப் பல காரணங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

தன்னை, தன்னிலையைப் பகுத்தறிந்து உணர்ந்து கொள்ள, முதலில் ஆசிரியர் தனது ஆசிரியத்துவ வாண்மையைப் பல்வேறு கோணங்களில், பல்பரிமாணங்களில் பெருக்கிக்கொள்ள வேண்டியதாக உள்ளது. இதன் பொருட்டு, தனது தொழில்சார் தகைமைகளை அதிகரித்தும், சிறந்த அனுபவ முதிர்ச்சிகளின் அடிப்படையில் இத்தகைய பழிபோடல்களில் இருந்து, தான் விலக்குப் பெறச் செயலாற்ற முடியுமான மனவேற்புநிலையில் உருவாகவும் முடியும் எனவும், செயலாற்ற முடியும் எனவும் உறுதிபட உரைக்கலாம். எனவே, மாணவர் எத்தகைய கற்றல் நாட்டத்தைக் கொண்டவராயினும் அவரை நல்வழிப்படுத்தி சமூகப்பொருத்தப்பாடுடைய, எதிர்கால வாழ்க்கைச் சவால்களை எதிர்கொண்டு, சமநிலை வாழ்க்கையை வெற்றிபட வாழத்தேவையான ஏற்புடைய கற்றல் பெறுபேற்றை நோக்கி அவரையும் அவரது சிந்தனை, செயற்பாடுகளையும் நேரிய போக்கில் நகர்த்தவேண்டிய பாரிய பொறுப்பை ஆசிரியர் நிகழ்த்த வேண்டியது மிகமிக அவசியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரசிப்பதற்கு மட்டுமல்ல, வாழ்வதற்கும் இசை வேண்டும்

இசை மருத்துவம்

கலாநிதி எஸ். தர்ஷனன்,
B.Music, M.Music, M.Phil. & Ph.D.Music
இசைத்துறைத் தலைவர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ரசிப்பதற்கு இசையை நாம் அனைவரும் பயன்படுத்துவது புதிதல்ல. ஆனால் உயிர்கள் வாழ்வதற்கு இசை இன்றியமையாதது என்பதை நாம் உணராமலேயே, ஆனால் எமது வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் பயன்படுத்தி வருகிறோம். அவற்றைச் தற்செயலாகச் சில சந்தர்ப்பங்களில் உணர்ந்திருப்போம். ஆனாலும், அதனைப் பற்றித் தொடர்ந்து சிந்திக்காமல் மறந்திருப்போம். எந்த நூலும் இவ்விடயத்தை விஞ்ஞான முறைப்படி கூறாததால், அவ்விடயமும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படாமல் போய்விட்டது. அவற்றைத் தற்செயலாக உணர்ந்து வந்த நாம், சிந்தித்து உணர்ந்து பயன்படுத்த ஆரம்பித்தால் இசை நம் வாழ்க்கையை உண்மையில் மேலும் வளமாக்குவதுடன், வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் ரசித்து வாழ வழி சமைக்கும்.

இசை என்று நாம் கருதுவது என்பதில்தான் நாம் முதலில் கவனம் செலுத்த வேண்டும். நாம் நினைப்பது போல புகழ்வாய்ந்த இசையாளர்களின் குரலிலிருந்தும், வாத்தியத்திலிருந்தும் மட்டும் இசை பிறப்பதில்லை. "குழலினிது யாழ் இனிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதார்" என்றார் - வள்ளுவர். எவ்வாறான விலை கூடிய இசையாலும், எமது மழலையின் இசையைப் பதிலீடு செய்ய முடியாது. எப்படிப்பட்ட களைப்பையும், அலுவலக அழுத்தத்தையும் ஒரு கணப்பொழுதில் மறக்கடிப்பது வீடு வந்தவுடன் காதில் கேட்கும் மழலை. அப்பா, அம்மாவுக்கு மட்டுமல்ல, தாத்தா பாட்டிகூட பேரப்பிள்ளைகளுடன் விளையாடி நீண்ட காலம் மகிழ்வுடன் வாழ்கிறார்கள். குழந்தையின் மழலையிலே சுருதி உண்டு, லயம் உண்டு. "ஸ்ருதி மாதா லயம் பிதா" என்பதே, உலகில் வழங்கிவரும் எந்தவொரு இசையினதும் அடிப்படை விதியாகும். எமக்கு சுருதியைப் பற்றித் தெரியாவிட்டாலும், தாளத்தைப் பற்றி அறியாவிடினும், மழலை இசையின் ஆழத்தை அனுபவித்து ரசிக்க முடிகிறதல்லவா? அதுதான் உண்மையான, இயற்கையான, இறைவனால் படைக்கப்பட்ட இசை. கலப்படமில்லாத, ஜாதி, மத, மொழி, இன பேதம் கலக்காத இயற்கையான இசை, அவ்வாறான இசையை ரசித்திருப்போமானால், தலை வலிக்கும், இருதய வலிக்கும் தனியாக மருந்து தேவையில்லை, அவ்வாறான மழலைகளை ஊரில் விட்டுவந்து, தனியாகப் புலம்பெயர் நாடுகளில் சம்பாதிக்கும் பணமெல்லாம், கடைசியில் மருத்துவமனைக்கே செல்கின்றன. நாம் இசையையும் தமிழையும் சிறு வயதிலேயே கற்பிக்க ஆசைப்பட்டு, அம்மழலையைக் கூட இல்லாது செய்துவிடுவதுடன், "பெரியவர்களைப் போலச் சிறு வயதிலேயே பாடுகிறான் பிள்ளை" என்று பெருமை கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் படைப்பை வலிந்து, திணித்து மாற்றியதில் எமக்கெல்லாம் எவ்வளவு பெருமை? இறைவன் தந்த இயற்கையான வரத்தை வெற்றிகரமாக நிராகரித்து விட்டு, நல்ல இசையைத் தேடியும், நிம்மதியைத் தேடியும் அலைந்து பெரும் பணத்தையும் செலவழிக்கிறோம். அன்று பொய்யாமொழிப் புலவன் வள்ளுவர் கண்ட மழலை இசையே மகத்தான மருத்துவ இசையாகும்.

இயற்கை படைத்த கரும்பை எவ்வளவு நேரம் சுவைத்தாலும் சலிக்காது. அத்துடன் பற்கள் சுத்தமடைந்து, பற்களும், கைகளும் வலிமை பெறும். அதனை நாம் சீனியாக்கி அதனால் படும் துன்பம் கொஞ்சமல்ல. சிறிது அதிகம் உண்டால் அருவருக்கும். சர்க்கரை வியாதிக்காரர் பார்த்திருக்க சுற்றிவர மற்றவர்கள் எல்லோரும் மகிழ்ந்திருந்து சீனியைத் தாராளமாக உபயோகித்து தேநீர் அருந்துவதால், அவர் படும் மனவேதனை சொல்லில் அடங்காது. அதே போலவே செயற்கை இசை கேட்டவுடனே இனிக்கும், ஆனால் அதே வேகத்தில் இன்னொருவரின் இசை பிரபலமாகி முன்னையவரின் இசை செல்வாக்கிழந்து போகும். இயற்கை இசைக்குப் பதிலீடே கிடையாது. ஆனால் செயற்கை இசைக்கு எப்போதுமே பதிலீடு உண்டு. ஒரு இசை சலிக்க, மறு இசை வந்து போகும்.

ஆகையால் இசையைக் கற்பதால் எமக்கு இறைவன் இயற்கையாகப் பரிசளித்துள்ள திறமைகளை அழித்துவிடாமல், அவற்றை மேலும் வளர்க்கும் நோக்குடன் நாம் இசைப் பயிற்சி மேற்கொண்டால் அது நமக்கு மருந்தாக அமையும், அதுவே மருத்துவ இசையின் உயர்ந்த வடிவமாகும்.

பேச்சு சரியாய் இருந்தால் எல்லாம் ஆச்சு
இல்லாவிட்டால் எல்லாம் போச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. ரகுபரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மொழித்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

பாரதியார்
சுயசரிதையில் உவமைகள் இரண்டு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரத்துக்குரிய தமிழ்ப் பாடத்துக்குப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பாடநூலில் பாரதியாரின் சுயசரிதத்திலிருந்து சில செய்யுள்கள் தரப்பட்டுள்ளன. அச்செய்யுள்களில் பாரதியார் கையாண்டுள்ள உவமைகள் இரண்டினை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாரதியார் தமிழிலக்கிய வரலாற்றில் போற்றப்படுவதற்குரிய பிரதான காரணங்களுள் ஒன்று, மொழியை எளிமைப்படுத்தியமையாகும். ஆனால், பாரதியாரின் ஆக்கங்களுட் சில எளிமையான நடையில் அமைந்தவை என்று சொல்லக்கூடியனவாய் இல்லை. இச்சுயசரிதையில் அமைந்துள்ள செய்யுள்கள் சிலவும் அத்தகையனவே. அவற்றுள் வழக்கொழிந்த – சொற்களைக்கூட பாரதியார் கையாண்டுள்ளார். ஆகையால் மாணவர்களது தெளிவு கருதி இந்த விளக்கம் எழுதப்படுகின்றது.

பாரதி தன் சுயசரிதையில் பிள்ளைப் பருவத்திலே (பத்து வயதில்) ஒன்பது வயதுப் பெண்ணின்மேல் தனக்கு உண்டான காதல் பற்றித் தெரிவிக்கிறார். அவள்மேல் கொண்ட காதலால் அவள் எங்கெல்லாம் செல்கிறாளோ அங்கெல்லாம் அவளைத் தானும் தொடர்ந்து திரிந்ததாகக் கூறுகிறார். அவ்வாறு திரிந்ததை விளக்குவதற்கு இரண்டு உவமைகளைக் கையாள்கிறார் பாரதியார். அவற்றிலே முதலாவதில் பாரதியின் ஆழ்மனது, அவரது தேசம் - அதன் விடுதலை பற்றிய எண்ணத்தோடேயே இருந்தது என்பது நன்கு புலனாகின்றது. சமகாலச் சூழலைப் பிரதிபலிப்பதாக அந்த உவமை அமைகிறது.

பாரதியார் கூறுகிறார்:

நான் காதலித்த பெண் நீர் எடுத்து வருவதற்காக நீர் நிலைக்குச் செல்வாள் - முத்துப் போன்ற புன்னகை அவளுடைய முகத்திலே ஒளி வீசியபடியிருக்கும். அவள் தன்னோடு யாரையும் அழைத்துச் செல்வதில்லை. ஆனால், காதல் தேவனாகிய மன்மதன் போர்க்கோலத்தோடு (நான் அவளிடம் தோற்றுவிடும்படியாக) அவளுக்கு முன்னே செல்வான். அப்படி மன்மதனது காவலோடு செல்லும் அவளின் வருகைக்காக நான் தினந்தோறும் காத்திருப்பேன். எப்படியென்றால், அன்னியருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைப்பட்டிருந்த நமது நாட்டிலே, மக்களின் சுதந்திர உணர்வை வேரோடு அழித்துவிட வேண்டும் என்று விரும்பிய பிரித்தானிய அரசருக்கு, அவர்களிடம் ஊதியம் பெற்றுக்கொண்ட கீழ்த்தரமான கூலிப்படையினர், தேசபக்தர்களைக் கைப்பற்றுவதற்குக் காத்திருப்பது போலக் காத்திருப்பேன்.

நீரெ டுத்து வருதற் கவள்மணி
நித்தி லப்புன் னகைசுடர் வீசிடப்
போரெ டுத்து வருமதன் முன்செலப்
போகும் வேளை யதற்குத் தினந்தொறும்
வேரெ டுத்துச் சுதந்திர நற்பயிர்
வீழ்ந்தி டச்செய்தல் வேண்டிய மன்னர்தம்
சீரெ டுத்த புலையுயிர்ச் சாரர்கள்
தேச பக்தர் வரவினைக் காத்தல்போல்,
காத்திருந்து…............

அவ்வாறு காத்திருந்து, அவள் போகும் வழியெல்லாம் என்னுடைய கண்கள் அவளுடைய பின்னழகை முழுமையாக அனுபவித்துக் களிப்படையும்படியாக என் எண்ணமெல்லாம் அவளைத் தொடர்ந்து சுற்றிச் சுழலச் செல்வேன். எவ்வாறெனில், தேரின் சக்கரத்திலே ஒட்டிக்கொண்ட அந்தப் பல்லியொன்று தேர் எங்கெல்லாம் செல்லுமோ. அங்கெல்லாம் அதன் சக்கரத்திலே ஒட்டியபடி இழுப்புண்டு சுழன்று சுழன்று செல்வது போல அவளைத் தொடர்ந்து சுற்றிச் சுழன்று செல்வேன். அதிலே மகிழ்ச்சி கொண்டு பல நாட்களைக் கடத்தினேன்.

காத்திருந்து அவள் போம் வழி முற்றிலும்
கண்கள் பின்னழகு ஆர்ந்து களித்திட
யாத்த தேருருளைப்படும் மேழைதான்
யாண்டு தேர்செலும் ஆங்கிழுப் புற்றென
கோத்த சிந்தையோ டேகி அதில் மகிழ்
கொண்டு நாட்கள் பல கழித் திட்டனன்

இந்தப் பகுதியிலே பல்லியைக் குறிப்பதற்கு, வழக்கொழிந்து போன மேழை என்ற ஒரு சொல்லைப் பாரதியார் கையாள்கிறார். அச்சொல் அகராதிகளிற்கூடப் பெரும்பாலானவற்றில் இல்லை. உள்ள அகராதியிலும் அதற்கு, 'கொம்பில்லாத ஒருவகை விலங்கு' என்றே பொருள் தரப்படுகிறது. மேழை என்ற அச்சொல்லுக்குப் பல்லி என்று நாம் பொருள் கொள்வதற்கு வாய்ப்பளிப்பது, பழந்தமிழ் நூல்களுள் ஒன்றான புறனானூற்றில் உள்ள செய்யுளொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணொருத்தியின் கூற்றாக அமைந்தது அச்செய்யுள். வாழ்க்கை முழுவதும் அதன் மேடு பள்ளம் எல்லாம் தன் கணவனையே தொடர்ந்து வாழ்ந்த அப்பெண், தன் கணவனை இழந்த கையறு நிலையில், அவனது இறந்த உடலைப் புதைப்பதற்குரிய ஈமத்தாழியை வனைதற்குரிய குயவனை நோக்கிக் கூறுகிறாள்:

இடம் அகன்ற இந்தப் பெரிய ஊரிலே ஈமத்தாழி (கலம்) வனைகின்ற தலைமைக் குயவனே! ஈமத்தாழி வனைகின்ற தலைமைக் குயவனே! அச்சோடு கூடிய வண்டியொன்றின் சக்கரத்திலே ஒட்டிக் கொண்ட சிறிய, வெண்ணிறமான பல்லியைப் போல நானும் என கணவனது வாழ்க்கை வழி முழுவதும் அவனோடே பயணித்தேன். அப்படி வாழ்க்கையின் மேடு பள்ளமெல்லாம் அவனோடே பயணம் செய்த என்மேலும் கருணைகொண்டு, இந்தப் பெரிய பூமியின் அகன்ற பரப்பிலே நானும் அவனோடே துயிலும்வண்ணம் நீ செய்யும் தாழியைச் சற்று அகன்றதாக வனைவாயாக!

கலம்செய் கோவே! கலம்செய் கோவே!
அச்சுடைச் சாகாட்டு ஆரம் பொருந்திய
சிறுவெண் பல்லிபோல, தன்னொடு
சுரம்பல வந்த எமக்கும் அருளி,
வியன் மலர் அகன் பொழில் ஈமத்தாழி
அகலிதா வனைமோ
நனந்தலை மூதூர்க் கலம்செய் கோவே!
(புறம் - 256)

சங்கச் செய்யுளிலேயே பல்லியென்ற சாதாரண இன்றைய காலத்துச் சொல் பயின்றிருக்க, கவிதையின் எளிமையை வற்புறுத்திய பாரதியின் பாடலிலே அகராதிகளிலும் காணுதற்கரிய மேழை என்ற சொல் பயின்றிருப்பது முரண்நகை தருவதாகும்.

பாட நூலிலுள்ள பாரதியின் சுயசரிதைப் பாடல்களை மாணவர்கள் விளங்கிக் கொள்வதற்கு வாய்ப்பாக அவற்றின் பொருளையும் இங்கு தருகிறோம்.

பாரதியார் 'சுயசரிதை' (பாடல்கள் : 9 – 13)

அழகிய முத்தினை ஒத்த புன்னகையானது ஒளி வீசவும் (எதிரில் வருபவர்களெல்லாம் அவளது அழகில் மயங்கி வீழ்ந்துவிடும் படியாக) போர்க் கோலம் கொண்ட மன்மதன் முன்னே செல்லவும் நீர் எடுத்து வருவதற்காகத் தினந்தோறும் அவள் போகும் போதெல்லாம் அவளைக் காண்பதற்காக - சுதந்திரமாகிய நல்ல பயிரை வேரோடு அழித்துவிட எண்ணிய (அக்காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவை ஆண்ட ஆங்கிலேய ஆட்சியின்) மன்னரது கூலியைப் பெற்றுக்கொண்ட கீழ்த்தனமான ஒற்றர்கள் (சுதந்திரத்துக்காகப் போராடும்) தேசபக்தர்களது வரவுக்காக (அவர்களைக் கைப்பற்றும் நோக்கில்) காத்திருப்பது போல (அவளைக் காண்பதற்காக) - காத்திருந்து, அவள் போகின்ற வழியெல்லாம் (அவளைத் தொடர்ந்து) எனது கண்கள் அவளது பின்னழகிலே ஈடுபட்டு மகிழ, தேரொன்றின் சக்கரத்திலே ஒட்டிக்கொண்ட பல்லியொன்று, அத்தேர் எங்கெல்லாம் செல்லுகிறதோ அங்கெல்லாம் (சக்கரத்தோடு சுழன்று சுழன்று) இழுபடுவதுபோல அவளோடே கோக்கப்பட்ட மனதோடு சென்று திரிவதிலே மகிழ்ச்சி கொண்டு, பல நாட்களைக் கழித்தேன்.

(அவ்வாறெல்லாம் அவளைத் தொடர்ந்து திரிகின்ற வேளைகளில் எப்போதாவது) மலர்ச்சியும் ஒளியும் மிக்க அவளது முகம் (என்னை நோக்கித்) திரும்புமாயின் (அப்பொழுதே எனது பழைய) புலனெல்லாம் அழிந்து ஒரு புதிய உயிரினைப் பெற்றவன் போலாவேன். மனிதனானவன், புலன்களும் மனம் முதலான கருவிகளும் உயிரும் (ஆகிய அனைத்தும்) ஒன்றுபட்ட விருப்பத்தோடு நன்மைகள் எவற்றையும் விரும்புவானாகில் அங்கே அப்பொழுதே அவ்விருப்பங்களை அவன் அடையப் பெறுதல் உறுதியானது என்று அறிவொளிமிக்க நூல்களை நன்கு உணர்ந்த ஞானியர்கள் கூறுவார்கள். நானும் அது மெய்யானதே என்பதை அறிந்துள்ளேன். (அலையும் தன்மையுள்ள) விலங்குகளின் இயல்பு எம்மிடம் இல்லையென்றால் நாம் விரும்பியவுடனே வானத்தையும் அடையக் கூடியவர்களாவோம்.

(எம்மைச்) சூழ்ந்துள்ள இந்த உலகத்திற் காணப்படுகின்ற காட்சிகள் யாவும் மனதோடு சம்பந்தப்பட்டவை. ஆகையால், நமது மனதில் ஆழமான ஆசையொன்று இன்று இருக்குமானால், அந்த எண்ணத்தின் வெற்றி நாளையே வந்தெய்திவிடும். தாழ்வு மனப்பான்மை உடையவர்கள், சோர்வுள்ளவர்கள், ஆடுபோல (ஒன்றிலே மனம் பற்றாமல்) ஓடியோடிப் பல விடயங்களை விரும்புபவர்கள், வந்து சேருகின்ற இடையூறுகளுக்குப் பயப்படுபவர்கள் ஆகிய இவர்கள் தாம் விரும்பிய எதனையும் அடைய மாட்டார்கள்.

(அப்படியானவர்கள் தங்கள் தவறை உணராதவர்களாக எல்லாம் தங்கள் விதிப்பயன் என்று) விதியை நோவார்கள் தங்கள் நண்பர்களைக் குறை சொல்வார்கள். கோபம் மிகுந்தவர்களாகத் தம் பகைவரைப் பழித்துரைப்பார்கள் (மற்றவர்களுக்கு எதிராக) சதிகள் செய்வார்கள் பொய்யான சாத்திரங்களையெல்லாம் எடுத்துரைப்பார்கள் (முயற்சியின்றியே முன்னேறுவதற்கு ஏதேனும் வழி இருக்கிறதா என்று பார்ப்பதற்காகத் தமது) சாதகங்களைப் புரட்டுவார்கள் பொய்யான அறிவினாலே கீழ்த்தரமான நாத்திகம் பேசுவார்கள் (அவர்கள்) அழிவற்றதும் முழுமையானதுமான ஈடுபாடே எல்லா ஈடேற்றங்களையும் தரும் என்பதை உணரமாட்டார்கள். கண்ணில்லாதவர்கள் போல (வாழும் வழியறியாது) திகைத்து நிற்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திலம் : முத்து

மதன் - மன்மதன்: (இந்திய புராண மரபில்) ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே காதலைத் தோற்றுவிக்கும் தேவன்.

சாரர்கள் : ஒற்றர்கள்

மேழை : ஒருவகை விலங்கு (பல்லி)
யாத்ததேர்: செய்யப்பெற்ற தேர்
புலன்: (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவற்றை அறியும்) அறிவு.
கரணம்: (ஒருவன் சிந்திப்பதற்கும் செயற்படுவதற்குமான மனம், புத்தி, சித்தம் முதலான) கருவிகள்
ஆவி: உயிர்
நண்ணுறல்: அடைதல்
திண்ணம்: உறுதி / நிச்சயம்
மானதம்: மனதோடு சம்பந்தப்பட்டது
வெகுளி: (இங்கு) கோபம்
சாதகம்: சோதிட ரீதியாக ஒருவரது பிறந்த நேரத்துக் கிரக நிலைகளையும் அவற்றின் அடிப்படையிலான பலன்களையும் கணித்துக் கூறும் குறிப்பு
நாத்திகம்: கடவுள் இல்லை என்று மறுக்கும் கொள்கை
கதி: ஈடேற்றம் / உய்தி

பயன் உவமை

ஒன்றன் காரணமாகத் தோன்றுகின்ற காரியமே பயனெப்படுகிறது. பயனைப் பொதுத்தன்மையாகக் கொண்டு இரு பொருள்களிடையே ஒப்புமை காட்டப்படுகிற பொழுது அந்த உவமை, பயனுவவம் எனப்படுகிறது. இவ்வுவமத்தைப் பயன்படுத்த விரும்பிய கம்பன், சீதையின் மொழியைச் சிறப்பித்து, கடலமிழ்தின் தெளிவானதொர் மொழி எனப் பாராட்டுகிறான். இங்கு அமிழ்துக்கும் சீதையின் மொழிக்குமிடையிலான பொருத்தப்பாடு பலவாய் அமையக்கூடுமெனினும் மொழியின் பயன் பற்றிய உறவு நிலை நயம் மிக்கதாகும்.

நன்றி : கம்ப உவமைத் திறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் ஒழுக்கம்



க. ஞானரெத்தினம்
விரிவுரையாளர்,
கல்விப் பீடம்,
திறந்த பல்கலைக்கழகம்

Teaching Ethics

அறிமுகம் :

கல்வியின் பிரதான இலக்கு "ஜனநாயகப் பண்புடைய சிறந்த பிரசையை உருவாக்குதல்" என்பதாகும். இதற்காக நடத்தை விருத்தி, ஒழுக்காறு, நற்குணவிருத்தி ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை கல்வி வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கு மேலாக மார்க்கங்களும் மாணவரை அல்லது மனிதனை முழுமை பெற்ற, மனிதம் நிறைந்த மனிதனாக வாழ வழிகாட்டுகின்றன. கல்வி – ஒழுக்கம் என்பன ஒன்றை விட்டு ஒன்று பிரிக்கமுடியாத இறுக்கமான பிணைப்புகள் ஆகும். கல்வி கற்கின்ற ஒருவருக்கு ஒழுக்கம் அவசியம் என்பதும் கல்வி கற்பதினூடாக ஒழுக்கம் ஓம்பப்படும் என்பதும் நாம் அறிந்த விடயங்களாகும். மனிதப்பிறவியில் "ஒழுக்கம்" என்பது உயிரிலும் மேலாகப் போற்றப்படுகின்றது. வயது, இன மத வேறுபாடின்றி அனைவரும் ஒழுக்க விதிமுறைகளைப் பேணவேண்டியது கட்டாயமானதாகும். இதன் காரணமாக "கடவுளுக்குப் பயப்படுதல் அறிவின் ஆரம்பமாகும்" (Fear of God is the beginning of knowledge) என்ற கூற்றும் வழங்கப்பட்டு வருகின்றது.

ஒழுக்காறு, மனப்பாங்கு, நல்லொழுக்கம் என்பனவற்றைப் பொதுவாக விழுமியம் (Values) என்று கூறலாம். விழுமியம் அவற்றுள் மிகமுக்கியமானதான "ஒன்பது ஒழுக்க நெறிகள்" இங்கு தரப்பட்டுள்ளன என்பது மனிதனின் நல்லொழுக்கக் கற்றலிலும் நடத்தையிலும் உள்ள ஒரு விடயமாகும். இது மனப்பாங்கில் ஆரம்பமாகின்றது. மனப்பாங்குகள் பல சேர்வதன் மூலம் விழுமியம் உருவாகின்றது அல்லது தோன்றுகின்றது எனலாம். விழுமியங்கள் நல்லொழுக்கத் தீர்மானங்களுக்குத் தேவையான காரணிகளை வழங்குகின்றன.

நல்லொழுக்கத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஒழுக்காறு தோன்றுகின்றது. "நல்லவை வளர்வதற்கும் தீயவை விலகிச் செல்வதற்கும் வழிகாட்டுகின்ற நடவடிக்கைகளின் நியமத் தொகுதியே நல்லொழுக்கம்" என எம். வீ. சீ ஜெப்ரீஸ் (1962) கூறுகின்றார். நல்லொழுக்கம் என்பது தத்துவங்களில் "சன்மார்க்க சாத்திரம்"(Ethics) என அழைக்கப் படுகின்றது.

ஒரு நிறுவனம் அல்லது பாடசாலையின் வெற்றிக்கு ஒழுக்கக்கோவை இன்றியமையாததாகும். அந்நிறுவனத்தின் பங்குதாரர் ஒவ்வொருவரும் ஒழுக்க நெறிகளை பின்பற்ற வேண்டியது அவசியமானதாகும். ஆசிரியர் ஒருவர் கற்பித்தலின் ஒழுக்க நெறிகளைப் பின்பற்றினால் மாத்திரமே வெற்றிகரமான கற்றல் செயற்பாட்டினை ஏற்படுத்தமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலமே மாணவர் கற்றலின்பால் ஈர்க்கப்பட்டு விளைவுகளும் மேலோங்கிக் காணப்படும். ஆசிரியர் அல்லது கற்பித்தல் தொடர்பான ஒழுக்க நெறிகள் கல்வியாளர்கள் பலரினால் அவ்வப்போது முன்வைக்கப்பட்டு வந்துள்ளன.

கல்லூரி கற்பித்தலுக்கான ஒழுக்கக் கொள்கைகள் (Principles of Ethical College Teaching)

1) பாடத்தேர்ச்சி Content Competence

ஆசிரியர் ஒருவருக்கு இருக்கவேண்டிய மிகமுக்கியமான கற்பித்தல் ஒழுக்கம் பாடத்தேர்ச்சி அல்லது பாடப்புலமை என்பதாகும். தனக்குரிய கடமையை உச்சமட்டத்தில் செய்வதற்கு இது அவசியமாகும். மாணவர்களுக்கு சரியான "எண்ணக்கருவாக்கம்" ஏற்படுமாறு சிறப்பான கற்பித்தலை ஆசிரியர் நடாத்துதல் வேண்டும். பல விடயங்களைத் தேடி அறிந்து போதிய பாட ஆயத்தத்துடன் பொருத்தமான தர உள்ளீடுகளையும் கற்பித்தல் முறைகளையும் ஆசிரியர் பயன்படுத்த வேண்டும். ஆசிரியர் ஒருவர் "ஓர் ஆராய்ச்சியாளர்" என்பதனையும், அதேவேளை "கற்றலின் வாழ்நாள் மாணவர்" என்பதனையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். நவீன யுக மாணவனுக்கு ஏற்ப, தன்னை புதுப்பித்துக்கொள்ள வேண்டியதும் சிறந்த ஆசிரியரின் கடமையாகும்.

2) சிநேகபூர்வ கற்றல் கற்பித்தல் தேர்ச்சி (Pedagogical Competence)

தற்பொழுது "மாணவர் மையம்" பற்றிப் பேசப்படுகின்றது. வகுப்பறையில் மாணவனே எஜமான் ஆவான். வகுப்பறையிலுள்ள மாணவர்கள் ஒவ்வொருவரையும் ஆசிரியர் ஏற்றுக் கொண்டு சிநேகபூர்வமான செயற்பாட்டை நடாத்துதல் வேண்டும். மாணவர்கள் ஒவ்வொருவரும் "எதிர்காலத் தலைவர்கள்" என்பதனை மறந்துவிடலாகாது. கலந்துரையாடலுடன் கூடிய ஈடுபாட்டை வகுப்பறையில் ஏற்படுத்துதல் வேண்டும். பொருத்தமான வேளையில் மாணவர்களை ஊக்கப்படுத்தி ஆலோசனைகளை வழங்குதல் வேண்டும். அன்பாகவும் பண்பாகவும் மாணவருடன் பேசுதல் சிறந்த முன்மாதிரி ஆகும்.

3) உணர்வுபூர்வமான அணுகுமுறை (Dealing with Sensitive)

ஆசிரியர் தமது கடமைகளை உணர்வுபூர்வமாகச் செய்தல் வேண்டும். வகுப்பறையில் உள்ள ஒவ்வொருவரும் தமது சொந்தப் பிள்ளைகள் என்ற மனநிலை அவசியமானதாகும். இதற்காக ஆசிரியர், பெற்றோர் ஆகவும் மூத்தோர் ஆகவும் தொழிற்படவேண்டும். மாணவர்களின் உளவியல் தேவைகளை அறிந்து பரிகாரம் தேடவேண்டிய பொறுப்பும் சிறந்த ஆசிரியருக்கு உண்டு. சிறந்த ஆசிரியர், மாணவர்களுக்கு உதவும்போது களைப்படையமாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) மாணவர் அபிவிருத்தி (Student Development)

மாணவரின் வளர்ச்சிக்கு ஏற்ப அவரது விருத்தியும் ஏற்படவேண்டும். பாடவிதானம், இணைப்பாடவிதானம் ஆகிய இரண்டிலும் மாணவர் விருப்புடன் ஈடுபட ஆசிரியர் வழிகாட்டுதல் வேண்டும். மாணவர்களின் பலம், பலவீனம் என்பதனை அறிந்து அதற்கான பரிகாரச் செயற்பாடுகளில் ஆசிரியர் ஈடுபட வேண்டும். ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு திறன்கள் மறைந்துபோய் இருக்கும். பொருத்தமான வேளையில் இவற்றை இனங்கண்டு மேம்படுத்து வதற்கான நடவடிக்கைகளில் கவனம் செலுத்துதல் வேண்டும். விசேடமாக மாணவர் தொடர்பாக எந்த விடயத்திலும் "வகை சொல்லும் பொறுப்பு" தமக்கு உரியது என்பதனை ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

2) இரட்டை உறவுமுறை பேணல் (Dual Relationship with Students)

மாணவர் ஆசிரியரை நேசிக்கவேண்டும் என்பது உண்மைதான். இதனைப் போல் ஆசிரியரும் மாணவரை வெளிப் படையாக அதிகம் நேசிக்க வேண்டும். சம்பளத்திற்காகவன்றி மாணவனின் எதிர்காலம், நலன் என்பனவற்றிற்காகத் தமது சேவைகளை ஆசிரியர் வழங்குதல் வேண்டும். மாணவருக்கு ஏதும் இடர் ஏற்படின் முன்னின்று உதவுபவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும். மாணவர்-அதிபர் என்பவருக்கிடையே ஓர் இணைப்பாளராகவும், கருமமாற்ற வேண்டிய தேவை ஆசிரியருக்குண்டு. மேலும் மாணவர்களின் சமூக, சமய ரீதியாக நேர்மையுடன் நடக்கவேண்டும்.

3) இரகசியம் பேணல் (Confidentiality)

விருப்பு, வெறுப்பு, மனவெழுச்சி ரீதியாக பல பிரச்சினைகள் மாணவர்களுக்கு இருக்கும். இதனை இவர்கள் மிகவும் நம்பிக்கைக்குரிய ஆசிரியர்களிடம் கூறுதவன் மூலம் ஆறுதல் அடைவர். இவ்வேளையில் ஆசிரியர் இவற்றை அக்கறையுடன் கேட்டு பொருத்தமான ஆலோசனைகளை முன்வைத்தல் வேண்டும். அத்துடன் இது தொடர்பாக இரகசியம் பேணல்வேண்டும். மாணவர் களது தனிப்பட்ட அல்லது அந்தரங்க விடயங்களைச் சக ஆசிரியரிடமோ அதிபரிடமோ கூறுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாகக் கட்டிளமைப் பருவ மாணவர்களின் விடயங்களை ஆசிரியர் மிக்க அவதானத்துடன் கையாளுதல் வேண்டும். கட்டிளமைப்பருவ மாணவர்களது இயல்புகள், தேவைகள் தொடர்பாக ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியதும் அவசிய மானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) ஏனைய ஆசிரியரை மதித்தல் (Respect for Colleagues)

மாணவரது முழுமையான வெற்றி ஆசிரியர்களின் கூட்டுமுயற்சியிலே தங்கியுள்ளது. இதன் காரணமாக ஆசிரியர்களிடையே புரிந்துணர்வு, குழு ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு என்பன அவசியமானவையாகும். ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தம்மைப்போல் மற்றயவரை நேசிக்க வேண்டும். இளம் ஆசிரியர்கள் சிரேஷ்ட ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுபோல் சிரேஷ்ட ஆசிரியர்கள் இளம் ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக நடப்பதோடு அவர்களுக்குப் பல வாய்ப்புக்களை விட்டுக் கொடுக்கவேண்டும். ஒருவருக்கொருவர் உதவிசெய்து, ஊக்கப்படுத்தி தமது கடமைகளைச் சீராகச் செய்தல் வேண்டும். எந்த முயற்சியும் "மாணவர்களின் நன்மைக்காகவே" என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஆசிரியர்களிடையே அரசியல், சமய கலாசார வேறுபாடுகள் எதுவும் இருக்கக்கூடாது. தமது நிறுவனத்தின் வெற்றியே தமது பொது நோக்காக இருக்கவேண்டும். தம்மிடையே அன்பாகவும் அடக்கமாகவும் பேசுதல் வேண்டும். புறங்கூறுதல், குறை கூறுதல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

5) மாணவர்களின் மதிப்பீட்டுத் தராதரம் (Valid Assessment of Students)

வகுப்பறைக்குச் செல்லும் ஆசிரியரின் நோக்கம் நிறைவேறியுள்ளதா? என்பதனை மதிப்பீட்டிலே அறியமுடியும். இதனால் மதிப்பீடு பொருத்தமானதாகவும் தராதரம் உடையதாகவும் இருத்தல் வேண்டும். எதனை? எப்படி? எப்போது? மதிப்பீடு செய்வது என்பதில் மிகவும் சிறப்பான திட்டம் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். பக்கம் சாராமல் மதிப்பீடு செய்வது அவசியமாகும். மதிப்பீட்டினை அடிப்படையாகக்கொண்டு பின்னூட்டல், ஆலோசனைகளை மேற்கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) பாடசாலையைக் கனம் பண்ணல் (Respect for Institution)

ஒவ்வொரு பாடசாலையும் ஒவ்வொரு பாரம்பரியம் கொண்டதாக இருக்கும். அப்பாடசாலையில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் இப்பாரம் பரியங்களைக் கனம்பண்ணுதல் வேண்டும். பாடசாலைக்கொடி, பாடசாலைக் கீதம், பாடசாலைச் சமூகம் என்பனவற்றை ஆசிரியர்கள் ஒவ்வொரு வரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு



இடங்கொடுக்காது பாடசாலைப் பாரம்பரியத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்வது சிறந்த ஒழுக்கமாகும். தமது உடை, நடை, பேச்சு என்பன பாடசாலைப் பாரம்பரியத்தோடு இணைந்ததாக அமைந்திருத்தல் சிறப்பானதாகும்.

முடிவுரை :

பாடசாலையின் சிறப்பு, ஆசிரியர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. நல்ல ஆசிரியர் குழாம் பாடசாலையில் இருக்குமாயின் அங்கு நல்ல கவின்நிலை உருவாகி கற்றற் பேறுகள் மேலோங்கிக் காணப்படும். அதேவேளை அப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர் களிடையே சிறப்பான தனித்துவம் காணப்படும். இதனால் ஆசிரியர் ஒருவர் தமது சொந்த விருப்பு வெறுப்புக்கு அப்பால் சென்று, தியாக உணர்வுடன் சேவையாற்ற வேண்டியவராகின்றார். கல்வியின் இலக்குகளை நிறைவாக அடைவதற்காகவும் மாணவரிடையே சிறந்த ஒழுக்கத்தை நிலைநாட்டு வதற்காகவும் ஆசிரியர்கள் ஒவ்வொ ருவரும் "கற்பித்தல் ஒழுக்கத்தை" பின்பற்றி நடக்கவேண்டியது அவசிய மாகின்றது. இதன்மூலம் அவர்கள் இறைவனுக்குச் சேவை செய்கின் றவர்களாகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை நிதி முகாமைத்துவத்தில் ஆவணப்படுத்துதல்

எஸ்.எம்.கைதர் அலி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(கல்வி முகாமைத்துவம்)
வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

நிதியோடு சம்பந்தப்படுவதன் காரணமாக நிதி ஆவணங்கள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன. நிதி முதலீடுகள் யாவற்றினதும் இறுதிப் பயன் சிறந்த கல்வி வெளியீடுகளாக இருக்கும் வரை முறையானதும் திறந்த தன்மையுடையதுமான நிதிச்செயன்முறைகள் பாடசாலை போன்றதொரு நிறுவனத்துக்கு மிக முக்கியத்துவமுடையதாகின்றன. அந்தவகையில் கோப்புக்களைத் தயாரிப்பதில் பின்வரும் விடயங்கள் முக்கியமானவை.

- கோப்பின் தலைப்பு
- கோப்பின் தொடர்பு இலக்கம்
- அறிக்கைத் தாள்கள்.

பாடசாலையின் தேவைப்பாடுகளுக்கேற்பப் பல்வேறு கோப்புகள் திறக்கப்படலாம். பாடசாலையொன்றின் நிதி முகாமைத்துவத்தில் பராமரித்து வைத்திருக்கவேண்டிய சில முக்கியமகன கோப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- வசதிகள் மற்றும் சேவைகள் கோப்புகள்
- பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கோப்புகள்
- ஆசிரியர் சம்பளக் கோப்புகள்
- புலமைப்பரிசில்கள் தொடர்பான கோப்புகள்
- அளவீட்டுக் கோப்புகள்
- கணக்காய்வு விசாரணைக் கோப்புக்கள்

மேற்கூறிய முதன்மைக் கோப்புக்களினை அடிப்படையாகக் கொண்டு பாடசாலையொன்றில் நிதி முகாமைத்துவம் தொடர்பான பின்வரும் ஆவணங்கள் பேணப்படுதல் வேண்டும்.

- **அடியிதழ்ப் புத்தகங்கள் பதிவேடு:**

பிற தரப்பினர் ஒருவருக்குக் காசோலையை அல்லது பற்றுச்சீட்டைக் கிழித்துக் கொடுத்த பின்பு தன்னிடம் வைத்துக்கொள்ள எஞ்சியிருப்பது அடியிதழாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- காசோலைப் புத்தகங்கள்
- பாடசாலை அபிவிருத்திக் குழு (SDC) பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்
- புகையிரத ஆணைச்சீட்டுப் புத்தகம்
- வசதிகள் சேவைகள் கட்டணப் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்.
- பாடசாலை அபிவிருத்திச் சங்க (SDC) பற்றுச்சீட்டுப் புத்தகங்கள்.

காசுப்புத்தகம் (Cash Book):

நிறுவனமொன்றின் மாதாந்த வரவு செலவு பற்றிய ஒரு ஆவணமே காசுப்புத்தகம் ஆகும். எல்லா காசுப் பெறுவனவுகள், கொடுப்பனவுகள் வங்கி வைப்புக்கள் மற்றும் மீள் பெறுவனவுகள் உள்ளடக்கப்பட்ட ஒரு நிதிச் சஞ்சிகை இதுவாகும். காசுப் புத்தகமானது, ஒரு உள்ளகக் கணக்காய்வு முறையாக, வங்கிக் கூற்றுக்களுடன் பருவந்தோறும் இணக்கஞ்செய்யப்பட வேண்டும். எல்லாப் பற்றுச்சீட்டுக்களும் தனித்தனியாகப் பதியப்படுகின்ற சகல காசுக் கொடுப்பனவுகளிலும் உள்ள காசு (செலுத்தக் கூடிய கணக்குகள் செயற்படுகின்ற செலவுகள், கைக்காசு, கொள்வனவுகள் போன்றவைகள்) பதிவு செய்யப்படல் வேண்டும்.

- **வாக்குப்பண பேரேடு (VOTES LEDGER):**

கணக்குகளின் ஒரு பதிவுப் புத்தகமே ஏடாகும். இதில் கணக்குகள் தனித்தனியாகப் பதிவுசெய்யப்பட்டு, அவற்றின் ஆரம்ப/முடிவு மீதிகள் காட்டப்படுகின்றன. நாட்குறிப்பு ஏடானது (Journal) நிதி நடவடிக்கைகளை அவற்றின் மீதிகளைக் காட்டாமல் ஆனால் ஒவ்வொரு கணக்கிலும் எவ்வளவு தொகை அறவிடப்படவிருக்கிறது என்பதைக் காட்டி Chronlogical ஒழுங்கில் பட்டியலிடப்பட்டுகின்றன. ஏடானது நாட்குறிப்பேட்டிலிருந்து ஒவ்வொரு நிதிசார் நடவடிக்கையையும் எடுத்து, ஒவ்வொரு நடவடிக்கையும் பட்டியல் படுத்தப்பட்டுள்ள (Corresponding) கணக்குகளின் அடிப்படையில் அவற்றை பதிவு செய்யப்படுகின்ற ஒரு ஆவணமாகும். ஏடானது ஐந்தொகைக்குள்ளும் வருமானக் கூற்றினுள்ளும் மாற்றப்படுகின்ற ஒவ்வொரு கணக்கினதும் மொத்தத்தைக் கூட்டிக் காட்டுகின்றது.

- **வருமான ஏடு (Income Ledger):**

வருடாந்த அமுலாக்கல் திட்டத்திற்கிணங்க பாடசாலையானது பல்வேறு வகுதிகளின்கீழ் (Categerios) ஒரு வருமானத்தை இலக்கு வைக்கிறது. இது ஒரு உத்தேச வருமானமாக இருக்கக்கூடும். உத்தேசித்த தொகையை அறிந்து கொண்டதும் பாடசாலை முகாமையானது இலக்கை எய்தும் முயற்சியில் கட்டணங்களைச் சேகரிப்பதற்கான செயலொழுங்குகளை மேற்கொள்ள முடியும். வருமான ஏடானது, உத்தேசிக்கப்பட்ட, எதிர்பார்க்கப்பட்ட வருமானம் பற்றிய தகவல்களைத் தருகிறதோடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகரிக்கப்பட்டது எவ்வளவென்பதையும், இலக்கின் மீதியையும் பற்றிய தகவல்களையும் தருகிறது. இந்த ஏடுகளைப் பேணுவதானது பாடசாலை முகாமைக்கு கண்காணிப்பில் துணைசெய்வதோடு, எதுவித கஷ்டமுமின்றி அறிக்கைகளைத் தயாரிப்பதிலும் உதவுகிறது.

- **கைக்காசுப் புத்தகம் (PETTY CASH BOOK):**

கைக்காசுப் புத்தகமென்பது சிற்றளவு பெறுமதிக் கொள்வனவுகளின் ஒரு பதிவு ஆகும். இது அட்டுறு (Imprest) முறைமையால் பொதுவாகக் கட்டுப்படுத்தப்படும். கோப்பி, தேநீர் போன்ற உருப்படிகள், அலுவலர்க்கான உபசரணை, அலுவலக வேலைக்கான சிறிய தொகை எழுதுதாள்கள், முத்திரைகள் போன்ற அம்சங்கள் கைக்காசுப் புத்தகத்தில் பட்டியலிடப்பட முடியும். கைக்காசுக்காக அனுமதிக்கப்படும் தொகை காலத்துக்குக் காலம் வேறுபட முடிவதோடு அனுமதிக்கப்பட்டதொகை பாடசாலை அதிபருக்குத் தெரிந்திருக்கவும் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தொகையானது கைக்காசாகவும் சிறிய அளவு கொடுப்பனவுகளுக்காகவும் பயன்படுத்தமுடியும். கைக்காசு ஒருமுறை செலவளிக்கப்பட்டுவிட்டால் அது, சரியாக்கப்பட்டு ஒரு புதிய தொகை பயன்பாட்டிற்காக எடுக்கப்படல் வேண்டும்.

- **முற்பணக்கொடுப்பனவு பதிவேடு (ADVANCE REGISTER) :**

பாடசாலையொன்றில் ஆசிரியர்களுக்கும் அதிகாரமளிக்கப்பட்டவர்களுக்கும் முற்பணம் கொடுப்பனவு செய்யப்படும். பாடசாலையின் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளுக்குப் பணத்தைச் செலவளிப்பதற்காக இம்முற்பணக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. முற்பணப் பதிவேடானது, யாருக்கு முற்பணம் கொடுக்கப்பட்டது, திகதி, தொகை போன்ற விபரங்களை முகாமைத்துவத்துக்கு வழங்குகிறது. குறிக்கப்பட்ட செலவினங்களுக்காகப் பணம் பயன்படுத்தப்பட்ட பின்பு முற்பணம் தீர்க்கப்படவேண்டும். அவ்வாறு தீர்க்கப்பட்ட வவுச்சர் (Gen 35) ஒன்றில் செலவின விபரம் எழுதப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டுகளும் இணைக்கப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டும். முற்பணத்தைப் பெற்றவரால் பற்றுச்சீட்டுக்களில் சரியானவையென உறுதிப்படுத்தப்படல் வேண்டும். ஏதும் மீதிப்பணம் இருப்பின் அது பாடசாலைக் கணக்கில் இடப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு ஒன்று வவுச்சருடன் இணைக்கப்படல் வேண்டும். வழங்கப்பட்ட முற்பணத்துக்குச் சமனாக மொத்த தீர்க்கப்பட்டதொகை இருத்தல் வேண்டும். மொத்தச் செலவினமானது எடுக்கப்பட்ட முற்பணத் தொகையிலும் அதிகமாயிருப்பின் வவுச்சரில் அது மேலதிக செலவினமாகக் காட்டப்படல் வேண்டும். ஆசிரியர் பாடசாலையிலிருந்து மீதிப் பணத்தைப் பெற அது உதவும். முற்பணப் பதிவேட்டின் தகவல்களைக் கண்காணிக்கும் போது முற்பணத்தைப் பெற்று அதனைத் தீர்க்காமலிருப்போரின் விபரத்தை அறிய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த நிதி முகாமைத்துவத்துக்காக, முகாமைத்துவமானது, செலவு இடம்பெற்று முடிந்தவுடன் பாடசாலையால் வழங்கப்பட்ட முற்பணத் தொகையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை ஊக்குவிக்க வேண்டியது அவசியம்.

- **வங்கி இணக்கக் கூற்று (BANK RECONCILIATION STATEMENT):**

கணக்கீட்டுச் செயன்முறைகளில் வங்கி இணக்கக் கூற்றுக்கள், மாதாந்த நிலைமைகளை மதிப்பிடவும் மாத வரவீனங்கள் செலவீனங்களைக் கவனித்திடவும் பற்றுச்சீட்டுக்களைப் பேணிடவும் காசோலைகளை வழங்கல், ஏனையசெலவுகளைச் செய்தல் ஆகிய யாவற்றுக்கும் மிக முக்கியமானதாக விளங்குகின்றது. வங்கிக் கணக்கில் நாளாந்த வரவுகளையும் கொடுப்பனவுகளையும் காட்டுகின்ற இவ்வங்கிக் கூற்றுகள் வங்கியினால் பாடசாலைகளுக்கு மாதந்தோறும் அனுப்பிவைக்கப் படுகின்றன. இக்கூற்றுக்களே வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்திடப் பயன்படுத்தப்பட வேண்டும். (FR 395) வங்கிக் கணக்குகளைப் பேணுகின்ற சகல பாடசாலைகளும் அல்லது திணைக்களங்களும் ஒவ்வொரு மாத முடிவிலும் தொடர்கிற மாதத்தின் 15ஆம் திகதிக்கு முன் வங்கி இணக்கக்கூற்று ஒன்றைத் தயாரிக்க வேண்டும். அத்தோடு மாதந்தோறும் காசாக்கப்படாத காசோலைகளின் பட்டியலும் தேறாத பணம் அனுப்புதல்களின் பட்டியலும் பேணப்படவேண்டும்.

- **நான்கு மாதக் கூற்று (FOUR MONTHLY STATEMENT):**

நிறுவனங்களில் நிதிசார் முகாமைத்துவத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காகவே பிரதானமாக நான்கு மாதக் கூற்று பேணப்படுகிறது. அது காலாண்டுக் கூற்றாகவோ நான்கு மாதக் கூற்றாகவோ அமையலாம். ஆண்டின் முதலாவது நான்கு மாதக் கூற்றானது ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்காகவே பொதுவாகத் தயாரிக்கப்படும். 2ஆவது கூற்று மே, ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்களுக்காகவும் 3வது கூற்று செப்டெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்காகவும் தயாரிக்கப்படுகின்றன.

- **இருப்புப் புத்தகம் (STOCK BOOK)**

பாடசாலைக்குக் கிடைக்கப் பெறுகின்ற சகல பொருள்களும் பொருட் பதிவேட்டில் பதியப்பட வேண்டும். இருப்புப் புத்தகத்தின் முன்பக்கத்தில், உள்ளடக்கம் தயாரிக்கப்பட்டு பொருள்களின் பெயர் விபரம், அவை பதியப்பட்டுள்ள பக்க இலக்கம் என்பன, இலகுவாகத் தேடிக்கொள்ள உதவும் பொருட்டுக் குறிப்பிடப்படல் வேண்டும். ஒரு பொருளுக்காகக் பக்கம் நிரப்பப்பட்டு முடிந்து விடின் (உ-ம் பக்கம் 10) அடுத்து வரும் பக்கமொன்றிற்கு (உ-ம் பக்கம் 80) அது முன்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்படல் வேண்டும். நிரப்பப்பட்ட பக்கத்தின் இறுதியில் (பக் 10) முன்கொண்டு செல்லப்பட்ட பக்கத்தின் எண் (பக் 80) மீதி இருப்புத் தொகையுடன் சிவப்பு மையில் பக்கம் 80இற்குக் கொண்டு செல்லப்பட்டதென எழுதிக்காட்டப்படல் வேண்டும். அவ்வாறே புதிய பக்கத்தின் மேல் மூலையில் பக்கம் 10 இலிருந்து கீழ்க் கொண்டுவரப்பட்டது என்ற குறிப்பு சிவப்பு மையில் இடப்படல் வேண்டும். இப்பதிவினைச் செய்த பிறகு அதிபர் ஒப்பமிடல் வேண்டும்.

- **தனியாள் பொருட்பதிவு புத்தகங்கள் (INDIVIDUAL INVENTORIES):**

பொது 44 படிவங்கள் தனியாள் பொருட் பதிவுப் புத்தகத்தில் தரப்பட்டுள்ளன. இப்படிவமானது பொது 198 இருப்புப் புத்தகப் படிவத்திலும் வேறுபட்டதாகும். பொது 44 தனியாள் பொருட் பதிவுப் புத்தகத்தில் இடப் பக்கத்தில் பெறப்பட்ட உருப்படிகளுக்காகவும் எதிர்பக்கத்தில் செலவழிக்கப்பட்ட உருப்படிகள் பற்றியும் குறிப்பிடப்படல் வேண்டும். இரண்டு பக்கங்களுக்கும் ஒரே பக்க இலக்கம் வழங்கப்பட வேண்டும். ஏனெனில் இரண்டு பக்கங்களிலும் ஒரே உருப்படிகளின் பெறுகையும் (இடப் பக்கத்தில்) அவ்வுருப்படிகளின் செலவழிப்பும் (வலப் பக்கம்) குறிக்கப்படுகின்றன. இரண்டு பக்கங்களிலும் 10 உருப்படிகளை எழுதுவதற்கான நிரல்கள் உள்ளன. இடப் பக்கத்தில் பெறப்பட்ட உருப்படிகளைக் குறிக்கவும் வலப் பக்கத்தில் செலவழிக்கப்பட்ட உருப்படிகளைக் குறிப்பிடவும் இரண்டு பக்கங்களிலும் உரிய நிரல்களில் ஒரே உருப்படிகள் எழுதப்படல் வேண்டும்.

- **நுகராப் பொருட் பதிவேடு (ACCESSION REGISTER):**

பாடசாலை நூலகத்துக்கான புத்தகங்கள் கிடைக்கப்பெற்றதும் அவை பாடசாலையின் பொருள்கள் நுகரப்படாத இருப்புப் புத்தகத்தில் பதியப்பட வேண்டும். பெறப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை, அவை பற்றிய விபரங்கள் என்பன குறிக்கப்படல் வேண்டும். நூலகப் புத்தகங்களுக்காக நுகரப்படாத பதிவேடு ஒன்று பயன்படுத்த வேண்டும். இதனையே நுகராப் பொருட்பதிவேடு என அழைப்பர். நூலகப் புத்தகங்கள் பெறப்பட்டதும் அவை இருப்புப் புத்தகத்தில் பதியப்படுவதோடு நூலக Accession Register இலும் பதியப்பட்டு அதிபரினால் சிற்றொப்பம் இடப்பட வேண்டும். Accession பதிவேடு, கல்வி 132இன் மாதிரிப்படி தயாரிக்கப்பட்டுள்ளது. புத்தகங்களின் விபரங்களைப் பதிவு செய்வதற்காக பின்வரும் நிரல்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. Accession இலக்கம்

2. நுழைவுத் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. ஆசிரியர் பெயர்

4. நூலின் தலைப்பு

5. பதிப்பகமும் பதிப்பித்த இடமும்

6. பதிப்பித்த திகதி/பதிப்பு

7. பக்கங்களின் எண்ணிக்கை

8. விலை

9. விநியோகிப்பு இடம்

10. பதியப்பட்ட திகதி

11. ஏனைய விபரங்கள்

Accession பதிவுப் புத்தகம் இல்லாவிட்டால் மேற் கூறியவை உள்ளடக்கியதான புத்தகமொன்றைத் தயாரித்துக்கொள்ள முடியும்.

- **இலவசப் பாட நூல்களின் பொருட்பதிவேடு (INVENTORY OF FREE TEXT BOOKS):**

பாடசாலைக்கு விநியோகிக்கப்பட்ட இலவசப் பாடநூல்கள் பல்வேறு பாடங்களுக்கேற்பத் தனியாக்கப்படுகின்றன. ஒவ்வொரு தரத்துக்குமுரிய ஒவ்வொரு பாடத்துக்குமிணங்க ஒவ்வொரு புத்தகத்துக்கும் ஒரு தனிப்பக்கம் ஒழுங்குபடுத்தப்படவேண்டும். (உதாரணமாக தரம் 6 தமிழ், தரம் 7 தமிழ், தரம் 6 சிங்களம், தரம் 7 சிங்களம், தரம் 8 விஞ்ஞானம், தரம் 9 விஞ்ஞானம், என ஒவ்வொன்றுக்கும் தனிப் பக்கமொன்று வைத்தல்) இதற்கெனத் தனியாக பொது 198 புத்தகம் எடுக்கப்பட்டு புத்தகங்கள் பதிவுசெய்யப்பட வேண்டும். இலவசப் பாட நூல்கள் கிடைக்கப்பெற்றதும் "இலவசப் பாடநூல்கள் விநியோகம்" எனத் தலைப்பிடப்பட்ட பொருட் பதிவேட்டில் அவை பதியப்படல் வேண்டும். மாணவர்களிடையே இப்புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டு முடிந்ததும் இந்தப் பதிவேட்டிலிருந்து அவற்றை அகற்றக்கூடாது. பாடசாலை விநியோகப் பதிவேட்டுப் புத்தகங்களை வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் மாணவர்களிடமிருந்து, விநியோகிக்கப்பட்ட புத்தகங்கள் யாவும் மீளச் சேகரிக்கப்படல் வேண்டும். பின்பு பாடசாலை பெற்றுக்கொண்ட புதிய புத்தகங்களுடன் அவை மாணவர்க்கு விநியோகிக்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **விநியோகக் கட்டளைகள் (ISSUE ORDERS):**

பொருள்கள் விநியோகிக்கப்படும் போது, விநியோகக் கட்டளையொன்று அசலும் நகலுமாக இரண்டு பிரதிகளில் படிவம் பொது 141 விநியோகிக்கும் அதிகாரியால் தயாரிக்கப்பட வேண்டும். அசல் படிவம், விநியோகம் யாருக்குச் செய்யப்பட்டதோ அந்த அலுவலர்க்கு பொருள்களுடன் முன்வைக்கப்படல் வேண்டும். நகல் படிவத்தைத் தன்னுடன் வைத்துக்கொள்ள வேண்டும். விநியோகிக்கும் அலுவலரினால் பொருட் பண்டங்களுக்காக, தனக்குக் கிடைத்த பெறுகைக் கட்டளை, பண்டங்கள் தொடர்பாக, தான் தயாரித்து விநியோகித்த கட்டளையின் இரண்டாம் பிரதி ஆகிய இவை இரண்டும் (FR 753 (1))இன்படி இருத்தல் வேண்டும்.

- **பெறுவனவுக் கட்டளைகள் :**

பொருட் பண்டங்களைப் பெற்றுக் கொண்டதும், படிவம் பொது 219இன்படி (அசலும் நகலுமாக இரண்டில்) பெறுவனவுக் கட்டளையொன்றைப் பண்டங்களைப் பெற்றுக்கொள்ளும் அலுவலர் தயாரித்துக்கொள்ள வேண்டும். அசல், பண்டங்களை விநியோகித்த அலுவலர்க்கு முன்வைக்கப்படுவதோடு, நகல் பிரதியைத் தன்னோடு வைத்துக்கொள்ள வேண்டும். பெறுகின்ற அலுவலருக்கு பொருள்களுடன் கிடைத்த விநியோகக் கட்டளை, அப்பொருள்கள் சம்பந்தமாகத் தம்மால் தயாரிக்கப்பட்ட பெறுவனவுக் கட்டளையின் இரண்டாம் பிரதி ஆகிய இவை இரண்டிலுமே முறையே குறுக்குப்பதிவுக் குறிப்பை எழுதுதல் வேண்டும். கிடைக்கப்பெற்ற விநியோகக் கட்டளைகள் தனித்தனியாக அதனோடு தொடர்பான பெறுவனவுக்கட்டளைகளின் குறுக்குப்பதிவு இலக்கங்களின் ஒழுங்கில் பதியப்பட்டுக் கோப்புச் செய்யப்படல் வேண்டும். (FR 753 (2))

- **வவுச்சர்கள் (VOUCHERS)**

எல்லாக் கொடுப்பனவுகளுக்கும் வவுச்சர்கள் தேவைப்படுகின்றன. (FR 225). எல்லாக் கொடுப்பனவுகளுமே விதிக்கப்பட்ட படிவங்களில் சரியாகவும் முழுமையாகவும் நிரப்பப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வவுச்சர்களால் துணைபுரியப்படுகின்றன. சட்டவிதி ஒரு குறிப்பிட்ட படிவத்தை விதிக்குமேயானால் அப்படிவம் மாற்றமே இன்றி பயன்படுத்தப்பட வேண்டும். கொடுப்பனவுக்காகப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்ற வவுச்சர் படிவங்கள் வருமாறு:

சம்பளங்களுக்காக	– பொது 33 படிவம்
கூலிகளுக்காக	– பொது 36 படிவம்
மேலதிக நேரத்துக்காக	– பொது 35 (அ) படிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண கொடுப்பனவுகள், கட்டுறு, மற்றும் முற்பணக் கொடுப்பனவுகளுக்காக
– பொது 35 படிவம்

பயணச்செலவுகளின் கொடுப்பனவுகளுக்காக
– பொது 177 அல்லது பொது 178 படிவம்

- **கணக்காய்வு விசாரணைப் பதிவேடு (AUDIT QUERY REGISTER):**

நி.பி 452இன்படி எல்லாத் திணைக்களங்களிலும் அல்லது பாடசாலையிலும் கடிதங்கள் யாவும் கிடைக்கப் பெற்ற திகதிகள் கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து கிடைத்த விசாரணைகள், அவற்றுக்குப் பதில் அனுப்பப்பட்ட திகதி ஆகியவற்றைக் காட்டுகிற கணக்காய்வு விசாரணைப் பதிவேடு ஒன்று வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கணக்காய்வாளர் நாயகத்திடமிருந்து கிடைத்த விசாரணைகளின் நகல் பிரதிகள் தொடர் எண் ஒழுங்கில் அனுப்பப்பட்ட பதில் கடிதங்களின் பிரதிகளுடன் கோப்புச் செய்யப்பட வேண்டும். கொடுப்பனவொன்றில் ஒரு பிழை அல்லது குற்றச்சாட்டு, ஏற்கப்பட்டு பணம் கொடுப்பனவுக்கள் செய்ய வேண்டியேற்படும் போது பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்று, இயலுமானபோது, பதில் கடிதத்துடன் விசாரணைக்கு முன்வைக்கப்பட வேண்டும். பற்றுச்சீட்டு அனுப்பப்படவில்லையெனில், வரவின் சரியான திகதி தரப்பட வேண்டும்.
இவ்வாறு பாடசாலையொன்றில் மேற்கூறிய அடிப்படையில் நிதி ஆவணங்கள் பேணப்படவேண்டியது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அறிவோம் பகிர்வோம்

தொலைக்காட்சி அறிமுகம்

15.04.1979இல் சுயாதீனத் தொலைக்காட்சி வலையமைப்பினால் அறிமுகம் செய்யப்பட்டது.

05.06.1979இல் சுயாதீனத் தொலைக்காட்சி வலையமைப்பு, அரசுடைமையாக்கப்பட்டது.

1982இல் சுயாதீனத் தொலைக்காட்சி, தற்போதைய இடமான விக்கிரமசிங்கபுரவிற்கு இடமாற்றப்பட்டது.

1982இல் ஜப்பானிய உதவியுடன் றொறிங்டன் சதுக்கத்தில் தேசிய தொலைக்காட்சி நிலையம் அமைக்கப்பட்டது.

15.02.1982இல் ரூபவாஹினி என அழைக்கப்படும் தேசிய தொலைக்காட்சி ஒளிபரப்பு ஆரம்பிக்கப்பட்டது.

நன்றி : சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (SBTD) செயற்பாட்டின் வெற்றியில்

அதிபரின் பங்கு

திருமதி சிவசங்கரி கங்கேஸ்வரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(கல்வி அபிவிருத்தி)
வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு

மாறிக்கொண்டுவரும் உலகிற்குப் பொருத்தமான, ஆக்கபூர்வமான, சமநிலையான ஆளுமையுடைய எதிர்காலச் சந்ததியினரை உருவாக்குவது கல்வியின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைவதற்கு நடைமுறை அறிவுடன் கூடிய வினைத்திறன் மிக்க ஆசிரிய சமூகம் அவசியமென்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

கல்வியின் பண்புத்தரவிருத்தி திட்டவட்டமானதாகவும் சிறந்தமுறையிலும் நடைபெறவேண்டும் என்பது இன்றைய கல்விச் சமூகத்தினரின் எதிர்பார்க்கையாகும். இதனை நிறைவேற்றும் பிரதான இடம் வகுப்பறையேயாகும். வகுப்பறையில் மாணவர்கள் கற்பதற்காகச் சிறந்த முறையில் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு ஒழுங்கமைக்கப்பட வேண்டும். இச்செயற்பாடுகளை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்கு மையமாக விளங்குபவர்கள் ஆசிரியர்களாவர். இவர்கள் சகல துறைகளிலும் வாண்மைத்துவம் பெற்று வளம் மிக்கவர்களாகக் காணப்படல் வேண்டும். இதன்போதே மாணவர்களின் அடைவில் எதிர்பார்க்கப்படும் இலக்கை எட்டமுடியும். எனவே ஆசிரியர்களது ஆற்றலை விருத்தி செய்தல் பாடசாலையின் கடமையாகும்.

ஆசிரியர்களது ஆற்றலை விருத்தி செய்வதற்காகப் பல்வேறு செயற்றிட்டங்கள், செயலமர்வுகள், வேலைத்திட்டங்கள், பயிற்சி நெறிகள் திட்டமிடப்பட்டு பல்வேறு மட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவை பொதுவாக பாடசாலைச் செயற்பாடுகளுடனும் வகுப்பறைச் செயற்பாடுகளுடனும் நேரடியாகத் தொடர்பற்றவர்களாலும் களத்தில் நின்று செயற்படாதவர்களாலும் நடாத்தப்படுவதனால் இது ஆசிரியர்களது தேவையை அறிந்து புதிய வகிபாகங்கள், புதிய பரிமாணங்கள் என்பவற்றுக்குப் பொருத்தமாக ஆசிரியரை வளர்ச்சியடையச் செய்ய உதவுவதாக அமைவதில்லை என ஆசிரியர்களால் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

ஆசிரியரது அபிவிருத்திச் செயற்பாடு, அவரது தனிப்பட்ட ஆற்றுகையை மேம்படுத்துவதாகவும் மாணவரது ஆற்றுகைகள், திறன்கள், கற்றல் அனுபவங்களை மேம்படுத்துவதாகவும் அமைதல் வேண்டும். அதாவது ஆசிரியர் அபிவிருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைசார் நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். இதற்காகப் பாடசாலையினால் தீர்மானிக்கப்பட்ட ஒரு தொகுதி நியமங்களின் விளைவாக பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி தற்போது கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி என்பது ஆசிரியர்கள் தமது பணித் தேவைகளை விளங்கிக்கொள்வதை வளப்படுத்துவதுடன் தனிப்பட்ட சில ஆற்றுகைகளை மேம்படுத்துவதற்குமாகப் பாடசாலை மட்டத்தில் பாடசாலைச் சமூகத்தினராலேயே திட்டமிடப்பட்டுத் தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற இது, **தொடர் வாண்மை விருத்திச்** செயற்பாடாகும்.

ஆசிரியர் அபிவிருத்தியானது, பாடசாலையில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் அதேவேளை மாணவர்களின் ஆற்றுகைகள் கற்றல் அனுபவங்களை மேம்படுத்துவதுடன் ஆசியர்களின் திறன்களை விருத்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டது.

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியானது எதிர்பார்க்கப்படும் நோக்கை அடைந்து பயனுள்ளதாக அமைவதாயின் அதனை முறையாக நடைமுறைப்படுத்தல் அவசியமாகும். பாடசாலையொன்றில் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியானது வெற்றியளிக்க வேண்டுமாயின் அங்கு கூட்டுப்பொறுப்பு காணப்பட வேண்டும். அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் என ஆட்களிடையே இடைத்தொடர்பு பலமாக இருத்தல் வேண்டும்.

பாடசாலையொன்றின் தரத்தை நிலைநிறுத்தி, சிறந்த மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு மூல காரணமாக அமைபவர், அதனை முகாமை செய்யும் அதிபரே ஆவார். பாடசாலைகளின் சாதனை மட்டத்தை உயர்த்துவதற்குப் பாடசாலையின் முதல் நிலை முகாமையாளரான அதிபர்கள் முகாமைத்துவ இலக்கியங்கள் மூலமாகவும் பிறரது அனுபவங்கள் மூலமாகவும் தமது அனுபவங்களைத் தினமும் புதுப்பிப்பவர்களாகவும் விளங்குதல் இன்றியமையாததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவகையில் ஒட்டுமொத்தமான பாடசாலையின் மேம்பாட்டிற்காக இன்று பாடசாலைகளில் முன்வைக்கப்பட்டுள்ள பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியின் வெற்றியும் அதிபர்களின் கையளிலேயே தங்கியுள்ளது என்றால் மிகையாகாது.

பாடசாலையின் மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பாடசாலை மேம்பாட்டுத் திட்டமும் பாடசாலை ஆசிரியர் அபிவிருத்தித் திட்டமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை என்பதனை அதிபர் உணர்ந்துகொள்ள வேண்டும். இவை இரண்டின் வெற்றிக்கும் காரணமாக விளங்குபவர், பாடசாலைக் கல்விக் கட்டமைப்பின் முதல் நிலை முகாமையாளரான அதிபரே. இவரது செயற்பாடுகள் பின்வரும் ஒவ்வொரு படிமுறையுடனும் இணைந்திருத்தல் கட்டாயமானது.

பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திக் குழு நியமித்தல்

ஆசிரியர் மேம்பாட்டிற்காக ஒவ்வொரு பாடசாலையிலும் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திக் குழு நியமிக்கப்பட வேண்டும். இதற்காக ஆசிரியர்களை நியமிக்கும் போது பாடசாலையின் ஆசிரியர் தொகை, ஆசிரியர்களது ஈடுபாடும் செயற்றிறனும் போன்ற விடயங்களை கருத்திற் கொள்ளல் அவசியமாகும். இக்குழுவினரே ஆசிரியர் அபிவீருத்தித் திட்டத்தினை, செயற்பாடுகளை முன்னுரிமை அடிப்படையில் இனங்கண்டு தயாரிப்பவர்கள் ஆவர். நடைமுறைப்படுத்தலிலும், அறிக்கைகளைப் பேணுவதிலும் பொறுப்புமுடையவர்கள். இதற்குப் பொருத்தமான செயற்றிறனுள்ள ஆசிரியர்களை இனங்கண்டு பணிகளில் அமர்த்துவது அதிபரின் பிரதான கடமையாகும். இதிலேயே பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தியின் (SBTD) வெற்றி தங்கியுள்ளது.

ஆசிரியரது தேவைகளை இனங்காணல்

ஆசிரியரது தேவைகளைக் குறிப்பாக இனங்காண்பதற்கு பல வழிமுறைகள் உள்ளன. இதில் சுய மதிப்பீடும் ஒரு கருவியாகும். சுய மதிப்பீடு சரியாக அமையும் போது தேவை சரியாக இனங் காணப்படும். அனைத்து ஆசிரியர்களும் சுய மதிப்பீட்டில் ஈடுபடுவதை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும். இதற்கு மேலதிகமாக மதிப்பீடு, கலந்துரையாடல்கள், அவதானிப்பு, வகுப்பறை மேற் பார்வை, ஆசிரியர்கள் பயன் படுத்தும் ஆவணங்கள், வலயக் கல்வி அலுவலக, மாகாணக்கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்களது மதிப்பீட்டறிக்கைகள், வழிகாட்டற் குறிப்புகள் மூலமாகவும் ஆசிரியரது தேவைகள் இனங்காணப்பட முடியும். இதனை இனங்காண்பதில் அதிபர்கள் நுணுக்கமாகச் செயற்படுதல் வேண்டும்.

ஆசிரியர்களது பலங்கள், பலவீனங்களை அறிந்து, அவர்களது தேவைகளை இனங்கண்டு வழிகாட்டவும், கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை மேம்படச் செய்யவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பறை மேற்பார்வை அவசியமாகும். மேற்பார்வைக்குப் பொருத்தமானவர்களை நியமிப்பதுடன் இதனை ஒழுங்குபடுத்தித் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதும் அதிபரது கடமையாகும்.

ஆசிரியரது கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை அவதானிப்பதற்கு, மதிப்பிடுவதற்கு சீரான முறையில் தானும் வகுப்பறைகளுக்குச் செல்லுதல் அதிபரது பிரதான கடமையாகும். ஆசிரியர்களைச் சிறந்த முறையில் மதிப்பிட்டு சுமுகமான இடைத்தொடர்பை அவர்களுடன் ஏற்படுத்துவதன் மூலம் சிறந்த நடைமுறைகளை எடுத்துக்காட்டிப் பாராட்டுபவராகவும் குறைபாடுகளை அல்லது அபிவிருத்தி செய்யவேண்டிய விடயங்களை இனங்கண்டு அதற்குப் பொருத்தமான அபிவிருத்திச் செயற்பாடுகளை, ஆசிரியர் அபிவிருத்திச் செயற் பாட்டுக் குழுவினருடன் கலந்துரையாடித் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துபவராகவும் அதிபர் விளங்க வேண்டும். இவையனைத்தையும் செயற்படுத்தும் அதிகாரமும் உடையவர் அதிபரேயாவார்.

திட்டத்தைத் தயாரித்தலும், செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தலும்



ஆசிரியர் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான மனிதவளம், பௌதிக வளங்கள், நிதி வளங்களை இனங்காணும் பொறுப்பும் அதிபருடையதாகும். பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திக்காகப் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் நிதியை முறையாகத் திட்டமிட்டு, முன்னுரிமையடிப்படையில் செயற்பாடுகளுக்காக ஒதுக்கி, முறையானதும் வினைத்திறனுடையதுமான பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித்திட்டத்தைத் தயாரிப்பதில் குழுவினருடன் அதிபர் முழுமையாக ஈடுபடுதல் வேண்டும். இவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிக்கப்படும் திட்டமானது வெறுமனே ஓர் ஆவணமாகப் பேணுவதற்காகவன்றி செயற்படுத்தக்கூடிய வகையில் தமது பாடசாலை ஆசிரியர்களது வாண்மை விருத்திக்காக தயாரிக்கப்படுகின்றது என்பதை சகலரும் மனதிற் கொள்ளுதல் அவசியமாகும்.

இவ்வாறு தயாரிக்கப்படும் திட்டமானது நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற்பாடுகள், கால அட்டவணை, பங்குபற்றவுள்ள ஆசிரியர்கள், இனங்காணப்பட்ட வளவாளர்கள், நடைமுறைப்படுத்துவதற்கான செலவுகள் போன்றவற்றை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்டு, முறையான அனுமதி பெறப்பட வேண்டும். இத்திட்டம் பல பாடசாலைகளில் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திக் குழுவின் ஒரு சில அங்கத்தவர்களால் மாத்திரம் திட்டமிட்டுத் தயாரிக்கப்படுவதனாலும், இதனைத் தயாரிப்பதில் ஆசிரியர்களும் அக்கறையுடன் ஈடுபடுவதில்லை என்பதனாலும் அது பயனுள்ளதாக அமைவதில்லை. இச் செயற்பாட்டில் அதிபரும் முழுமனதுடன் ஈடுபட்டு, ஆசிரியர்களையும் வழிப்படுத்தி தயாரிக்கும் போது அது ஒரு வெற்றிகரமான திட்டமாக அமையும் என்பது வெளிப்படை.

தயாரிக்கப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்துவது இன்று அதிபர்களுக்குப் பாரிய சவாலாக அமைகின்றது. இதனால் பல பாடசாலைகள் திட்டத்தைத் தயாரிப்பதுடன் மட்டும் நிறுத்திக் கொள்கின்றன. ஏனெனில் இத்திட்டத்தைத் தயாரிக்கும் போது பாடசாலையிலுள்ள ஆசிரியர்களது தேவைகள் சரியாக இனங்காணப்படாமை, ஆசிரியர்களது பங்குபற்றுதலுடன் தயாரிக்கப்படாமை, ஆர்வமுடன் அவர்கள் பங்குபற்றக் கூடிய வகையில் வடிவமைக்கப்படாமை, வளங்கள் முறையாக இனங்காணப்படாமை போன்ற பல காரணங்கள் உள்ளன. எனவே இந்த ஒவ்வொரு படிமுறையிலும் அதிபரது பங்குபற்றுகையும் ஈடுபாடும் இன்றியமையாததாகும்.

கண்காணிப்பும் மதிப்பீடும்

தயாரிக்கப்படும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது அதிபரது கண்காணிப்பும் மதிப்பீடும் வழிகாட்டலும் அவசியமாகும். ஆசிரியரது பங்குபற்று தலைத் தூண்டக்கூடிய வகையில் இச்செயற்பாடுகள் அமைதல் வேண்டும். முக் கியமாக ஒவ்வொரு செயற்பாடும் எதிர்பார்த்த குறிக்கோளை அடைகின்றதா என்பதனை மதிப்பிட்டு, மீளாய்வு செய்தல் முக்கியமாகும். அதற்காக அதிபர் தன்னுடன் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திக் குழு மற்றும் பொருத்தமான நிபுணத்துவமுடைய சிரேஷ்ட ஆசிரியர்கள் என்போரை இணைத்துச் செயற்படும் போது செயற்பாடுகள் எளிதாக அமையும். மற்றும் இங்கு பெறப்படும் பினனூட்டல்களும் தகவல்களும் அடுத்த ஆண்டிற்குரிய திட்டத்தைத் திறம்படத் தயாரிப்பதற்கு உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் தமது பாட அறிவினை மேம்படுத்துவதற்காகத் தகவல் தொழில்நுட்ப வசதிகள், வலையமைப்புக்களைப் பாடசாலைகளில் ஏற்படுத்திக் கொடுப்பதும் அதிபரது பொறுப்பாகும். ஆசிரியர்கள் அவற்றைத் தாராளமாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் வசதிகளையும் செய்துகொடுத்தல் வேண்டும்.

மேலும் இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் பாட அறிவானது வகுப்பறைகளில் பயன்படுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் அவசியமாகும்.

மேற்கூறிய வகையில் தற்போது அறிமுகப் படுத்தப் பட்டுள்ள SBTDயை சிறந்த முறையில் அமுல்படுத்துவதற் காக அதற்குரிய குழுவினரை நியமித்தல், ஆசிரியரது தேவை களைப் பல்வேறு முறைகளினூடு இனங்காணல், ஆசிரியர் அபிவிருத்தி வேலைத் திட்டத்தினைத் தயாரிக்க வழிகாட்டல், நிதியைப் பெற்றுக்கொள்ளல், இனங்கண்ட தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் ஒழுங்குபடுத்தி வருடாந்தப் பாடசாலை அமுலாக்கல் திட்டத்தில் இணைத்துத் தேவையான நிதியை ஒதுக்குதல், வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தல், இச்செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்குபற்ற ஆசிரியரை ஊக்குவித்தல், தமது பாடசாலையின் விருத்திக்காகத் தாமே தயாரிக்கும்

வேலைத்திட்டத்தைக் கண்காணித்தல், மேற்பார்வை செய்தல், மதிப்பிடல், மீண்டும் மீளாய்வு செய்வதனூடாகப் புதிய செயற்பாடுகளை முன்வைத்தல் ஆகிய ஒவ்வொரு படிமுறையின் செயற்பாட்டிலும் முழு மொத்தமான பொறுப்பையும் வகை கூறலையும் கொண்டவர் அதிபரே. பல்வேறுபட்ட வேலைப்பளுக்களின் மத்தியில் இதனையும் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையுள்ளதால் இதற்காக நிபுணத்துவமும் ஆர்வமுமுடைய ஆசிரியர் குழுவையும் தன்னுடன் இணைத்துக்கொண்டு, முழுமையான ஈடுபாட்டுடன் இச்செயற்பாட்டின் முக்கியத்துவத்தை நன்குணர்ந்த வகையில் திட்டமிட்டபடி செயற்பாடுகளைத் திறம்பட வினைத்திறனுடன் ஆற்றுகையில் ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடு மிகவும் பெறுமதி வாய்ந்ததாகவும் எதிர்பார்க்கும் குறிக்கோளை அடையக்கூடியதாகவும் அமையும் என்பது திண்ணம். இதனடிப்படையில் நோக்கும் போது இத்திட்டத்தின் வெற்றி அதிபரின் கைகளிலேயே தங்கியுள்ளது என்றால் மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புக் கல்வி வலய ஆசிரியர் மத்திய நிலையச் செயற்பாடுகள் – 2015

திருமதி மாலினி சிவப்பிரகாசம்
B.A (Hons), MEd.
முகாமையாளர்
ஆசிரியர் மத்திய நிலையம்
மட்டக்களப்பு.

ஆசிரியர் வாண்மை விருத்தி அதனூடாகக் கல்வித்தர விருத்திச் செயற்பாடுகள் ஆசிரியர் மத்திய நிலையத்தினூடாக இடம்பெற்று வருகின்றன. தற்போது புதிய ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு வர்த்தமானி (24.10.2014) பிரசுரத்திற்கு அமைவாக ஆசிரியர் வினைத்திறன் தடை தாண்டலுக்கான மொடியுள் செயலமர்வுகளைக் கல்வி அமைச்சு ஆசிரியர் மத்திய நிலையங்களினூடாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த வகையில் தரம் 3-I இலிருந்து தரம் 2-II இற்கு உள்வாங்கப்படுவதற்கு மொடியுள் இலக்கம் 1-7 வரையிலான விடயங்கள் மொத்தமாக 96 மணித்தியாலங்கள் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். இவற்றில் மொடியுள் இலக்கம் 3 வகுப்பறை முகமைத்துவமும் மாணவர்களை இனங்காணலும் என்ற தலைப்பில் தேசிய ரீதியில் 29.10.2015, 30.10.2015, 31.10.2015 ஆகிய மூன்று தினங்களில் சகல ஆசிரிய மத்திய நிலையங்களிலும் இடம்பெற்றது. முதல் இரு நாள்களிலும் செயலமர்வு இடம் பெற்று மூன்றாம் நாள் மதிப்பீடு இடம்பெற்று ஆசிரியர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மட்டக்களப்புக் கல்வி ஆசிரியர் மத்திய நிலையத்தின் முகாமையாளரால் ஒழுங்கமைக் கப்பட்ட இந்நிகழ்ச்சியில் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.K.பாஸ்கரன் அவர்களின் தலைமையில் தேசிய கல்விக் கல்லூரி பீடாதிபதி திரு.S.இராஜேந்திரம் பிரதம அதிதியாகவும் திரு.A.S.யோகராஜா கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர். வளவாளர்களாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) திரு.S.சசீந்திர சிவகுமார், மட்/புதூர் விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் திரு.T அருமத்துரை, ஆசிரியர மத்திய நிலைய முகாமையாளர் திருமதி மாலினி சிவப்பிரகாசம், ஆசிரிய மத்திய நிலைய வளவாளர் திருமதி ரா.ஞானரெட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர். இச்செயலமர்வில் 39 அசிரியர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இறுதி நாள், சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.S.மனோகரன், வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.K.பாஸ்கரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்) திரு.P.கோவிந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் செயலமர்வுச் செயற்பாடுகளின் சில காட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய மத்திய நிலையச் செயற்பாடுகள்

திகதி	விடயம்	ஆசிரியர்கள் விபரம்	வளவாளர்கள்
28.11.2015	வெற்றிகரமான ஆசிரியர் செயற்பாட்டிற்குத் திட்டமிடல்	முதன்மை நிலை ஆசிரியர்கள் 25 பேர்	திரு.A.ரவீந்திரன் (விரிவுரையாளர், மட்/அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை) திருமதி மாலினி சிவப்பிரகாசம் (ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்)
07.12.2015	மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கான உளவளத் தலையீடு	ஆலோசனைச் சேவை வழங்கும் ஆசிரியர்கள் 25 பேர்	திரு.G.கிருஸ்ணமூரத்தி சேவைக்கால ஆலோசகர் (வழிகாட்டலும் ஆலோசனையும்) திரு.A. ஜெயநாதன் (தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்) திரு.V. மணிராஜ் (தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்)
12.12.2015	புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தி	பட்டதாரி ஆசிரியர் 25 பேர்	திரு.S. மனோகரன் (மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்) திருமதி மாலினி சிவப்பிரகாசம் (ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்)
17.12.2015	வகுப்பறை மதிப்பீட்டுச் செயற்பட்டில் புளூமின் கோட்பாட்டை பயன்படுத்தல்	தமிழ்ப் பாட ஆசிரியர்கள் 25 பேர்	திரு.M. பவளகாந்தன் தொழிநுட்ப ஆலோசகர் - GIZ திரு.த. யுவராஜன் உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)
18.12.2015	வகுப்பறை மதிப்பீட்டுச் செயற்பட்டில் புளூமின் கோட்பாட்டை பயன்படுத்தல்	விஞ்ஞான பாட ஆசிரியர்கள் 25பேர்	திரு.M. பவளகாந்தன் தொழிநுட்ப ஆலோசகர் - GIZ திருமதி மாலினி சிவப்பிரகாசம் (ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச திணைக்கள தாபனவேலை அலுவலகமுறைமை, நிதி முறைமை சிலவற்றைத்

தெரிந்துகொள்வோமா?

N. நந்தன்
(தொழினுட்ப உத்தியோகத்தர்)
வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு.

பதவியில் உறுதிப்படுத்தல் (Confirmation of Post)
(தாபன விதிக்கோவை அத்தியாயம் II)

நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகாண் கால எல்லை வரை எதிர்பார்த்த தகைமைகளைப் பூர்த்திசெய்தல் வேண்டும். தகுதிகாண் கால முடிவில், பெற வேண்டிய தகுதியினைப் பெறாது இருப்பின், தகுதிகாண் கால எல்லையை நீடிப்பதற்குத் திணைக்களத் தலைவர் சிபாரசு செய்யலாம்.

பதவியில் உறுதிப்படுத்த திருப்தி காணப்பட வேண்டிய விடயங்கள்

உடல் நலம் - மருத்துவ அறிக்கை
வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – சித்தியடைதல்
தேவையான வேறு பரீட்சை – சித்தியடைதல்
வினைத்திறமையுடன் சேவையாற்றல்
வரவு, சேவை, நன்னடத்தை – திருப்தி

நியமனத்தை முற்திகதியிடல் (Ante Dating of Appointment)
ஏற்கனவே வழங்கப்பட வேண்டிய நியமனம் ஒன்றிற்கு நியமனத் திகதியை முன்கூட்டிய திகதியில் நிர்ணயித்தல்.

- Ø *குறிப்பட்ட திகதியில் இப்பதவியில் வெற்றிடம் இருத்தல் வேண்டும்.*
- Ø *குறித்த அத்திகதியில் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைவாக தேவையான சகல தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.*
- Ø *குறித்த அத்திகதியிலிருந்து தொடர்ந்து அப்பதவிக்குரிய கடமைகளைப் புரிந்திருத்தல் வேண்டும்.*
- Ø *அவருக்கு முன் சமனான இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட இன்னொருவரது முதுமுறையைப் பாதிக்காதிருத்தலை உறுதிப்படுத்த வேண்டும்*

மீள் நியமனம் (Re Employment)
அரச பதவியொன்றிலிருந்து இளைப்பாறிய அல்லது பதவியை விட்டு விலகிக் கொண்ட ஒருவர் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்குப் புறம்பான முறையில் மீளவும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Ø மீள் நியமனக் கடிதம் வழங்கப்படும்
- Ø மீள் நியமனம் பொதுவாக 1 வருடம் அல்லது 6 மாதங்களாக இருக்கலாம். மீண்டும் புதுப்பிக்கப்படலாம்
- Ø முன்னர் அவரது சேவையும் நடத்தையும் திருப்திகரமாக இருத்தல் வேண்டும்
- Ø குறிப்பிட்ட பதவியில் வெற்றிடம் இருத்தல் வேண்டும்
- Ø 60 வயதுக்கு உட்பட்டவராயின் ஓய்வூதியம் உறைநிலையில் வைக்கப்பட்டு மீள்நியமனச் சம்பளம் வழங்கப்படும்
- Ø 60 வயதுக்கு மேற்பட்டவராயின் சம்பளத்துடன் ஓய்வூதியமும் வழங்கப்படுகின்றது
- Ø மீள்நியமனம் பெற்றவருக்கு விடுமுறைச்சலுகையும் புகைவண்டி ஆணைச்சீட்டுச் சலுகையும் உண்டு
- Ø ஆனால் அரச விடுதியில் வசித்தல் முடியாது
- Ø மருத்துவக் காரணங்களுக்காக இளைப்பாறியிருந்தால் மீண்டும் மருத்துவ சபை ஒன்றிற்குத் தோற்றி "உடல் நலமுடையவர்" என உறுதிப்படுத்தல் வேண்டும்.
- Ø திறமையின்மைக்காக இளைப்பாறிய ஒருவர் மீள்நியமனம் செய்யப் படலாகாது

மேலதிக நேரம் **(Overtime)** *(தாபன விதிக்கோவை அத்தியாயம் VIII)*

- Ø கடமை நேரத்துக்குப் புறம்பாக வேலை செய்தல்.
- Ø வேறு வழிகளில் வேலையைச் செய்து முடித்துக் கொள்ள இயலாத சந்தர்ப்பங்களின் பொருட்டும் விசேட வேலையின் பொருட்டும் விசேட கட்டளைகள் பிறப்பிக்கப்படும் போதும் மேலதிக நேரக் கொடுப்பனவு அனுமதிக்கப்படுகின்றது.

மேலதிக நேரக் கொடுப்பனவிற்கு அருகதையற்றோர்.

- Ø பதவிநிலை அலுவலர், வெளிக்கள அலுவலர், பகுதிநேர பணியாளர், படையினர்.
- Ø திறப்புக்கடமை புரியும் சிற்றூழியர் தவிர ஏனையோருக்குக் காலையில் அலுவலக நேரத்துக்கு முன்பாக மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை
- Ø காலையில் தாமதமாக வருகை தந்திருந்தால் தாமதத்தை ஈடுசெய்த பின்பே மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படும்.
- Ø 30 நிமிடங்களுக்குக் குறைவாயின் கொடுப்பனவு இல்லை.
- Ø மாதச் சம்பளத்தின் 1/240 பங்கே ஒரு மணி நேரத்திற்காக வழங்கப்படுகின்றது. விசேட சந்தர்ப்பங்களில் வீதம் மாற்றப்படுவது உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாதமும் செய்யப்படவுள்ள வேலை மீளாய்வு செய்யப்பட்டு அனுமதி பெறப்படவேண்டும்.

கடன்கள் முற்பணங்கள் Loans / Addvance
(தாபன விதிக்கோவை அத்தியாயம் VXXIV)

- Ø *வட்டியில்லா முற்பணம் - விழா முற்பணம் : சகல நிரந்தர, தற்காலிக, அமைய பணியாளர்கள் 10 தவணைகளில் அறவிடல். ஒரு வருடத்திற்கு ஒரு தடவை.*
- Ø *வெள்ள நிவாரண முற்பணம்*
- Ø *வட்டியுள்ள முற்பணம் - விசேட முற்பணம் : பிள்ளைகளுக்கான புத்தகங்கள் வாங்குவதற்காக வழங்கப்படுகின்றது. வருட தொடக்கத்தில் மாசி 28 ஆந் திகதிக்கு முன்னர் கொடுக்கப்படல் வேண்டும். அதே வருடத்தினுள் அறவிடப்படுதல் வேண்டும். புதவிநிலை உத்தியோகத்தோர் பெற முடியாது.*
- Ø *சம்பள கடன்கள் - இடர் கடன் - 10 மாதச் சம்பளத்தொகை வழங்கப்படும். வைத்திய செலவு, வீட்டு வாடகை நிலுவை, குடும்ப அங்கத்தவர் ஒருவரின் மரணச் செலவுக்காக, வாகன அவசர திருத்த வேலை, நுளம்பு வலை வாங்குதல், முழுச் சம்பளத்துடன் வெளிநாட்டுப் பிரயாணம் மேற்கொள்ள ஏற்படும் போக்குவரத்துச் செலவுக்காக. கொம்பியூட்டர் கொள்வனவு,*
- Ø *5 வருடத்துக்கு மேல் சேவையாற்றி இருத்தல் வேண்டும். நிரந்தர, ஓய்வூதியம் பெறத்தகுதியானோர்.*
- Ø *துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், மோட்டார் வாகனம், கடன்*
- Ø *காணி கொள்வனவு அல்லது வீடு கட்டக் கடன், கடன் இடர் தணிக்கக் கடன்.*

பதவி விலகல் Resignation *(தாபன விதிக்கோவை அத்தியாயம் எ பிரிவு 4)*

- Ø *தாம் விரும்பிய போது பதவி விலக உரிமை இருப்பினும் நியமனத்தின் போது செய்யப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய இருத்தல் வேண்டும்*
- Ø *பதவி விலகல் ஏற்றுக் கொள்ளப்பட்டால் மீளப் பெற முடியாது*
- Ø *பதவி விலகல் ஏற்றுக்கொள்ளப்பட்டால் ஓய்வூதியத் தகைமையை இழப்பார்.*
- Ø *மீண்டும் அரச சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டால் முன்னைய சேவைக்காலம் கணக்கெடுக்கப்படுவதில்லை*

பதவி விலகல் ஏற்றுக்கொள்ளாது விடப்படும் காரணங்கள்

- Ø *ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் பொழுது*
- Ø *அரசுக்குச் சேர வேண்டிய பணத்தொகையை அல்லது நட்ட ஈட்டைச் செலுத்த மறுக்கும் சந்தர்ப்பம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின விழா
மட்/ மகாஜன கல்லூரி
23.12.2015

சர்வதேச எழுத்தறிவு தினம்
மட்/ கிரான்குளம் விநாயகர் ம.வி.
14.09.2015

முறைசாராக் கல்விப் பிரிவின் கைத்திறன் ஆக்கப்பொருட் கண்காட்சி
மட்/ மகாஜன கல்லூரி,
06.12.2015

தமிழ்ப் பாட ஆசிரியர்களுக்கான புளுமின் பகுப்பாய்வியல் செயலமர்வு
ஆசிரியர் மத்திய நிலையம், மட்டக்களப்பு.
17.12.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org